# அருவியூர் நகரத்தார் குரல்

ஆண்டு 24 - 150

சார்வாரி - ஐப்பசி

திங்கள் இரண்டுக்கு ஒன்று

கல்வி பண்பாடு வளர்ச்சி இதழ்

நவம்பர்-2020


அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர்

சிறுகுடி திரு. க.அ.அ.செ. ஆசை அலங்காரம் - கண்ணகி இல்லத்

## திருமண விழா



150 வது சிறப்பிதழ்

மணமக்கள்: ஆ. சபரி அலங்கார் B.E., - தி. அன்புபிரியாள் (எ) யுவராணி B.E.,

மணநாள்: 28.08.2020 வெள்ளிக்கிழமை


வெளியீடு

அருவியூர் வடக்குவளவு நகரத்தார்

கல்வி வளர்ச்சிக் கழகம் (பதிவு)

பிரான்மலை



**Guruji.S.RAJAKUMAR**
Business Consultants
Devotional Advisor
+91 944 348 0007

#7, LIGHT HOUSE COMPLEX,
FOUR ROADS, SALEM - 636 009.
CELL : 98427 10545, 93677 10545

3A SANNITHANAM, P54 'VISAKA',
6TH AVENUE, ANNA NAGAR,
CHENNAI - 600 040.
Cell : 93600 10545

WOODLAND CIRCLE,
5, RAJA RAM MOHAN ROY ROAD,
RICHMOND CIRCLE,
BENGALURU - 560 025.
CELL : 90350 10545

**MAHILVITHU MAHIL®**
**MAHA SANNITHANAM**

gurusaranam5@gmail.com www.mahilvithumahil.com Google Play: Mahilvithu Mahil

RK.KANE MOZHI

**My DRESS CODE™**
Just different. More unique..

**SILK SAREES** **FANCY SAREES** **CHUDIDHAR** **TOPS**

mydresscodeslm@gmail.com /mydresscodeslm

**My DESIGN STUDIO™**
boutique style stitching

"We undertaking All type of Stitching Work"

❖ Aari Work ❖ Designer Blouse ❖ Customized Stitching

#221, SURYA NIVASS, MAIN ROAD,
OPP. JAIN TEMPLE,
SHANKAR NAGAR, SALEM - 636 007.

Mob. : 98428 10545
83003 10545

உ

நமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியே எமது தலையாய குறிக்கோள்

உதவுவோம்! பண்படுத்துவோம்! பாராட்டுவோம்!

**பட்டம் பெற்றுத் தொழிலிற் சிறப்போம்!**

# அருவியூர் நகரத்தார் குரல்



அலைபேசி : 63744 59670

**ஆண்டு 24**
**வெளியீடு 150**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து - குறள் 398

**நவம்பர் 2020**
**சார்வரி-ஐப்பசி**



**கழக நிர்வாகிகள்**

| | |
|---|---|
| செ. ஆசை அலங்காரம் | - 96294 67287 |
| சுப. செல்வம் | - 94444 68900 |
| சே. சந்திரசேகர் | - 98404 39115 |

**நிர்வாகக் குழு**

**இணைத் தலைவர்கள்**

| | |
|---|---|
| ஏ.பி. ஸேதுராமன் | - 98422 89705 |
| சொ. இராமனாதன் | - 97155 100 0179 |

**துணைத் தலைவர்**

| | |
|---|---|
| பொன். சிவஞானம் | - 94867 29485 |

**உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| செந்தில் செல்வம் | - 99941 61123 |
| பெ. சிவன்ஜோதி | - 99446 90206 |
| சி. அருணாசலம் | - 98421 16732 |
| மா. சாமிநாதன் | - 98430 84455 |

**சிறப்பு அழைப்பாளர்**

குரல் பதிப்பாசிரியர்

**உள் தணிக்கையாளர் :** சு. நித்யலங்காரம் ACA

**Website Manager :** நா. ஜெயராமன் B.Com., FCA

**Website :** avnkalvi.blogspot.com

**குரல் ஆண்டு சந்தா : ரூ. 100/-**
**குரல் ஆயுள் சந்தா : ரூ. 1500/-**

**குரல் நிறுவிய ஆசிரியர்**

திரு.சொ. வைத்திலிங்கம்

தொடக்கம் : 1997

**கௌரவ ஆசிரியர்**

திரு. ம. மாணிக்கம் செட்டியார்
தலைவர் அவந பொதுநலச்சங்கம்

**சிறப்பு ஆலோசகர்**

புலவர் திரு. மலை. சோமசுந்தரம், பி.லிட்.

**ஆசிரியர் குழு**

திரு. சுப. செல்வம், சென்னை
திரு. மா. சேதுராமன் - மணப்பாறை
மற்றும் கழக நிர்வாகிகள்

திரு. சுப. செல்வம் - 94444 68900



கடிதம், செய்திகள், படைப்புகள் இவற்றை
அனுப்ப வேண்டிய முகவரி :
அருவியூர் நகரத்தார் குரல்,
அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்,
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளெக்ஸ் பின்புறம்,
பொன்னமராவதி,
புதுக்கோட்டை - 622 407.
avnkalvi@gmail.com
suryaprint1998@gmail.com





**குரல் வாசகர்களுக்கு**

**இனிய தீப ஒளி திருநாள்**

**நல்வாழ்த்துக்கள்**

ஆசிரியர் குழு

# உள்ளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலைவர் பக்கம் | 3 |
| 2. | கழக அறிவிப்புகள் | 6 |
| 3. | 150-வது சிறப்பிதழ் வாழ்த்துரை | 9-14 |
| 4. | திருத்தொண்டர் பெருமை | 15 |
| 5. | இலவச திருமண தகவல் மையம் | 21 |
| 6. | தமிழின் சுவை | 23 |
| 7. | க.வ.கழக செயல்பாடுகளும் உங்களின் பங்கும் | 25 |
| 8. | சாதனையாளர் பக்கம் | 27 |
| 9. | சங்க செய்திகள் | 29-35 |
| 10. | புத்தகம் வாசிப்பதின் பயன்கள் | 37 |
| 11. | கோயில்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள் | 38 |
| 12. | அட்டைப்பட விளக்கம் | 41 |
| 13. | புதுமண தம்பதிகள் | 45 |
| 14. | புதிய கல்விக்காவலர்கள் | 47 |
| 15. | வாழ்க்கையே கணக்கு | 48 |
| 16. | சிவபாதம் அடைந்தார் | 50 |
| 17. | கர்மவினை | 53 |
| 18. | கல்விக்காவலர்கள் | 56 |
| 19. | மௌனம் | 59 |
| 20. | வாசகர்கள் கடிதம் | 62 |
| 21. | குறுக்கெழுத்துப் போட்டி | 64 |
| 22. | பால் ஒரு உணவா? | 66 |
| 23. | ஓர் அன்பு வேண்டுகோள் | 70 |
| 24. | சித்தரத்தையின் பயன்கள் | 71 |
| 25. | பெரும் நன்கொடையாளர்கள் | 74 |
| 26. | உலக உணவு நாள் கவிதை | 75 |
| 27. | அதிசயக்கோயில்கள்- ஸ்ரீவாஞ்சியம் | 76 |
| 28. | ஓய்வு | 78 |

தலைவர் சிந்தனை



**செ. ஆசை அலங்காரம்** B.Sc.,
தலைவர்

## நகரத்தார் குரல்
# 150வது இதழ்

நகரத்தார் குரல் 1997-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 150-வது இதழாக மலர்ந்து தங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் மகிழ்ச்சியான இந்த வேளையில், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இதழின் மூலம் நம் சமுதாயப் பெரியவர்கள், பெண்கள், மாணவர்கள் என அனைத்து தரப்பினரையும் சந்திப்பதில் பேரானந்தமும், பெருமகிழ்ச்சியும் அடைகிறேன். நம் நகரத்தார்களின் வரலாற்றில் இந்த இதழ் சரித்திரம் படைக்கும் என்பது திண்ணம்.

மண்வளம், மலைவளம், நீர்வளம், நிலவளம் என வளம் செறிந்த பாண்டிய நாட்டில் தெய்வ மணம் கமழும் மூன்று குடவறைக் கோயில்கள் உள்ளன. 1) பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் திருக்கோயில் 2) தெய்வானையை மணம் புரிந்த முருகப் பெருமானின் முதல் படைவீடான திருப்பரங்குன்றம் 3) நம் இறைவனும் இறைவியும் அம்மை அப்பனாக அருள்மிகு மங்கைபாகர்-தேனம்மை என்கிற திருநாமத்தோடு மணக்கோலத்தில் காட்சி தந்து அருள்புரியும் திருத்தலமாகிய பிரான்மலை. கோபுரம், மூலவர், கருவறை, அர்த்த மண்டபம் என நான்கையும் ஒரே பாறாங்கல்லைக் குடைந்து செதுக்கி உருவாக்கப்பட்ட சிறப்பு இந்த மூன்று கோயில்களுக்கும் உண்டு. இத்திருத்தலம் மூன்றும் முக்கோண வடிவ இடைவெளியில் நம் நகரத்தார் வசிக்கும் பகுதியில், நகரத்தார்களின் பராமரிப்பில் இருந்து வருவதும் ஒரு விசேஷமாகும்.

குறிஞ்சி மலர் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் அபூர்வமான அதிசயப் பூ. இந்த அபூர்வமான அதிசயப் பூ போன்று 23 ஆண்டுகளுக்கு முன்பு (1997) தெய்வ மணம் கமழும் தென்கயிலாயம் எனப் போற்றப்படும் பறம்புமலையில் மணக்கோலத்தில் காட்சி தரும் மங்கைபாகர் - தேனம்மை திருக்கோவில் அமைந்திருக்கும் திருத்தலத்தில் நகரத்தார் குரலாய் மலர்ந்தது. மரியாதைக்குரிய திரு சொ. வைத்திலிங்கம் அவர்கள் தலைமையில் ஆசிரியர் குழுவினரின் உதவியோடு தயாரிக்கப்பட்ட நகரத்தார் குரலின் முதல் இதழை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்கள். இப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி, குரல் தயாரிக்க உதவிய ஆலோசகர், ஆசிரியர் குழு மற்றும் அழகுற அச்சிட்டு வெளியிட உதவிய அன்புத்தம்பி திரு சொ. முருகேசன் ஆகியோருக்கும் நன்றியையும், பாராட்டுகளையும் என் சார்பிலும், கல்வி வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதன் பின்னர் தொடர்ந்து ஐந்து ஆண்டு காலம் இக்குழுவினர், குரல் நிறுவன ஆசிரியர் தலைமையில், குரல் தயாரித்து வெளியிடும் பணியை சிறப்பாகச் செய்து வந்தனர். அதற்குப் பின் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்களாக பொறுப்பேற்றுக் கொண்ட தலைவர்கள் குரல் ஆசிரியர் பணியை ஏற்றுக் கொண்டு கால மாற்றத்திற்கேற்ப புதுமைகளைப் புகுத்தி வண்ணக் கலரில் குரலை வெளியிட்டு சிறப்புடன் செயல்பட்டனர். சிறப்பாக செயலாற்றிய அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர்கள் அனைவரின் செயல் திறனை எண்ணி மகிழ்ந்து பாராட்டி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கணிணி மயமான இன்றைய உலகின் தேவைக்கேற்ப பல மாற்றங்களை - புதுமைகளைப் புகுத்தி, குரலுக்கு மேலும் மெருகூட்டி, பயனுள்ளதாக மாற்றி அமைத்து குரலுக்கு பெருமையையும், வாசகர்களுக்கு ஆர்வத்தையும் தூண்டும் விதமாக குரலை வடிவமைத்து வெளியிட்டு, சமுதாய நலன் ஒன்றையே பெரிதாகக் கருதி, தன்னலம் கருதாது செயல்பட்டு வந்த குரல் பதிப்பாசிரியர், தியாகச் செம்மல், தெய்வத்திரு சுப. துரைராசு அவர்களின் சேவையையும் போற்றி நன்றி பாராட்டுகிறேன்.

குரலைத் தொடர்ந்து தயாரித்து வெளியிடவும், குரல் மென்மேலும் வளர்ச்சியடையவும், பொருளும், பல படைப்புகளும், விளம்பரங்களும் தேவை. குரல் வளர்ச்சி நிதிக்கு நன்கொடை வழங்கிய வள்ளல் பெருமக்களுக்கும், விளம்பரங்கள் தந்து உதவிய வணிகப் பெருமக்களுக்கும், நல்ல பல படைப்புகளை வழங்கி குரல் சிறப்பாக அமைய உதவிய படைப்பாளிகள், கவிஞர்கள் ஆகியோருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை கல்வி வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வி வளர்ச்சிக் கழகத்தின் செயலாளர் பொறுப்போடு, குரல் பதிப்பாசிரியர் பொறுப்பையும் ஏற்று, சிறப்பாக செயலாற்றி வரும் செயல்வீரர், திரு சுப. செல்வம் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த 150-வது இதழில் எனது இல்லத் திருமண விழா படங்கள் மற்றும் செய்திகளை பதிவு செய்து வெளியிட, அருள்மிகு மங்கைபாகர்-தேனம்மை அருளால் கிடைத்த வாய்ப்பை பெரும் பாக்கியமாகக் கருதி இறைவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இரண்டு திங்களுக்கு ஒரு முறை மலரும் நகரத்தார் குரல் இனி மாத வெளியீடாக மலர்ந்து வளர வேண்டும் என விரும்புகிறேன். அதற்கு நகரத்தார்கள், படைப்பாளிகள், வணிகப் பெருமக்கள், வாசகர்கள் என அனைவரும் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நகரத்தார் குரல் நமது சமுதாய மக்கள் மட்டுமின்றி, பிற சமுதாய மக்களும் விரும்பி படிக்கும் அளவிற்கு, மனித சமுதாயத்திற்குப் பயனுள்ள பல செய்திகளை வெளியிட்டு வளர்ந்து வருகிறது.

இன்றைய செய்தி - நாளைய வரலாறு என்பதால் பயனுள்ள உண்மைச் செய்திகளை இதழுக்கு அளிக்க படைப்பாளிகளை வேண்டி நிறைவு செய்கின்றேன்.



# கழக அறிவிப்புகள் நவம்பர் 2020

## 1. தேர்வு / சாதனை பற்றிய விவரங்கள் :

நமது மாணவச் செல்வங்களின் சாதனை, பல்கலைக் கழக அளவில் ரேங்க், பத்தாம் வகுப்பு படிக்கும் போதே ஹிந்தியில் B.A. பட்டம் பெறுதல், இவ்வாறு தங்கள் குழந்தைகளின் சாதனைகளை படித்து முடித்த, அந்தக் கல்வி ஆண்டிற்குள் கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு ஆதாரங்களுடன் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். இவ்வாறு உரிய சமயத்தில் கிடைக்கப் பெற்றவை மட்டுமே பரிசளிப்பு விழாவில் பரிசு பெறத் தகுதி உடையவை ஆகும்.

## 2. தனித் திறன் மாணவர்கட்கு நிதி உதவி :

மாணவர்களது தனித் திறமையை வளர்த்திட ஊக்குவிக்கும் வகையில் கல்வி வளர்ச்சிக் கழகம் சார்பில் இரண்டு மாணவர்களுக்கு நிதி உதவி செய்து வருகின்றோம். தகுதியுள்ள மாணவர்கள் தங்களது தனித்திறன் மற்றும் அதில் இதுவரை செய்துள்ள சாதனை விவரங்களுடன் கல்வி வளர்ச்சிக் கழகத்தைத் தொடர்பு கொள்ள வேண்டுகின்றோம்

## 3. நகரத்தார் குரல் சந்தா 2021 :

நமது நகரத்தார் குரலின் 2021-ஆம் ஆண்டு சந்தா தொகை ரூ.100/- டிசம்பர் முதல் வாரத்தில் கட்ட வேண்டும். அனைத்து ஊர் சங்கத் தலைவர் / செய்தித் தொடர்பாளருக்கு சந்தா ரசீது புத்தகம் விரைவில் அனுப்ப ஏற்பாடு செய்து வருகின்றோம். வாசகர்கள் தங்கள் ஊர் சங்கத் தலைவர் / செய்தித் தொடர்பாளர்களிடம் சந்தா தொகையைச் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவும். தங்கள் முகவரியில் மாற்றம் இருந்தால் சந்தா வசூலிப்பவர்களிடம் தெரிவிக்கவும்.

குரல் செய்தித் தொடர்பாளர்கள் இல்லாத ஊர்களில் வசிக்கும் வாசகர்கள் தங்களுடைய சந்தா தொகையை நேரடியாக கீழே உள்ள கல்வி வளர்ச்சிக் கழக வங்கி கணக்கில் செலுத்தி பிறகு தகவல் தர வேண்டுகிறோம்.

## 4. பணம் அனுப்ப வங்கி கணக்கு விவரங்கள் :

குரல் சந்தாவிற்காக பணம் அனுப்புவதற்கு தேவையான வங்கி கணக்கு விவரங்களைக் கீழே கொடுத்துள்ளோம்.

| | | |
|---|---|---|
| வங்கியின் பெயர் | : | இந்தியன் வங்கி, புதுப்பட்டி கிளை |
| கணக்கு பெயர் | : | AVN கல்வி வளர்ச்சிக் கழகம் |
| சேமிப்பு கணக்கு எண் | : | 5748 35323 |
| IFSC Code | : | IDIB 000P052 |

பணம் கட்டிய ரசீதின் பாதிப்பகுதியை (Counter Foil) போட்டோ எடுத்து வாட்ஸ் அப் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். WhatsApp. No. 94444 68900

## 5. குரல் விளம்பரக் கட்டணம் 2021 :

2021-ஆம் ஆண்டிற்கு ஆறு இதழ்களில் நமது சமூகத்தவர்கள், வியாபாரிகள் மற்றும் நற் சிந்தனையாளர்கள் அரைப்பக்கம் / முழுப்பக்கம் விளம்பரங்கள் கொடுத்து குரல் வளர்ச்சிக்கு உதவிட வேண்டுகிறோம்.

### விளம்பரத்திற்கு ஓர் ஆண்டுக் கட்டணம் :

1. கருப்பு வெள்ளை ஒரு பக்கம் - ஆறு இதழ்கள் - ரூ.3200/-
2. கருப்பு வெள்ளை அரைப் பக்கம்- ஆறு இதழ்கள்-ரூ. 1600/-
3. குரல் முன் அட்டை உட்புறம் / பின் அட்டை உட்புறம் ரூ. 8500/-
4. பின் அட்டை முக்கால் பக்கம் கலர் - ரூ. 8500/-

**குரல் தனிச் செய்தி கட்டணம் (ஒரு இதழ் மட்டும்)**

1. கருப்பு வெள்ளை - ஒரு பக்கம் - ரூ.1200/-
2. கருப்பு வெள்ளை - அரை பக்கம் -ரூ.600/-
3. ஒரு பக்கம் கலர் - ரூ.2500/-
4. முன் அட்டை கலர் - ரூ.5000/-

## 6. குரலுக்கு கருத்துக்கள் எழுதுவோர் கவனத்திற்கு :

நகரத்தார் குரலைப் படித்து தங்களது கருத்துக்களை வாசகர் குரல் பகுதிக்கு எழுதி அனுப்பும் போது தங்களது முழுப்பெயர், விலாசம், செல் நம்பர் இவற்றைக் குறிப்பிட்டால் மட்டுமே வாசகர் குரல் பகுதிக்கு ஏற்றுக் கொள்ளப்படும். **வாசகர் கடிதங்கள் குரல் வெளியாகி ஒரு மாதத்திற்குள் எங்களுக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.**

**7. குரலுக்கு படைப்புகள் அனுப்புவோர் கவனத்திற்கு:**

நமது குரலுக்கு அனுப்பும் கட்டுரை, செய்திகள், பொன்மொழிகள் இவைகளைத் தனியாக ஒரு பேப்பரில், தன் சொந்தக் கையெழுத்தில் எழுதி, எழுதியவர் பெயர், பெற்றோர் பெயர், விலாசம், செல் நம்பர் இவைகளைக் குறிப்பிட்டு அனுப்பவும். மேற்குறிப்பிட்ட விவரங்கள் இல்லாதவை பிரசுரத்திற்கு ஏற்புடையது அல்ல என்பதை அறியவும்.

**8. கல்வி வளர்ச்சிக் கழக வாட்ஸ்அப் குரூப் :**

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தகவல்களை அறிந்து பயன்பெற, கல்வி வளர்ச்சிக் கழக வாட்ஸ்அப் குரூப்பில் இந்நாள்வரை தங்களை இணைத்துக் கொள்ளாத டிப்ளமா/பட்டப்படிப்பு இறுதி ஆண்டு படிப்பவர்கள், படித்து முடித்து வேலை தேடுபவர்கள் தங்களது வாட்ஸ்அப் நம்பரை 94444 68900 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். **– சுப. செல்வம், செயலாளர்.**

உ
சிவமயம்

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி வைந்துமமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே

திருஞான சம்பந்தர் அருளிய
திருக்கொடுங்குன்ற பதிகம்

குரல் சிறக்க வாழ்த்துக்கள்

**அன்புமணி மெடிக்கல்**

**சின்னக்கடை வீதி, 260, அண்ணாசாலை,**
**பொன்.புதுப்பட்டி, பொன்னமராவதி.**
**போன் : 04333 260285, செல் : 94423 58165**

# 150வது இதழ்
# சிறப்பு வாழ்த்துரை



**குரல் நிறுவனர் : திரு. சொ. வைத்திலிங்கம், மதுரை.**

அருவியூர் நகரத்தார் குரல் நவம்பர் 2020-ஆம் மாத இதழ் 150-வது இதழாக மலர்ந்திருப்பது கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!

இந்த நேரத்தில் எனக்குப் பழைய நினைவுகள் எழ, அதன் காரணமாய் குரல் (குரல் என்று வருவதை அருவியூர் நகரத்தார் குரல் என்று எடுத்துக் கொள்ளவும்) சம்பந்தப்பட்ட தொடக்ககால நிகழ்வுகள் பற்றிய செய்திகளைக் குரல் வாசக அன்பர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் அரசுப் பணியில் இருந்த போதே நமது சமுதாயத்துக்காக இப்படி ஒரு இதழ் யாராவது தொடங்க மாட்டார்களா என்று நினைத்ததுண்டு. இதை நானே தொடங்க ஒரு வாய்ப்பு வரும் என எண்ணாத நிலையில் ஒரு எதிர்பாராத வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

நான் 1994 ஏப்ரலில் அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றேன். 28.04.1996-இல் நான் திரு M.T. காந்தி அண்ணன் & திரு ம.தி.சி. மணிக்காளை அம்மான் ஆகியோரின் வற்புறுத்தலின் பேரில் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்க நேரிட்டது. அந்த நேரத்தில் 'குரல்' தொடங்க ஒரு நல்ல நேரம் அமைந்ததாய் உணர்ந்தேன்.

11.08.1996-இல் அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் குரல் தொடங்க ஒப்புதல் பெறப்பட்டது.

05-01-1997-இல் பொன்னமராவதி மங்கை நாயகர் மன்றத்தில் நிகழ்ந்த குரல் தொடக்க விழாவுக்கு அன்றைய அ.வ.ந. நகரத்தார் பொதுநலச் சங்கத் தலைவர் திரு மு.ந. இராமநாதன் அவர்கள் தலைமை வகித்தார். குரலின் முதல்

இதழ் (ஜனவரி 1997) தவத்திரு குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார் அவர்களால் வெளியிடப்பட்டு, முதல் இதழை அன்றைய பொதுநலச் சங்க ஆலோசகர் திரு மு.ஆ. இராமசாமி செட்டியார் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

முதல் குரல் இதழ் அட்டையில் எழுந்தருளி ஆசி தந்தது நமது இறைவர் அருள்மிகு மங்கைநாயகரும் - தேனம்மையும் ஆகும்.

சங்கம் மற்றும் சமூகச் செய்திகளை வெளியிடுவது, பெரியவர்கள், பெண்டிர், சிறுவர், சிறுமியர், இளைய தலைமுறை என அனைவரையும் படைப்பாளிகளாக உருவாக்குவது குரலின் கொள்கை என அறிவிக்கப்பட்டது. முதல் குரல் வெளியீட்டிற்கு பொதுநலச் சங்கத் தலைவர் பல்வேறு ஊர்களில் இயங்கும் சங்கத் தலைவர்கள் மற்றும் பொன்னமராவதி மாதர் சங்கத் தலைவி ஆகியோர் வாழ்த்து தெரிவித்தார்கள்.

குரல் பொறுப்பாசிரியராய் நான் 5 ஆண்டுகள் (1997-2002) பணிபுரிந்தேன். குரல் தயாரிப்பு & வெளியீடு மற்றும் தொடக்க விழா நிகழ்ச்சி ஆகியவற்றில் அன்றைய முதல் இணை ஆசிரியர் திரு நா. பழனியப்பன், முதல் துணை ஆசிரியர்கள் அரசு திரு RM.S. ராஜா & திரு நா. திருநாவுக்கரசு மற்றும் எனது சகோதரர் திரு சொ. நடராஜன், திரு அ.லெ. முருகன் மற்றும் திரு மா. மணிகண்டன் ஆகியோர் சிறப்பாகப் பணியாற்றி எனக்கு உறுதுணையாக இருந்ததை நன்றியோடு நினைவுகூறுகிறேன்.

பொதுநலச் சங்கத் தலைவர்கள் திரு மு.ந. ராமனாதன் அவர்களும், திரு மு. சண்முகம் அவர்களும் கௌரவ ஆசிரியர்களாய் குரலுக்கு விளங்கினர். குரலுக்கு செய்திகள் அனுப்ப நியமிக்கப்பட்ட செய்தித் தொடர்பாளர்களும் மிகச் சிறப்பாகப் பணியாற்றினர்.

குரலின் ஆரம்ப காலச் சந்தா ஆண்டுக்கு ரூ.30/- என நிர்ணயிக்கப்பட்டு இரண்டு மாதத்துக்கு ஒரு முறை சிவகாசி சூர்யா பிரிண்ட் சொலுசன்ஸ் திரு C. முருகேசன் & திரு M. பழனிச்செல்வம் (பழனி பேப்பர்ஸ்) எனது மூத்த மாப்பிள்ளை ஆகியோரால் வெளியிடப்பட்டது.

குரல் வெளியீட்டுக்கு நமது அ.வ.ந. நகரத்தார் பெருமக்கள் பேராதரவு தந்தனர். எடுத்தவுடன் 600 பேர் சந்தா வழங்கினர். கோவை சங்க அன்றைய உறுப்பினர்கள் 145 பேருக்கும் மறைந்த அதன் தலைவர் திரு அ. கணேஷ் அவர்கள் கோவை சங்கமே சந்தா செலுத்த ஏற்பாடு செய்தார். அவரது சிறந்த செயலை நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

கல்வித் தாய் - கல்வித் தந்தை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. நன்கொடை ரூ. 5000/- என நிர்ணயித்து அட்டையில் நன்கொடை வழங்கியவர்களின் படத்தைத் துணைவியாருடன் வெளியிட்டோம். இதில் 38 பெற்றோர்கள் பங்கேற்றனர்.

எனது நிர்வாக காலத்துக்குப்பின் அதாவது 2002 மார்ச் மாதத்துக்குப் பின் கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டவர்கள் வழிகாட்டுதல்படி செயல்பட்ட குரல் பொறுப்பாசிரியர்கள், சிறப்பாக பணியாற்றி குரலில் புதுமைகள் பல புகுத்தி மிகப் பொலிவோடு தொடர்ந்து வெளியிட்டு வருவது பாராட்டுக்குரியது. இந்தக் கால கட்டத்திலும் பொதுநலச் சங்கத் தலைவர்களே கௌரவ ஆசிரியர்களாகத் திகழ்வது குறிப்பிடத்தகுந்தது.

சிவகாசி திரு C. முருகேசன் அவர்களே தொடர்ந்து குரலை அழகுற அச்சிட்டு 1200 சந்தாதாரர்களுக்கும் அனுப்பி வருவது பாராட்டுக்குரியது.

தற்போதைய கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் என் அன்பிற்குரிய திரு செ. ஆசை அலங்காரம் அவர்கள் நிர்வாகத் திறமை மிக்கவர். பிற நிர்வாகிகளுடன் சேர்ந்து கல்வி வளர்ச்சிக் கழகத்தைச் சிறப்பாக நடத்தி வருகிறார். நமது மாணவர்களின் தேவை உணர்ந்து செயல்படுகின்றார். அவரது நிர்வாகத்தில் குரல் பொறுப்பாசிரியராய் இருந்து மறைந்த **திரு சுப. துரைராஜ்** அவர்கள் குரலை பல புதிய செய்திகளோடு வெளியிட்டு குரலுக்குப் பெருமை சேர்த்தார்.

அவரது மறைவுக்குப் பின், அவரது சகோதரர் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் செயலாளர் திரு சுப. செல்வம் அவர்கள்

குரல் பொறுப்பாசிரியராய் பொறுப்பேற்று குரலை மிகப் பொலிவோடு வெளியிட்டு வருகிறார்.

தலைவர் திரு செ. ஆசை அலங்காரம் மற்றும் பொறுப்பாசிரியர் திரு சுப. செல்வம் இவர்களது நிர்வாக காலத்தில் 150-வது குரல் இதழ் வெளியிட்டு குரலுக்கு பெருமை சேர்த்தமைக்கு அவர்களுக்கு என் மனம் நிறைந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

குரல் பொறுப்பாசிரியர் திரு சுப. செல்வம் அவர்கள் இந்த 150-வது இதழுக்கு ஒரு வாழ்த்துரை வழங்க எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு மிக்க நன்றி. குரல் வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த வாழ்த்துக்கள்!! வணக்கம்.



## 150-வது இதழ் வாழ்த்துரை

**மன்னுபுகழ் அருவியூர் நகரத்தார்களின்**
**இன்னமுதாய்த் திகழும் இனிய குரல்**
**ஒரு நூற்று ஐம்பதாம் இதழாய் மலரும்**
**மருள்நீக்கும் நல்லிதழ் நீடு வாழ்க!**

– திரு நா. திருநாவுக்கரசு,
தேசிய நல்லாசிரியர், பொன்னமராவதி

## பிறந்த நாள் வாழ்த்து



25-10-2020-ஆம் நாளன்று தனது 77வது பிறந்த நாள் விழா காணும் அ.வ.ந. பொதுநலச் சங்கத் தலைவர் பொறியாளர் திரு M. மாணிக்கம் D.E.E. அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

இவண்
அ.வ.ந. பொது நலச்சங்க நிர்வாகிகள், பிரான்மலை.

உ

அருள்மிகு மங்கைநாயகர் துணை

# அருவியூர் நகரத்தார் குரல்
# 150வது இதழ் வாழ்த்துரை



**Er. M. மாணிக்கம் D.E.E.,**
தலைவர், அ.வ.ந. பொதுநலச் சங்கம், பிரான்மலை.

மதிப்பிற்கும் மரியாதைக்குரிய அண்ணன் பொறியாளர் திரு சொ. வைத்திலிங்கம் B.E.,M.Sc., அவர்கள், தனது அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவராகப் பொறுப்பேற்றவுடன், தனது கனவை நனவாக்க, ஜனவரி 1997-இல் “அருவியூர் நகரத்தார் குரல்” என்ற பெயரில் முதல் இதழ் வெளியிடப்பட்டது. நமது சமுதாயத்தின் செய்திகளையும், இளைய தலைமுறையினர், சிறுவர், சிறுமியர் ஆகிய அனைவரும் கவிதை, கட்டுரை, துணுக்கு எனத் தங்கள் படைப்பாற்றலை பெருக்கிக் கொள்ளவும், கல்வி வளர்ச்சிக்கான கல்வி வாய்ப்பு, வேலைவாய்ப்புச் செய்தியினை அறிந்து கொள்ளவும் இதழ் உதவி புரிந்து வருகின்றது. ஆன்மீகம், படித்ததில் பிடித்தது, மகிழ்வாய் வாழ சிரிப்பு போன்ற பல்சுவைச் செய்திகளும் அனைவரின் பாராட்டுதலையும் பெற்று குரல் சிறந்து விளங்குகின்றது.

கடந்த 23 ஆண்டுகளாக பல சிறுகதை எழுத்தாளர்களையும், கட்டுரையாளர்களையும், மரபுக் கவிஞர்களையும், புதுக்கவிஞர்களையும், பல துணுக்கு எழுத்தாளர்களையும், ஆன்மீகவாதிகளையும், நமது சமூகத்திற்கு குரல் அடையாளம் காட்டியுள்ளது.

குரல் நிறுவனர், கடந்த காலங்களில் பணியாற்றிய பதிப்பாசிரியர்கள், கௌரவ ஆசிரியர்கள், அனைவரையும் பாராட்டி மகிழ்வதோடு, சிறப்பாக அச்சிட்டு வெளியிட்டு வரும்

சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ் உரிமையாளர் திரு சொ. முருகேசன் அவர்களையும் பாராட்டுகின்றோம்.

குரல் சிறப்பாக வெளிவர சிறப்பாக பணியாற்றி வரும் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மதிப்பிற்குரிய திரு S. ஆசை அலங்காரம் B.Sc., அவர்களுக்கும், பதிப்பாசிரியர் மதிப்பிற்குரிய திரு சுப. செல்வம் B.Sc., A.C.A. அவர்களுக்கும் பொதுநலச் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

நகரத்தார் வீட்டிற்கு ஓர் இதழ் என்ற இலக்கை எட்ட, குரல் மென்மேலும் வளர்ந்து, நாமும், நம் சமுதாயமும் வளர எல்லாம் வல்ல அருள்மிகு மங்கைநாயகர் - தேனம்மை அருள்புரிய வேண்டி வணங்குகின்றேன்.


உ

சிவமயம்

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி வைந்துமமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே.

திருஞான சம்பந்தர் அருளிய திருக்கொடுங்குன்ற பதிகம்

**அரசு மெடிக்கல்ஸ்**

**வெள்ளி விழா கண்ட நிறுவனம்**

**எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளும் கிடைக்கும்**




**பஸ் ஸ்டாண்டு அருகில், பொன்னமராவதி. போன் : 260657**

ஆன்மீகப் பகுதி

உ
திருச்சிற்றம்பலம்

# திருத்தொண்டர் பெருமை

## திருத்தொண்டத் தொகை விளக்கம்

திருமுறைத் திருப்பணித் தொண்டர் சைவப் புலவர் –
சிவகுரு வா.நா. சுந்தரம் எம்.ஏ., திருவையாறு.



சிவநேயச் செல்வர்களாய் திகழும் அன்புமிகு நகரத்தார் பெருமக்களே! மீண்டும் வணக்கம்! திருத்தொண்டர் பெருமை கட்டுரையின் தொடக்கத்தில் முதல் கட்டுரையில் சுந்தரர் பாடி "திருத்தொண்டத் தொகையில்" இடம் பெற்ற இரண்டு அடியார்கள் தொடர்பான கேள்வி ஒன்றை உங்கள் முன் வைத்து எழுதியிருந்தேன். அதற்கான விளக்கத்தை இக்கட்டுரையில் காண்போம்.

திருநீலகண்டர், இயற்பகையார் ஆகிய இருவரின் வரலாறுகளை கடந்த நமது குரல் பதிப்புகளில் படித்து அறிந்திருப்பீர்கள். இவர்கள் இருவருமே புலன் இன்பத்தை கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்ந்து காட்டிய நாயன்மார்கள். உரிமையுடைய மனைவியுடன் கூடி இன்புறுவதை ஒரு சபதத்தின் மூலம், அறவே விட்டுவிட்டு பிறர் அறியாமல் தனிமனித ஒழுக்கத்தில் உயர்ந்து பல்லாண்டு வாழ்ந்தவர் திருநீலகண்டக் குயவனார்.

இயற்பகையாரோ பிறருக்கு கொடுத்து அவர் மகிழ்வதைக் கண்டு மகிழ்வதை, மிகப் பெரிய உயரிய நெறியாகக் கொண்டு வாழ்ந்தவர். ஆயினும் தன் மனைவியை யாசித்தவனுக்கு, பொன்னும் பொருளும் கொடுத்து ஒரு பெண்ணை திருமணம் செய்து வைத்து மகிழ்ந்திருக்கலாம்; அதற்கு சில கால அவகாசம் தேவைப்படும். ஆனால் அடியவர் தன் மனைவியை குறிப்பிட்டு கேட்டுள்ளார்; அடியவர் கேட்டதை கேட்டவுடன் கொடுப்பதே வழக்கம் என்ற கொள்கையின் உரைப்பால்; தன்னில் பாதி, தன்னையே நம்பி வந்தவள், வாழ்பவள் என்று சிறிதும் சிந்தியாமல் தனது இன்பத் துறைக்கான இணையையே தானமாகக் கேட்டவுடன் 'தந்தேன்' எனக் கொடுத்து மகிழ்ந்ததால்–

இயற்கைக்கு பகையாக நடந்த கொண்டதால் **‘இயற்பகையார்’** என பெயர் பெற்றார்.

எம்மிறையாகிய சிவன் – அறுபது அடியார் பெருமக்களின் வரலாற்றினை சுந்தரர்க்கு தனது அருளால் உணர்த்தி, அவரை அறிந்து கொள்ளச் செய்ததோடு “தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்” என்று முதல் அடியை பாடி, தொடங்கிக் கொடுத்தார். சுந்தரரோ அடுத்த இரு அடிகளில் முறையே திருநீலகண்டரையும், இயற்பகையாரையும் முதல் இரண்டாம் வரியாக சிறப்பித்து பாடலானார். இறையுணர்வு எவ்வளவு மேலோங்கி இருந்தும், மாதர்பால் தாம் கொண்ட மையலை–விருப்பை விட முடியாமல் இரு பெண்களை மணம்புரிந்ததும்; அதற்காகத் தான் பட்ட இன்னல்களும் அவர் நெஞ்சின் அடியில் நீங்காது இருந்தன. அதன் பின் மனைவியைப் பிரிந்ததால் கண் இழந்து தடுமாறியதையும், மற்றொரு மனைவியின் ஊடலைத் தீர்க்க முடியாமல், திருவாரூர் இறைவனை வேண்டித் தூது விட்டதையும் அவர் ஆழ்மனம் அசைபோட்டபடியே இருந்தது.

எம்பிரான் தோழனாய், அடியவனாய் தாம் இருந்தும் பெண்கள் மீதான பற்றை துறக்க முடியாமல் எத்துணை அல்லல்பட்டோம். இந்த இருவரும் எவ்வளவு எளிதாக – உறுதிப்பாடாக – பெண்களுடனான பந்தத்தை துறந்து, கொண்ட கொள்கையில் பிடிப்போடு நின்று உயர்ந்திருக்கிறார்கள். இவர்கள் நம்மை விடப் பன்மடங்கு உயர்ந்தவர்கள் என எண்ணியதால்; பட்டறிவு காட்டிய பாடத்தால், இவர் மனதில் இறைவர் பட்டியலிட்டுக் காட்டிய அடியார்கள் பற்றிய தொகைப் பாடலில், முதல் மற்றும் இரண்டாவது இடங்களில் ‘திருநீலகண்டர்’ மற்றும் ‘இயற்பகையார்’ ஆகியவர்களை வைத்துப் பாடும் உணர்வு இயற்கையான உந்துதலாய் வந்து அமைந்தது.

“திருநீல கண்டத்து குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்”

என்ற வரிகள் சுந்தரரின் திருத்தொண்டத் தொகையில் அமைந்ததற்கு இப்படி ஒரு விளக்கம் என் ஆசான் சொல்லக்

கேட்டு மகிழ்ந்ததுண்டு. அது மட்டும் அன்று 'அடியேன்' என்று போட்டதற்கும் ஒரு விளக்கம் தந்தார். 'அடியேன்' என்றால் இவர்களுக்குப்பின் இவர்களைப் போலப் பக்தி வைராக்யம் செய்பவர்கள் தோன்ற மாட்டார்கள் – தோன்ற முடியாது. ஆகையால் 'அடியேன்' என்று முடித்திருக்கிறார். இல்லையென்றால் மற்றவரைப் போல் "அடியார்க்கும் அடியேன்" என்று பாடியிருப்பார் என்றும் விளக்கம் தந்தார் என் ஆசான்.

இது ஒருபுறம் இருக்கட்டும். நாம் படித்து மகிழும் 'பெரிய புராணம்' தந்த "சேக்கிழார் பெருமான்" சுந்தரர் பூமிக்கு வந்த காரணத்தை எப்படி சொல்லி இருக்கிறார் எனப் பார்ப்போம். கயிலாயம் காமதகனம் செய்த எம்பெருமான் இருக்கும் இடம். எனவே அங்கு காதலுக்கு இடமில்லை. காமத்திற்கும் இடமில்லை. சுந்தரர், உமா தேவியரின் சேடிகள் மேல் காதல் வயப்பட்டார், அதனால் பூமிக்கு அனுப்பப்பட்டார் என்ற வரலாறு ஒரு துணைக் காரணம். சுந்தரரைப் பூமிக்கு அனுப்பி அவரோடு தானும் இணைந்தும் பிரிந்தும் ஒரு பெரிய திருவிளையாடலை நிகழ்த்த திருஉளம் கொண்ட எம்பிரானின் விளையாட்டில் இதுவும் ஒன்று என்பதே சரி.

தன்னை விட்டு இணைபிரியாமல் இருக்கும் சுந்தரன் எக்காரணத்திற்காகவும் தன்னைவிட்டு பிரிய ஒப்பமாட்டான் என்பதால்; அவர் மீது ஒரு குற்றத்தைச் சுமத்தி, தண்டனை என்ற பெயரில் பூமிக்கு இறைவர் அனுப்புகிறார். 'அவர் மனதில் காதலைப் புகுத்தி, அதைத் தான் கண்டு பிடித்ததாய் நம்பவைத்து, நாடகத்தின் உச்சமாகப் பூமியில் பிறக்க வைக்கிறார். அவ்வப்போது தானும் பூவுலகில் தோன்றி, தனது நாடகம் நடைபெற உறவாடியும், விலகியும் துணை நின்று அருளியுள்ளார்.

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
திதிலாத் திருத் தொண்டத் தொகைதர......

– என்பது சேக்கிழாரின் வாக்கு.

மிகப் பெரிய சிவ ராஜதானியாக விளங்கும் தென்திசையான தமிழகத்தில் சைவமும், தமிழும் தழைத்து வளர்ந்து நிலைபெற்று இருக்கவும்; குற்றமற்ற பலதரப்பட்ட

அடியார்கள் பற்றியும், அவர்கள் செய்த செயற்கறிய செயல்கள், தொண்டுகள், பக்தி வைராக்கியம் பற்றியும், இறைக்காதல் பற்றியும், உலகத்தவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஒரு தொகுப்பினை, பட்டியலைச் செய்து அளிப்பதற்காகவும் சுந்தரர் அவதாரம் நடந்தது என்பது – குன்றை முனி சேக்கிழாரின் கருத்து – எண்ணம் – வாக்கு.

சிவனருள் பெற்று உய்ந்த தொண்டர்கள் அறுபது பேர்களின் பட்டியலை சுந்தரர், "திருத்தொண்டத் தொகை" என்று பாடத் தொடங்கும் போது முதல் அடியாராகத் "திருநீலகண்ட குயவனாரையும்" அறுபதாவது அடியாராக 'திருநீலகண்டப் பாணனாரையும் வைத்துப் பாடி; திருநீலகண்டத்திலே தொடங்கி திருநீலகண்டத்திலே முடித்துள்ள அருமையை எண்ணும்போது சுந்தரர் தன்னால் 'திருநீலகண்டனான' இறைவனை எப்போதும். எத்திறத்தும் மறவாத சிந்தை உடையவராய் வாழ்ந்திருக்கிறார் என்று உரை முடிகிறது.

அறுபத்து ஒன்றாவது அடியாராக தனது தகப்பனார் சடையனாரையும், அறுபத்து இரண்டாவது அடியாராகத் தாயார் இசைஞானியாரையும் பாடி அறுபத்து மூன்றாவது – கடைசி ஆளாகத் தன்னைச் சொல்லி நிறைவு செய்திருக்கிறார்.

சுந்தரர் காலம் வரை – திருத்தொண்டர்கள் – இறையருள் பெற்றவர்கள் அறுபது பேர்தானா? என்ற கேள்வி எழுகிறது? நியாயமான – சரியான கேள்வி. பலவிதமான சமூக அமைப்புகளிலிருந்து; இனங்களில் இருந்து; ஆண் பெண்களிலிருந்து; வேறுவேறு விதமான குறிக்கோளைக் கொண்டு, தொண்டாற்றி, அதில் உறுதி குன்றாது நின்ற உத்தமர்களில் சிலரைத் தெரிவு செய்து போற்றி – புகழ்ந்து, பாடியருளி இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளல் வேண்டும். இவர்களில் யாரைப் பின்பற்ற இயலுமோ அவரைப் பின்பற்றி வாழத் தலைப்படட்டும் என்பது அவர் எண்ணம்.

அன்பர்களே! நாயன்மார் பெருமக்கள் செய்ய வேண்டிய தொண்டு எது என்பதை இறைவன் முடிவு செய்யவில்லை. அவரவரின் குடிப்பிறப்பு, வளர்ந்த முறை, காலம், சூழல் செய்த அல்லது செய்யும் தொழில் இவைகளை ஒட்டி; அவரவரும்

இறைவனுக்கும் அவன் அடியார்களுக்கும் செய்யும் தொண்டாக ஏதோ ஒன்றை அவர்களே வரித்துக் கொண்டு, அதிலிருந்து பிறழாமல்– மாறாமல், தொய்வின்றி தொடர்ந்து மேலும் மேலும் விருப்போடும்; உரைப்போடும் செய்தார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அடியாரால் கேட்கப்படுவது, என் உடமையாக, என்னிடம் உள்ளதாக இருந்தால் கேட்டவருக்கு; கேட்ட உடனே கொடுத்து மகிழ்வது என்பதை ஒரு கொள்கையாகக் கொண்டு வாழ்ந்தவர், நம் இயற்பகையார். ஆகையால் “உன் மனைவியைக் கொடு” என கேட்டார் இறைவன். தினம் ஒருவருக்கு அவர் விரும்பியவாறு விருந்து படைக்காமல் தான் சாப்பிடுவதில்லை என்ற கொள்கை வைத்திருந்தார் ‘சிறுத் தொண்டரான; – பரஞ்சோதி. ஒரு நாட்டின் படைத் தளபதி, போரில் பல உயிர்களைச் சிறிதும் வருத்தமில்லாமல் கொன்று குவித்தவர்; ஆகையால் அவரிடம், “எனக்கு உன் மகனைக் கொன்று கறிவிருந்து வை” எனக் கேட்டார் இறைவன்.

பெரிய புராணம் பேசும் அடியார்களின் உள்ளத்தைப் புரிந்து கொள்ள மிக மேம்பட்ட மனம் வேண்டும். யாரையும் இன்னதை இன்னமாதிரி செய்துகொண்டு இரு என இறைவன் சொல்லவில்லை. அவரவரும் அவரவர் கொள்கையை அவரவரே ஏற்படுத்திக் கொண்டனர் என்பதை உள் வாங்கிக் கொள்ளுங்கள். அதே சமயம் அது சிறப்பாக, முறையாக, தடையின்றி நடந்துவர இறைவன் துணை நின்றான் என்பதை மறந்து விடக்கூடாது. அத்தகைய தொண்டிற்க்கான நிறைவையும், பலனையும் வழங்க இறைவன் வருகிறான். “சோதிக்க வந்தான்” – ‘சோதித்தான்’ எனப் பேசுவது அறியாமை. அத்தொண்டன் அவன் கொள்கையில் எந்த நிலையிலும் உறுதியுடன் நிற்பான். செய்து முடிப்பான். முடியாதபோது செத்து மடிவான் என்பது ஆண்டவனுக்குத் தெரியும். பின் ஏன் இதைச் செய்தான் எனில் தொண்டு செய்தவனுக்கு உரிய பலனை, ஏதேனும் ஒரு கட்டத்தில் கொடுத்தாக வேண்டும் என்பதற்காகவும், இப்படிப்பட்ட தொண்டனை இந்த உலகம் அறிந்து கொள்ளட்டும், இனம் கண்டு கொண்டாடட்டும் என்பதற்காகவும், செய்யும் நாடகமே அன்றி ‘சோதனை’ எனச் சொல்வது தவறு. சோதனை என்றால் வெற்றி, தோல்வி என்று

இரண்டு இருக்கும். இங்கு வெற்றி மட்டுமே என்றும் பேசப்படுவதால் இதனை சோதனை என்பது மரபாகாது. மேலும் இறைவன் தொண்டர்களிடம் 'கேட்பான்' என்ற வரலாறு மட்டுமே உண்டு. "எடுத்துக் கொண்டான்" என்ற வரலாறு இன்றளவும் இல்லை. இனியும் இருக்காது.

ஒன்றுக்குப் பலவாகவோ, அல்லது கிடைத்தற்கு அரிய மிகப்பெரும் பேறாகவோ அவன் அருள் இருக்கும். தொண்டு செய்யும் அடியார்களிடம் கேட்டு வாங்கிச் செல்ல வேண்டிய நிலையில் அவன் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். 'திருஞானசம்பந்தர்' "சென்றடையாத திரு உடையானை" என்று பாடுகிறார். அவனைச் சென்று சேர வேண்டியது எதுவுமே இல்லையாம். அவன் பரிபூரணன். ஆகையால் தான் அவனை மாணிக்கவாசகர் "சேர்ந்து அறியாக கையானை" – யாரையும் வணங்குவதற்காக கைகளைச் சேர்த்து அறியாதவன் எனத் திருவையாற்றில் பாடிப் போற்றுகிறார். இப்படிப்பட்ட நம் இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான் அது உண்மையான பக்தி – அன்பு – சரணம் எனக் கிடத்தவையே. இப்படிப்பட்ட ஒரு பக்தி வைராக்யம் – நாயன்மார் உள்ளத்தில் எப்படித் தோன்றியது அது உருக்கொண்ட முறை எங்ஙனம் என்பது பற்றி அடுத்த கட்டுரையில் மேலும் விரிவாகப் பார்ப்போம்.

எது எப்படியோ மிக உயர்வான சுந்தரரின் வாழ்க்கை வரலாறும்; அவர் அருளிய தேவாரப் பதிகங்களும் நமக்கு சைவ உலகுக்குக் கிடைத்த பெரும் பக்திப் பொக்கிஷம். இதைப் பேணிப் பாதுகாப்போம்! படிப்போம்! நாள்தோறும் பாடுவோம்! பக்தி செய்வோம்! பரமனருள் பெறுவோம்!!

"சுந்தரர் துதி"

தீதுகொள் வினைக்கு வாரோம் செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசும் கதிர்நிலவு இருள்கால் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க மனைஇடை இருகால் செல்லத்
தூதுகொள்பவராம் நம்மைத் தொழும்பு கொண்டு உரிமை
கொள்வார்.

– சேக்கிழார் பெருமான்.

திருச்சிற்றம்பலம்

உ

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

## மதுரையில் குடியிருக்க வீடு (வாடகை இல்லாமல்)

நமது நகரத்தாருக்கு சொந்தமான வீடு மதுரை ஆரப்பாளையம் பாத்திமா கல்லூரி அருகில் அமைந்துள்ளது. இதன் முதல் மாடி பகுதியில் ஒரு சிறிய குடும்பம் சௌகரியமாக வசிப்பதற்கு ஏற்ற வகையில் அனைத்து வசதிகளுடன் ஒரு வீடு உள்ளது. நம்மவர்களுக்கு இந்த வீட்டில் வாடகை இல்லாமல் குடி இருக்க அனுமதிக்கலாம்.

மேலும் விவரங்கள் அறிய தொடர்புக்கு : **94433 63661**

**பெற்றோர்களுக்கு சேவை செய்யாதவர்கள் எந்த முன்னேற்றத்தையும் அடைய முடியாது. – ராமகிருஷ்ணர் பரமஹம்சர்**

---

### ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை திருமண தகவல் மையம், கோவை

இலவச சேவை-கட்டணம் இல்லை. பதிவிடுங்கள்

சமூகப் பெருமக்களே! பெற்றோர்களே!

மணமகன்-மணமகள் தேவைக்கு உரிய விவரத்துடன் தபால் அனுப்புங்கள். வரிசைப்படி நம்பர் பதிவு செய்து பதிவேட்டில் விபரம் எழுதி விரைவில் திருமணம் கைகூட வழி காண்பிக்கிறோம். 18-07-2006-இல் தொடங்கிய இச்சேவையில் பதிவானது 441. இணைந்த தம்பதிகள் 330. காத்து இருப்பது ஆண்-83 பெண்-28 ஆக 111, பெண் பதிவு மிக மிக குறைவு. பெண்வீட்டார்கள் முன்வந்து பதிவு கொடுத்தால் சமூகஇனம் பெருக சமூகம் வளரும். பெண் வீட்டார்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுகிறோம்.

சாமியாடி எஸ். ஜெகநாதன்
நெ. 10 இ, அம்மன் கோவில் தோட்டம்,
பஸ்நிலையம், வடவள்ளி,
கோயமுத்தூர் – 641 041.
செல் : 98948 37649

பி.எல்.ஆர். திருமுருகன் ஸ்டோர்ஸ்
நெ. 18, எம்.கே.ஜி. லே அவுட்
ITI பின்புறம் GN மில்
கோயமுத்தூர் – 641 029.
செல் : 99523 49855

குறிப்பு : 99523 49855 என்கிற எண்ணுக்கு காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை அழையுங்கள்.

சென்னை மாநகர் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்
மேன்மேலும் வளர எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.



**S. Chandrasekar** B.Sc., B.Ed., M.B.A

Mobile: 98404 39115

**ANANTHAM CONSULTANCY**
**LIC AND TAX ADVISOR**

Income Tax, GST,
Pan Card

7/552, 7th Block, Mogappair West,
Chennai - 37.

Email: chandrupmv@gmail.com

# தமிழின் சுவை
# ஓரெழுத்து வெண்பா

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே

உலகில் இப்படி ஒரு பாடலை யாராவது எழுத முடியுமா? அதற்கு அந்த மொழியில் வாய்ப்புகள் இருக்கிறதா? என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் முடியவே முடியாது என்று தான் தோன்றுகிறது.

ஒரே ஒரு தமிழ் எழுத்தை அந்த எழுத்தின் வரிசையை மட்டும் பயன்படுத்தி ஒரு வெண்பாவை இயற்ற முடியுமா என்பதை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. இன்று வெண்பா எழுதுவதற்கே ஆட்கள் இல்லை என்ற நிலையில், பதினைந்தாம் நூற்றாண்டிலே அருணகிரிநாதர் இப்படி ஒரு பாடலை இறை அருள் இல்லாமல் எப்படி பாடியிருக்க முடியும்.

### அருணகிரிநாதரின் கந்தர் அந்தாதி 54 பாடல்

**சொற்பிரிவு**

திதத்தத் தத்தித்த திதி தாதை தாத துத்தி தத்தி
(தா) தித தத்து அத்தி ததி தித்தித்ததே து துதித்து இதத்து
(ஆ) தி தத்தத்து அத்தி தத்தை தாத திதே துதை தாது அதத்து
(உ) தி தத்து அத்து அத்தி தித்தி தீ தீ திதி துதி தீ தொத்ததே.

**பதவுரை**

திதத்த ததித்த... திதத்த ததித்த என்னும் தாள வரிசைகளை,
திதி... தன்னுடைய நடனத்தின் மூலம் நிலைபடுத்துகின்ற,
தாதை... உன்னுடைய தந்தையாகிய பரமசிவனும்,
தாத... மறை கிழவோனாகிய பிரம்மனும்,
துத்தி... புள்ளிகள் உடைய படம் விளங்கும்,
தத்தி... பாம்பாகிய ஆதிசேஷனின்,
தா... முதுகாகிய இடத்தையும்,
தித... இருந்த இடத்திலேயே நிலைபெற்று (ஆனால்)
தத்து... அலை வீசுகின்ற,
அத்தி... சமுத்திரமாகிய திருப்பாற்கடலையும்
(தன்னுடைய வாசஸ்தலமாகக் கொண்டு)

ததி... அயர்பாடியில் தயிர்,
தித்தித்ததே... மிகவும் இனிப்பாக இருக்கிறதே என்று சொல்லிக்கொண்டு,
து... அதை மிகவும் வாரி உண்ட (திருமாலும்)
துதித்து... போற்றி வணங்குகின்ற,
இதத்து... பேரின்ப சொரூபியாகிய,
ஆதி... மூலப்பொருளே,
தத்தத்து... தந்தங்களை உடைய,
அத்தி... யானையாகிய ஐராவதத்தால் வளர்க்கப்பட்ட,
தத்தை... கிளி போன்ற தேவயானையின்,
தாத... தாசனே,
திதே துதை... பல தீமைகள் நிறைந்ததும்,
தாது... ரத்தம் மாமிசம் முதலிய சப்த தாதுக்களால் நிரப்பப்பட்டதும்,
அதத்து உதி... மரணம் பிறப்பு இவைகளோடு கூடியதும்,
தத்து அத்து... பல ஆபத்துக்கள் நிறைந்ததும் (ஆகிய)
அத்தி தித்தி... எலும்பை மூடி இருக்கும் தோல் பை (இந்த உடம்பு)
தீ... அக்னியினால்,
தீ... தகிக்கப்படும்,
திதி... அந்த அந்திம நாளில்,
துதி தீ... உன்னை இவ்வளவு நாட்களாக துதித்து வந்த என்னுடைய புத்தி,
தொத்ததே... உன்னிடம் ஐக்கியமாகி விட வேண்டும்.

**பொழிப்புரை**

நடராஜ மூர்த்தியாகிய சிவபெருமானும் பிரம்மனும் இடைச்சேரியில் தயிர் உண்டு பாற்கடலையும், ஆதிசேஷனையும் பாயாகக் கொண்டு யோக நித்திரை செய்யும் திருமாலும் வணங்குகின்ற ஆனந்த முதலே, தேவயானையின் தாசனே, ஜனன மரணத்திற்கு இடமாய் சப்த தாதுக்கள் நிறைந்த பொல்லாத இந்த உடம்பை தீயினால் தகிக்கப்படும் பொழுது உன்னை துதித்து வந்த என் சித்தத்தை உன்னுடைய திருவடிக்கு நீ ஆட்படுத்த வேண்டும் என்பது பொருளாகும்.

இந்தப் பாட்டிற்கு உரை கூற முடியாமல் ஸ்ரீவில்லிபுத்தூரார் அருணகிரிநாதரிடம் தோல்வியுற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**– சுப. செல்வம், குரல் ஆசிரியர்.**

# கல்வி வளர்ச்சிக் கழக செயல்பாடுகள் 2020-21

## (அ) இலவச உதவித் தொகை வழங்கும் விவரம்:

1. 6, 7, 8 வகுப்பு மாணவர்களுக்கு ரூ. 500/-
2. 9, 10, 11, 12 வகுப்பு மாணவர்களுக்கு ரூ. 1,000/-
3. பட்டம்/பட்டயம் படிப்பவர்களுக்கு ரூ. 5,000/-
4. BE/MBBS/CA படிப்பவர்களுக்கு ரூ. 6,000/-
5. CA Foundation Course படிப்பவர்களுக்கு ரூ. 5,000/-
6. பொருளாதாரத்தில் மிகப் பிற்பட்டோர் / மற்றும் பெற்றோர் இல்லாதவர்கள் / மாற்றுத் திறனாளிகள் இவர்களுக்கு தகுதி அடிப்படையில், பட்டம் படிக்கும் மாணவர்களுக்கு தலைவர் **சிறப்பு உதவித்தொகை ரூ.10,000/- வருடந்தோறும்.**

## (ஆ) கல்விக் கடன் விவரம்

7. BE/MBBS/CA படிக்கும் மாணவ மாணவிகளுக்கு வட்டி இல்லாக் கடன் **ரூ.10,000/- வருடந்தோறும்.**

## (இ) மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கப் பரிசு 2020-21 விவரங்கள்

8. பத்து, பன்னிரண்டு வகுப்புகளில் அரசுப் பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல், இரண்டு, மூன்றாவது இடம் பெறும் மாணவ மாணவிகளுக்கு (அதாவது 500, 499, 498, 497) எடுக்கும் மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கப்பரிசு ரூ.10000/-, ரூ.5000/- ரூ.3000/-
9. பத்து, பன்னிரண்டு வகுப்புகளில் அரசு பொதுத் தேர்வில் நம் மாணவர்களில்
   - (i) முதல், இரண்டாம், மூன்றாம் மதிப்பெண் பெறும் மாணவ மாணவிகளுக்கு தங்கப்பதக்கம் மற்றும் ரொக்க ஊக்கப் பரிசு முறையே ரூ.5,000/-ரூ.3,000/- ரூ.2,000/-
   - (ii) 80%-க்கு அதிகமான மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு வெள்ளிப்பதக்கம்.
   - (iii) 60% மற்றும் அதற்கு அதிகமான மதிப்பெண் பெறும் அனைத்து மாணவர்களுக்கும் புத்தகப் பரிசு.
10. இளநிலை, முதுநிலை படிக்கும் மாணவர்களில் அரியர்ஸ் ஏதுமின்றி Cumulative Score 80%க்கு அதிகமாக மதிப்பெண் பெறும் மாணவர்கட்கு வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும்.

11. **தங்க குழந்தை பாராட்டு** : ஏதேனும் இரண்டு பருவங்களில் 100/100 மதிப்பெண்ணும் மற்றும் ஒரு பருவத்தில் 97%-க்கும் அதிகமாக பெற்றிருந்தால் அவர்கள் தங்கக் குழந்தையாக பாராட்டப் பெறுவார்கள்.
12. படிப்பில் வேறு ஏதேனும் சிறந்த சாதனைகள் புரிபவர்களை பாராட்டுதல்.
13. மாணவர்களது தனித்திறமையை ஊக்குவித்து வளர்த்திட நிதி உதவித் திட்டம்.
14. அருவியூர்த் தந்தை தெய்வத்திரு நல்லசுப்பையா அவர்கள் நினைவு சாதனையாளர் விருது வழங்குதல்
15. கல்விக் வளர்ச்சிக் கழக அமைப்பாளர் தெய்வத்திரு அ.லெ. முருகன் நினைவு இளஞ்சாதனையாளர் விருது வழங்குதல்.

**– சுப. செல்வம், செயலாளர், கல்வி வளர்ச்சிக் கழகம்**

## கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு உங்களின் பங்கு

நீங்கள் எப்படி நமது கல்வி வளர்ச்சிப் பணியில் பங்கு கொள்ளலாம்? கல்வி வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்டவாறு நன்கொடை வழங்கி பங்கு பெற அழைக்கின்றோம்.

| எண். | திட்டம் | ஆண்டுதோறும் நன்கொடை ரூ. |
|---|---|---|
| 1. | வெள்ளிப்பதக்கம் 1-க்கு | 1500/- |
| 2. | தங்கப்பதக்கம் | 10,000/- |
| 3. | புரவலர் | 1000/- 2000/- 3000/- |
| 4. | பெரும்புரவலர் | 5000/- |
| 5. | வள்ளல் | 10,000/ |
| 6. | கொடைவள்ளல் | 15,000/-- |
| 7. | பெருங்கொடை வள்ளல் | 25,000/- |
| 8. | மாபெருங்கொடை வள்ளல் | 1,00,000/- அதற்கு மேலும் |
| 9. | கல்விக்காவலர் | 1,00,000/- (வாழ்நாளில் ஒரு முறை) |

நமது சமுதாய மறுமலர்ச்சிக்குத் “துணை வாரீர்” என இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்!

**– செ. ஆசை அலங்காரம், தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

சாதனையாளர் பக்கம்

# தேசிய அளவில் முதல் இடம் பெற்ற சாதனையாளர்



திண்டுக்கல் – பூர்வீகம் சிறுகுடி திரு M. தீப அலங்கார் M.Sc., (Geology) திருமதி பிரியதர்சினி B.Sc., (Nutrition) தம்பதியரின் மகள் **செல்வி நிருபமா,** அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் கெமிக்கல் எஞ்சினியரிங் பாடப்பிரிவில் (பொறியியல்) 3–ஆம் ஆண்டு படித்து வருகிறார். அவர் இந்த ஆண்டு Petro Chemical Dept. of India ஏற்பாடு செய்த National Level Conference-இல் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றுள்ளார். கடந்த ஆண்டு நடைபெற்ற National Conference-இல் 2–ஆம் பரிசு வென்றார். தன் விடா முயற்சியால் இந்த ஆண்டு முதலிடத்திற்கு வந்துள்ளார்.

14–ஆண்டுகளுக்குப் பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இம்மாணவியின் மூலம் இப்பெருமையைப் பெற்றுள்ளது. தான் படித்து வரும் பல்கலைக் கழகத்திற்கும், நமது சமுதாயத்திற்கும் பெருமையைத் தேடித் தந்த மாணவிக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர் வாழ்வில் மேலும் பல சிறப்புக்களைப் பெற வாழ்த்துகிறோம்.

**–திரு S. ஆசை அலங்காரம், தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

# ஹிந்தி மொழித் தேர்வில் B.A. பட்டம்



பூர்வீகம் சிறுகுடி, தற்சமயம் தஞ்சாவூரில் வசித்து வரும் அரும்பாக்கிளையார் குடிப் பட்டத்தைச் சார்ந்த திரு D. திருநாவுக்கரசு – T. பாரதி தம்பதியரின் மகள் **செல்வி அபர்ணா** +1 படித்துக் கொண்டிருக்கும் போதே ஹிந்தி மொழித் தேர்விலும் B.A. (Hindi) பட்டம் பெற்றுள்ளார்.

**-தகவல்: திரு D. திருநாவுக்கரசு, தஞ்சாவூர்**

செல்வி அபர்ணா கல்வியில் மென்மேலும் சிறந்து விளங்க கல்வி வளர்ச்சிக் கழகம் வாழ்த்துகிறது.

**– தலைவர், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்**

# நம்மவரில் முதல் சித்த மருத்துவர்



பூர்வீகம் பொன்னமராவதி கழனிவாசலூடையார் தற்பொழுது நாமக்கல்லில் வசித்து வரும் திரு C. சரவணன் – இன்பரோஜா இவர்களின் மகள் **திருமதி S. சங்கீதா** அவர்கள் கோயம்புத்தூர் R.V.S. சித்தா மெடிக்கல் கல்லூரியில் சேர்ந்து நமது சமூகத்தின் முதல் சித்த மருத்துவராக (B.S.M.S.) தேர்ச்சி பெற்றுள்ளார்.

**-தகவல் : திரு C. சரவணன், நாமக்கல்.**

சித்த மருவத்துவராகத் தேர்ச்சி பெற்றுள்ள திருமதி S. சங்கீதா அவர்களை கல்வி வளர்ச்சிக் கழகம் வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறது. **– தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

**வீடு பராமரிப்பு மற்றும் சமையல் வேலைகள் செய்ய சகோதரி தேவை**

சமையல் மற்றும் வீடு பராமரிப்பு வேலைகளை **சேலத்தில் வீட்டிலேயே தங்கி செய்வதற்கு** நம்மவர்களில் வசதி குறைந்த / ஆதரவற்ற சகோதரி தேவை. சொந்த சகோதரர் வீட்டில் இருப்பது போன்ற உணர்வுடன் மன நிம்மதியுடன் இருக்கலாம். நல்ல சம்பளம். விரும்பினால் அட்வான்ஸ் தரலாம்.

மேலும் விபரங்கள் அறிய தொடர்புக்கு :
**94433 63661**

பிறர் துன்பத்தையும் தன்னுடைய துன்பமாக எவர் உணர்கிறார்களோ அதுவே வழிபாட்டின் உச்சம். **– பகவத்கீதை**

# அ.வ.ந. சென்னை சங்க முப்பெரும் விழா

26-07-2020 ஞாயிறன்று சென்னை அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு ம. முருகானந்தம், துணைத் தலைவர் திரு M.S. ராஜேஸ் கண்காணிப்பில் காணொளி காட்சி (Zoom Meeting) மூலமாக செயற்குழு கூட்டம் நடந்தது.

தலைமை ஏற்று உரையாற்றிய A.V.N. சங்கத் தலைவர், உலகமே போராடும் இந்த கொரோனா வைரஸின் தாக்கம், தமிழக அரசின் ஊரடங்கு உத்தரவின் காரணமாகவும், சிரமப்படும் நம்மவர்களுக்கு பண உதவி செய்வோம் என்ற தீர்மானத்தின்படி **A.V.N. Chennai Care** மூலம் கொரோனா ஊரடங்கு நலத்திட்டம் அறிவித்து நம்மவர்களின் நன்கொடையை நாடினார்கள். திட்டம் அறிவித்த உடனேயே சென்னை சங்க துணைத் தலைவர்கள் திரு சிங்கப்பூர் பாஸ்கர், திரு துபாய் சோனாராம் இருவரும் தங்களது நன்கொடையை அறிவிக்க தொடர்ந்து சென்னை சங்க செயலாளர் திரு S. நேசமணி, பொருளாளர் திரு V. இராமநாதன், இணைச் செயலாளர் திரு A.S. முருகேசன், துணைத் தலைவர் திரு M.S. ராஜேஸ் என அடுத்தடுத்து நன்கொடை அறிவித்தனர். சென்னை சங்கத்தின் அங்கமான அனைத்து நகரத்தார் பெருமக்களும் வழங்கிய நன்கொடை நிதியை சென்னை அவந சங்க துணைச் செயலாளர் திரு M.S. சந்திரசேகர் அவர்கள் வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

திட்ட நகல் கிடைக்கப் பெற்றதும், உதவி கோரி விண்ணப்பங்கள் வர ஆரம்பித்தன. சூழ்நிலை உணர்ந்த சென்னை சங்க தலைவர், நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் உதவியுடன் உண்மை நிலையை அறிய ஏற்பாடு செய்து தனி நபர் எனில் ரூ. 1000/- என்றும் குடும்பம் எனில் ரூ. 2000/- என்றும் பணம் நேரில் பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

முதல் கட்டமாக நலிவடைந்த 101 நபர்களுக்கு 04-08-2020 அன்று நேரடியாக பண உதவி செய்யப்பட்டது.

நமது தேசத்தின் 74-வது சுதந்திரதின விழா சென்னை A.V.N. சங்க 31-ஆம் ஆண்டு குடும்ப விழா கொரோனா ஊரடங்கு நலநிதி உதவி திட்ட வெற்றி விழா என முப்பெரும் விழா கானொளி காட்சி (Zoom Meeting) மூலம் சரியாக 4.00 மணிக்கு (15-08-2020) ஆரம்பமானது. தலைவர் திரு ம. முருகானந்தம் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கினார். துணைத் தலைவர் M.S. ராஜேஸ் விழாவிற்கு வந்தவர்களை வரவேற்றார். முப்பெரும் விழாவில் ஆர்வமுடன் சென்னை சங்க செயலாளர் திரு S. நேசமணி, பொருளாளர் திரு V. இராமநாதன், துணைத் தலைவர்கள் திரு சிங்கப்பூர் பாஸ்கர், திரு துபாய் சோனாராம், திரு R. பரமசிவம், ஓமன் M. கௌரி, பொதுநலச் சங்க துணைச் செயலாளர் திரு M. சுப்பையா, கல்வி வளர்ச்சிக் கழகப் பொருளாளர் திரு M.S. சந்திரசேகர், இளைஞரணித் தலைவர் திரு T. ரவி, செயலாளர் திரு. N. சுரேஷ்ராம், பொருளாளர் திரு A. பாரதி, இணைச் செயலாளர்கள் திரு A.S. முருகேசன், திரு R. பிரபாகர், செய்தித் தொடர்பாளர் திரு T. துரைராஜ் மற்றும் நகரத்தார்கள் கலந்து கொண்டனர்.

முப்பெரும் விழாவில் கலந்துகொண்ட நம் நகரத்தார் முன்னோடி திரு சொ. வைத்திலிங்கம் அவர்கள் பேசும் பொழுது நகரத்தார்கள் செய்த உதவி சிறிதெனினும், ஞாலத்தின் மானப் பெரிது குறள் மொழிக்கிணங்க சென்னை சங்கம் மூலம் இந்தக் கொரோனா பேரிடர் சமயத்தில் பண உதவி செய்த சேவையைப் பாராட்டினார்கள்.

விழாவில் கலந்துரையாடிய பொதுநலச் சங்க பொருளாளர் திரு மங்கைபாகன், சென்னை சங்கம் மூலம் இந்த இக்கட்டான சூழலில் நலிவடைந்த நம்மவர்களுக்கு பணஉதவி செய்தது ஒரு நல்ல முன் உதாரணம் என்றார்.

கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு ஆசை அலங்காரம் அவர்கள் பேசும்பொழுது எந்தச் சங்கமும் செய்யாத செயல்கள் செய்து காட்டிய சென்னை சங்கம் இந்த நல உதவித் திட்டம் மூலம் 45 ஊரில் 254 பேருக்கு நேரடியாக பண உதவி செய்துள்ளதை அறிந்து சென்னை சங்கத் தலைவர் திரு ம. முருகானந்தம் அவர்களது செயல்திறனையும், மற்றும் நன்கொடை வழங்கிய நகரத்தார்களின் கொடைத் தன்மையை பாராட்டுவதாகக் கூறினார்.

மகிழ்வித்து மகிழ் புகழ் குருஜி ராஜ்குமார், திருச்சி சிவனேசன், கோவை சங்கத் தலைவர் திரு A.P. ஸேதுராமன், கோவை நலச் சங்கத் தலைவர் திரு ராமச்சந்திரன், நல்லாசிரியர் திரு திருநாவுக்கரசு, பொன்னமராவதி திரு மலை. சோம. கம்பராஜன், காரைக்குடி திரு இளங்கோ என எல்லோரும் சென்னை சங்க திட்டத்தின் வெற்றியைப் பாராட்டி மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

சென்னை A.V.N. சங்கம் மூலம், 45 ஊர்களில் 254 நபர்களுக்கு கொரோனா ஊரடங்கு சமயத்தில் நலிவடைந்த நகரத்தார்களுக்கு பண உதவி செய்த விபரம் அறிந்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், துழாவூர் மடாதிபதி ஐயா அவர்களும், நன்கொடையாளர்களும்-பயனாளிகளும் நலமாய் வாழ்க என வாழ்த்தினார்கள். (அவர்களது வாழ்த்துரை வீடியோ மூலம் காட்டப்பட்டது)

விழாவில் நிறைவுரையாற்றிய திரு ம. முருகானந்தம் அவர்கள் “நாம் செய்த உதவி பெரிதல்ல. நம்மவர்கள் என்றென்றும் நலமுடன் வாழ, மீன் கொடுப்பதை விட மீன் பிடிக்க கற்றுக் கொடுப்பது உத்தமம். ஆகவே நமது தொழில் வளர்ச்சிக் கழகம் மூலம் எதிர்காலத்தில் என்ன செய்யலாம் என திட்டமிடுவோம். இதுபோல் எல்லோரும் துணை நிற்போம்” என்று கூறி சென்னை சங்கத் திட்டம் வெற்றி பெற உதவிய எல்லோருக்கும் முக்கியமாக செயலாற்றிய இளைஞரணி நிர்வாகிகளுக்கு நன்றி கூறினார்.

தேசிய கீதம் இசைக்கப்பட்டு, விழா மாலை 6.30 மணிக்கு நிறைவு பெற்றது. **– தகவல் : திரு T. துரைராஜ், சென்னை.**

---

# காப்பு கட்டும் விழா

கழுகக்கூருடையார், பூர்வீகம் - சொக்கம்பட்டி, திருச்சி திரு இராம. நாராயணன் செட்டியார்-ஆனந்தஜோதி ஆச்சி இவர்களது மகன் வழிப்பேரனும், அறந்தாங்கி திரு கரு. சொக்கலிங்கம் செட்டியார்-ஞானம்பாள் ஆச்சி இவர்களது மகள் வழிப்பேரனும், திரு ராம்குமார்-கலையரசி தம்பதியர் மகனுக்கு 18-10-2020 அன்று திருச்சி நாகா இல்லத்தில் **நாகசிவன் (என்கிற) ஹர்னித்** என்று பெயர் சூட்டி சுற்றமும் நட்பும் வாழ்த்த காப்பு கட்டும் விழா இனிதே நடைபெற்றது. **தகவல் : திரு நாகா விஸ்வா, திருச்சி**

# கம்ப இராமயணம் தொடர் வாசிப்பு அருள்மிகு ராமர் பட்டாபிஷேக விழா!!



பொன்னமராவதி, அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கத் தலைவர் திரு M. இராமசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் அ.வ. நகரத்தார் சங்கம் சார்பாக, திலகவதியார் அருள்நெறி மாதர் சங்கத்தினரால் 27-ஆம் ஆண்டு கம்ப இராமாயண தொடர் வாசிப்பு, 26-09-2020 தொடங்கி, 03-10-2020 அன்று இராமர் பட்டாபிஷேக நிகழ்ச்சி நடைபெற்று, 04-10-2020 அன்று காலை ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாட்டுடன் நிறைவு பெற்றது.

இந்த நிகழ்ச்சி மங்கை நாயகர் மன்றத்தில் தினமும் மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் நகரத்தார் பெருமக்களும், ஆன்மீக அன்பர்களும் திரளாக கலந்து கொண்டு திருவருள் பெற்றனர்.

**தகவல் : அ.வ. நகரத்தார் சங்கம், பொன்னமராவதி**

**சங்க செய்திகள்-2**

## சித்தர்கள் பௌர்ணமி பூஜை-ஆலவயல்

ஆலவயல் அருவியூர் வடக்குவளவு நகரத்தார்களால் நடத்தப்படும் 103-வது சித்தர்கள் பௌர்ணமி பூஜை சார்வரி வருடம் ஆவணி மாதம் 16-ஆம் தேதி 01-09-2020 செவ்வாய்கிழமை அன்றும், 104-வது சித்தர்கள் பௌர்ணமி புஜை 01-10-2020 வியாழக்கிழமை அன்றும் சிறப்பாகவும், அரசின் வழிகாட்டுதலின்படியும் எளிமையாக நடத்தப்பட்டது. பூஜையின் போது உலகம் முழுவதும் பரவியிருக்கும் கொரோனா பெரும் தொற்றிலிருந்து மக்கள் பூரண குணமடையவும், தொற்று மேலும் பரவாமல் இருக்கவும், சித்தர்களிடம் வேண்டி, பிரார்த்தனை செய்து வழிபாடு செய்யப்பட்டது.

**தகவல் : திரு பழ. சொக்கலிங்கன், ஆலவயல்**

உ

சிவமயம்

வாழ்க வளமுடன்

anbu

☎ : 04333 - 262095

செல்: 94421 60385
94434 13223

# அன்பு வணிக நிலையம்

64, அண்ணாசாலை, **பொன்னமராவதி - 622408**

புதுக்கோட்டை மாவட்டம்

TEXMO



TATA TISCON
JOY OF BUILDING

AMMAN-TRY
TMT BARS

RAMCO SUPERGRADE
As strong as family bonds.

Dalmia ULTRA

Birla White

UltraTech CEMENT
The Engineer's Choice

**விற்பனையாளர்கள்**

தரத்தில் சிறந்த
**டால்மியா சிமெண்ட்,**

உறுதிமிக்க
**AMMAN - TRY கம்பிகள்,**

நீடித்து உழைக்கும்
**டெக்ஸ்மோ மோட்டார்கள்,**

உலகத்தரம் வாய்ந்த
**நிரோலாக் பெயிண்ட்கள்,**

பாதுகாப்பான
**ஆங்கர் மின் சாதனங்கள்.**

**மற்றும்
அனைத்து
கட்டிடச்
சாமான்கள்,
மின்சாதனப்
பொருட்கள்
உயர் தரத்துடன்
நியாயமான
விலையில் வாங்கச்
சிறந்த நிறுவனம்**

ANCHOR

asianpaints



KANSAI NEROLAC
PAINTS LIMITED

NIPPON PAINT

ashirvad FLOWGUARD

GODAVARI POLYMERS

அன்புடன் அழைக்கின்றோம்....

வாழ்க வளமுடன் மங்கைபாகர் – தேனம்மை துணை வாழ்க நலமுடன்





**Rtn.PHF.Er.M.SETHURAMAN** B.E., MBA., NEBOSH (Dubai-UAE)
IOSH, DSM, DIFSM, MD (Acu), D.Astro, Ex.TNSTC.Ltd.

**S.SHANTHI** B.Com.,

**S.VIJAY** B.E., ABUDHABI, UAE

**CELL : 81223 80075**

www.vijayguesthouse.com








- DELUXE AC ரூம்கள்
- AC ரூம்கள்
- NON AC ரூம்கள்
- பெரிய HALL வசதி
- 24 Hrs WIFI இன்டர்நெட் வசதி
- ஒவ்வொரு ரூமிலும் TV வசதி
- ATTACHED BATHROOMS
- WESTERN TOILETS



# VIJAY GUEST HOUSE

## (LODGE)

**NEAR BUS STAND, MANAPPARAI.**

குறைவான கட்டணத்தில், நிறைவான வசதிகளுடன்

**தரமான தங்கும் விடுதி**

# பொன்னமராவதி அ.வ.ந. சங்க புதிய நிர்வாகிகள் 2020 - 23



பொன்னமராவதி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் 13.9.2020 அன்று தலைவர் அறமனச் செம்மல் திரு அரு.வே. மாணிக்கவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் 2020-23-ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் அதிகாரிகளாக முன்னாள் தலைவர் திரு M.S. முருகப்பன் அவர்களும், திரு அரசு RM.S. ராஜா அவர்களும் செயல்பட்டார்கள்.

தேர்தல் முடிவில் புதிய நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டோர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

தலைவர் - திரு M. இராமசாமி அவர்கள்
அய்யப்பசாமி & கோ.

செயலாளர் - திரு M. சரவணன் அவர்கள்,
விநாயகர் & கோ

பொருளாளர் - திரு C. செந்தில்குரு அவர்கள்
மீனாட்சி புக்ஷாப்.

புதிதாகத் தேர்வு செய்யப் பெற்ற நிர்வாகிகளை, முன்னாள் நிர்வாகிகள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களால் பாராட்டப் பெற்றனர்.

**-தகவல்: திரு M. சரவணன், செயலாளர், பொன்னமராவதி**

பொன்னமராவதி சங்க புதிய நிர்வாகிகள் சிறப்பாக பணிபுரிய அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம் வாழ்த்துகிறது!

**– தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்**

# இராமர் பட்டாபிஷேக விழாவும் விளக்கு பூஜையும்



9-10-2020 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கிருங்காக்கோட்டை அ.வ.ந. சங்கத்தின் சார்பாக மகளிர் திருவிளக்கு பூசை சிறப்பாக நடைபெற்றது.

கிருங்காக்கோட்டையிலுள்ள ராமர் கோயிலில் (பஜனை மடம்) 10-10-2020 அன்று மாலை 5.00 மணிக்கு திரு மு.ந. ராமனாதன் செட்டியார் தலைமையில் கிராமத்தார் ஒத்துழைப்புடன் கிருங்காக்கோட்டை நகரத்தார்கள் சார்பாக சிறப்பாக அன்னதானம் நடைபெற்றது. இரவு 9.30 மணியளவில் நமது நகரத்தார் மகளிர் குழு ஸ்ரீராமர்க்கு மாவிளக்கு வைத்து மற்றும் ஆரத்தி எடுத்து வழிபட்டனர். ஸ்ரீராமர் கோயிலுக்கு சங்கத்தின் சார்பாக ஒலி, ஒளி மற்றும் ஜெனரேட்டர் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்தை முன்னிட்டு இரவு 12 மணி அளவில் ரத ஊர்வலம் நடைபெற்றது. திரு மு. சாமிசெட்டியார் குமாரர்கள் மலர் அலங்காரம் செய்து கொடுத்துள்ளார்கள். திரு N. மாணிக்கம் V. நேரு மற்றும் வணிகர் குழுவினர் வாண வேடிக்கை ஏற்பாடு செய்தார்கள். அனைவரின் ஒத்துழைப்பாலும் விழா மிக சிறப்பாக நடைபெற்றது.

**தகவல் : சி.கு.மகாதேவன், தலைவர், அ.வ.ந.சங்கம், கிருங்காக்கோட்டை.**

**சங்க செய்திகள் : 3**

# விநாயகர் சதுர்த்தி விழா



22.08.2020 அன்று கிருங்காக்கோட்டை அ.வ.ந. சங்கத்தின் சார்பாக பிரான்மலை பழைய கல் மண்டபத்தில் உள்ள விநாயகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் நடைபெற்றது. விழாவில் பொதுநலச் சங்க நிர்வாகிகளும், கிருங்காக்கோட்டை சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**– தகவல் : சி.கு.மகாதேவன், தலைவர், அ.வ.ந.சங்கம், கிருங்காக்கோட்டை.**

# ஸ்ரீ வள்ளித்தாய் அம்மாள் கோயில் கட்ட தாராள நிதி வழங்குவீர்

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் ஆலவயல் பூதமங்கலமூருடையார் பங்காளிகள் வீட்டு குலதெய்வமான ஸ்ரீ வள்ளித்தாய் அம்பாளுக்கு ஆலவயலில் உள்ள பூர்வீகமான இடத்தில் கோயில் வீடு கட்டுவதற்கு விகாரி ஆண்டு தைத்திங்கள் 12-ஆம் நாள் 26-01-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று வாஸ்து பூமி பூஜை செய்யப்பெற்று 23.02.2020 முதல் திருப்பணி வேலைகளை நடைபெற்று வருகின்றது.

திருப்பணிகள் சிறப்பாக நடைபெற பங்காளிகள் பிறந்த மக்கள், மாமன், மைத்துனர்கள், உறவினர்கள் மற்றும் நமது சமூகப் பெருமக்கள் தங்களால் இயன்ற நிதி உதவி வழங்கி திருப்பணி சிறப்பாக முடியவும், கும்பாபிஷேகம் நடைபெற்று அம்மனின் அருள்பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகள் மற்றும் விவரங்களுக்கு திரு பழ. சொக்கலிங்கன் ஆலவயல் அவர்களை 90033 82226 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

உ
சிவமயம்

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

உஷா ஜூவல்லர்ஸ் பைனான்ஸ் டெக்ஸ்

77-78, மீனாட்சி டவர்ஸ், P.T.ராஜன் ரோடு,
பீபீ குளம், மதுரை-2.

: 7373073738

உ

ஸ்ரீ நாகம்மாள் துணை

வாழ்க வளமுடன்

# நாகா ஸ்டோர்ஸ் & டிராவல்ஸ்

நா. விஸ்வநாதன் செல் : 7373-123-111

மொபைல் & DTH ரீசார்ஜ்

அனைத்து வகையான இணையதள செயல்பாடுகள்

EB Bill, LIC Pay, Money Transfer, Mini ATM,

All School & College Fees

தி புரொபஷனல் கூரியர்ஸ் booking point

No. 105, D.R.K. காம்ப்ளெக்ஸ், கிராப்பட்டி,

திருச்சி - 620 012.

# நாகா பேன்ஸி & கிப்ட்

நா. ராம்குமார் செல் : 9500-8282-40

பள்ளிகளுக்கு தேவையான

அனைத்து பொருட்களும் கிடைக்கும்.

Stationary - Fancy - Gift

No. 97, கான்வென்ட் ரோடு, கிராப்பட்டி,


திருச்சி - 620 012.

இராம. நாராயணன்,

தலைவர், அவுந சங்கம், திருச்சி

செல் : 9842362140

# புத்தகம் வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள்



தினந்தோறும் நாளிதழ், புத்தகம் வாசிக்கும் போது மூளையின் பின்பகுதி நரம்புகள் தூண்டப்படும். இந்தப் பகுதியில் தான் நினைவுகளின் தொகுப்புகள் இருக்கும். வாசிப்பு அதிகரிக்கும் போது நிறைய விசயங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும். இதனால் மூளையின் பின் பகுதி நரம்புகள் அதிகமாகத் தூண்டப்படும். இதனால் கூடுதல் சுறுசுறுப்பாக செயல்பட முடியும். ஞாபக சக்தியும் நாளுக்கு நாள் அதிகரிக்கும். கவனம் கூர்மையாகும். நரம்பு மண்டலங்கள் வலுப்பெறும்.

வாசிப்பு பழக்கம்தான் மூளைக்கான பயிற்சியாக அமையும். வாசிப்பதால் மன அழுத்தம் குறையும். மிகச் சிறந்த ஒரு புத்தகத்தால், ஒருவரின் கவனச்சிதறல் பிரச்சனையை சரி செய்ய முடியும். தூக்கம் தொடர்பான பிரச்சனைகள் சரியாகும். குறுகிய எண்ணங்கள் மற்றும் தவறான சிந்தனையிலிருந்து ஒருவரால் விடுபட முடியும். முதியவர்கள் வாசிப்பை பழக்கப்படுத்திக் கொண்டால், மூளை தொடர்பான பிரச்சனைகள் வராமல் தடுக்கலாம். அதுபோல இளம் வயதில் வாசிப்பு அதிகமாக இருந்தால், வயதான பிறகு ஞாபக மறதி தொடர்பான பிரச்சனைகள் 32 சதவீதம் தடுக்கப்படும் என ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

குழந்தைகள் சத்தமாக வாசிப்பதன் மூலம் அவர்களின் பேச்சாற்றலை மேம்படுத்தலாம். கல்வியறிவு என்பது வாசிப்பை அடிப்படையாக வைத்துதான் அமையும் என்பதால் குழந்தைகளின் கற்றல் திறனை அதிகப்படுத்த வாசிப்பு அவசியம். பாடப்புத்தகங்களை மட்டுமே படிக்க வைப்பது தக்க பலன் தராது. அவ்வாறே பல பெற்றோர் செய்கின்றனர். அது தவறு. குழந்தைகளுக்கு ஆர்வமுள்ள அனைத்து புத்தகங்களையும் படிக்க அனுமதிக்க வேண்டும்.

**தினமும் 30 நிமிடங்கள் புத்தகம் வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களின் ஆயுள், இரண்டு ஆண்டுகள் அதிகரிக்கின்றன என அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழக ஆய்வு தெரிவிக்கிறது.**

**– சுப. செல்வம், குரல் ஆசிரியர்.**



# கோயில்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள்



கோயில்களுக்கு செல்ல குழந்தைகளை கண்டிப்பாக பழக்குங்கள். இறை என்று சொன்னால் கேட்கவில்லை என்றால் அறிவியலை கூறுங்கள்.

பூமியில் காந்த அலைகள் அதிகம் வீசப்படும் இடங்களில் தான் கோயில்கள் இருக்கும். சக்தியும் பாஸிட்டிவ் எனர்ஜியும் அதிகம் கொண்டிருக்கும் இது நார்த் போல் சவுத் போல் திரஸ்ட் வகை ஆகும். கர்ப்பகிரகம் அல்லது மூலஸ்தானம் என்று அழைக்கப்படும் மூலவர் சிலைதான் இந்த மையப் பகுதியில் வீற்றிருக்கும். இந்த இடம் தான் அந்த சுற்று வட்டாரத்திலேயே காந்த மற்றும் பாஸிட்டிவ் எனர்ஜி அதிகம் காணப்படும் இடம் ஆகும். இந்த மெயின் கர்ப்பகிரகத்தின் கீழே சில செப்பு தகடுகள் பதிக்கப்பட்டிருக்கும் அது தான் கீழே இருக்கும் அந்த எனர்ஜியை அப்படி பன்மடங்காக்கி வெளிக் கொணரும். அதுபோக எல்லா மூலஸ்தானமும் மூன்று பக்கமும் மூடி, வாசல் மட்டும் தான் திறந்து இருக்கும் அளவுக்கு கதவுகள் இருக்கும். இது அந்த எனர்ஜியை லீக் செய்யாமல் ஒரு வழியாக அதுவும் வாசலில் இடது மற்றும் வலதுபுறத்தில் இருந்து இறைவனை வணங்கும் ஆட்களுக்கு இந்த எனர்ஜி கிடைக்க செய்யப்பட்டது ஆகும்.

கோயிலின் பிரகாரத்தை இடமிருந்து வலமாய் சுற்றி வர காரணம் எனர்ஜியின் சுற்று பாதை இதுதான். அதனால் தான் மூலஸ்தானத்தை சுற்றும்போது அப்படியே எனர்ஜி சுற்றுபாதை கூட நாமும் சேர்ந்து சுற்ற அந்த எனர்ஜி அப்படியே உங்கள் உடம்பில் வந்த சேரும். இந்த எனர்ஜி நமது உடம்புக்கும், மனதிற்கும், மூளைக்கும் தேவையான ஒரு பாஸிட்டிவ் காஸ்மிக் எனர்ஜி.

மூலஸ்தானத்தில் ஒரு விளக்கு கண்டிப்பாய் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும். அது போக அந்த விக்கிரகத்திற்கு பின் ஒரு விளக்கு இருக்கும். அதை சுற்றி கண்ணாடி ஒன்று இருக்கும். அது அந்த எனர்ஜியை அப்படி பவுன்ஸ் செய்யும் ஒரு டெக்னிக்கல் செயல்தான். அதுபோக மந்திரம் சொல்லும் போதும், மணியடிக்கும் போதும் அங்கே செயல்படும் அபிஷேகம் அந்த எனர்ஜியை மென்மேலும் கூட்டி ஒரு கலவையாய் கொண்டு வரும் ஒரு அபரிதமான எனர்ஜி ஃபேக்டரிதான் மூலஸ்தானம் என்பது.

பூக்கள், பச்சை கற்பூரம், துளசி, குங்குமப்பூ, கிராம்பு இதை சேர்த்து அங்கு தாமிர செம்பில் வைக்கப்பட்டு கொடுக்கும் தீர்த்தம் ஒரு ஆன்டிபயாட்டிக். இதை மூன்று தடவை கொடுக்கும் காரணம், ஒன்று உங்கள் தலையில் தெளித்து இந்த உடம்பை புண்ணியமாக்க, மீதி இரண்டு சொட்டு உங்கள் உடம்பை பரிசுத்தமாக்க. இந்த தீர்த்தம் வாய் நாற்றம், பல்சுத்தம் மற்றும் இரத்தத்தை சுத்தப்படுத்தும் ஒரு அபரிமிதமான கலவை. கோயிலுக்கு முன்பெல்லாம் தினமும் சென்று வந்த மானிடர்களுக்கு எந்தவித நோயும் அண்டியது இல்லை என்பதற்கு இதுதான் காரணம்.

கோயிலுக்கு மேல் சட்டை அணிந்து வர வேண்டாம் என சில கோயில்களில் கூறுவதற்கும் இது தான் முக்கிய காரணம். அந்த எனர்ஜி அப்படியே மார்பு கூட்டின் வழியே புகுந்து உங்கள் உடம்பில் சேரும் என்பது ஐதீகம்.

பெண்களுக்கு தாலி அணியும் காரணமும் இதுதான். நிறைய பெண்களுக்கு ஆண்களைப் போன்று இதய நோய் வராமல் இருக்கும் காரணம் இந்த தங்க மெட்டல் இதயத்தின் வெளியே நல்ல பாஸிட்டிவ் எனர்ஜியை வாங்கி, உள்ளே உள்ள கொழுப்பைக் கூட கரைக்கும் சக்தி இருப்பதாக, ஒரு கூடுதல் தகவல்.

பல மைல் தூரத்தில் இருந்து பயணம் செய்திருப்பினும் மூலவரின் தரிசனம் கிட்டும்போது அந்த சில நொடிகளில் அந்த உடம்பில் ஏற்படும் ஒரு மென்மையான சிலிர்ப்பும் ஒரு வித நிம்மதியும் ஏற்படுகிறது என்றால் அதற்கு காரணம் கோயிலின் மூலஸ்தானம் மற்றும் அதில் உள்ள எனர்ஜி. கோயிலின் கொடி

மரத்திற்கும், மூலஸ்தானத்திற்கும் ஒரு நேரடி வயர்லெஸ் தொடர்பு உண்டு. கோயில் மேல் இருக்கும் கலசம் சில சமயம் இரிடியமாக மாற இது தான் காரணம். கீழிருந்து கிளம்பும் மேக்னெட்டிக் வேவ்ஸ் மற்றும் இடியின் தாக்கம் தான் ஒரு சாதாரண கலசத்தையும் இரிடியமாக மாற்றும் திறன் படைத்தது. அது போக பெரும்பாலும் கோயில் இடி தாக்கும் அபாயம் இல்லாமல் போன காரணம் கோயில் கோபுரத்தில் உள்ள இந்த கலசங்கள் ஒரு சிறந்த மின் கடத்தி ஆகும். நல்ல மானிடர் ஒரு நாளைக்கு இரு வேளை கோயிலுக்குச் சென்று வந்தால் மனிதனின் உடல் மட்டுமல்ல அவனின் மனதும், மூளையும் சுத்தமாகும்.

இவ்வளவு புனிதத்துவம் வாய்ந்த கோயில்களுக்கு குடும்பத்துடன் சென்று வர பழகுவோம். குழந்தைகளையும் பழக்குவோம்... அது அறிவியல் ஆகட்டும்... எதுவாகட்டும்... இறை சக்தி நம்மை காக்கட்டும். **– சுப செல்வம், குரல் ஆசிரியர்**


உ

சிவமயம்

உடல் நலம் பேணுவோம்! உளம் மகிழ வாழ்வோம்!!

**கார்த்திக் மெடிக்கல்ஸ்**

காந்திபார்க், கோவை

**காமாட்சி பார்மஸி**



சுக்ரவார்பேட்டை, கோவை

செல் : 95144 52521



எல்லாவிதமான இங்கிலீஸ் மருந்துகளும் கிடைக்கும்

S. கிருஷ்ணசாமி

K. பானுமதி

K. மீனாட்சி B.E.

K. மோகனசுந்தரி B.E.

K. கார்த்திக் B.Sc.,

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர்

சிறுகுடி திரு. க.அ.அ.செ. ஆசை அலங்காரம்-கண்ணகி இல்ல

# திருமண விழா







அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர்

சிறுகுடி திரு. க.அ.அ.செ. ஆசை அலங்காரம்–கண்ணகி இல்ல

# திருமண விழா





மணமக்கள்:

**ஆ. சபரி அலங்கார் B.E.,**

**தி. அன்புபிரியாள் (எ) யுவராணி B.E.,**

மணநாள்:

**28.08.2020 வெள்ளிக்கிழமை**

இடம்:

**அ.வ.ந. திருமண மண்டபம், சிறுகுடி**



அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர்

சிறுகுடி திரு. க.அ.அ.செ. ஆசை அலங்காரம்–கண்ணகி இல்ல

# திருமண விழா







அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர்

சிறுகுடி திரு. க.அ.அ.செ. ஆசை அலங்காரம்–கண்ணகி இல்ல

# திருமண விழா






எங்கள் இல்லத் திருமண விழாவிற்கு
வருகை தந்து நல்லாசி வழங்கிய
அனைவருக்கும் எங்கள் நன்றிகள்!!

**ஆசை அலங்காரம்–கண்ணகி**
சிறுகுடி



அட்டைப்பட விளக்கம்

# கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் இல்லத் திருமண விழா



இந்த இதழின் அட்டைப் படத்தை அலங்கரிப்பவர்கள் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு செ. ஆசை அலங்காரம் B.Sc., – **கண்ணகி** இவர்களின் குமாரன் திரு சபரி அலங்கார் B.E., – யுவராணி B.E., தம்பதியர் ஆவர்.

அ.வ.ந. பொதுநலச் சங்க தோற்றத்திற்கு முன்பு நம் நகரத்தார் களின் சார்பில் பிரான்மலை ஸ்ரீ மங்கைபாகர் – தேனம்மை சுவாமி திருக்கோயில் காலசந்திக் கட்டளையை பொறுப்பேற்று, நகர சொத்துக்களையும், நிலங்களையும் பராமரித்து, காப்பாற்றி அதன் வருமானத்தின் மூலம் பூஜைகளை முறையாக நடத்தி வந்த பெரியவர்களில் சிறுகுடி க.அ. அலங்காரம் செட்டியார் முதன்மையானவர். அவர் நம் பதினான்கு ஊர்களின் தாய் ஊரான சிறுகுடியைச் சேர்ந்தவர். நாட்டாண்மைக்கார செட்டியார் என்கிற பெருமையோடு பதினான்கு ஊர் நகரத்தார்கள் கூட்டத்திற்கு தலைமையேற்று பல ஆண்டுகாலம் நடத்தி வந்தவர். ஆறாம் திருவிழா மற்றும் தைப்பூச விழா போன்ற கோவில் விழாக்களை நடத்தி வந்தவர். என் தாத்தா க.அ. அலங்காரம் செட்டியார் ஊர் பொறுப்பு, நகரப் பொறுப்பு மற்றும் இவைகளின் வரவு செலவு கணக்குகளை பராமரித்தல், கோவில் நகை பொறுப்பு, கோவில் காரணக்காரர் என்கிற பல பொறுப்புகளில் இருந்து செயல்பட்டு, கிராமத்தினர்களின் மத்தியில் சிறுகுடி நகரத்தார்களுக்கு பெருமை தேடித் தந்தார்கள். TVS பஸ் கம்பெனி, பஸ் போக்குவரத்து தொடங்குவதற்கு முன்பே, வெள்ளையர்களின் ஆட்சிக் காலத்தில் பஸ் கம்பெனி வைத்து பொது போக்குவரத்து நடத்திய சாதனைக்கு சொந்தக்காரர்.

தற்சமயம் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக உள்ள நான் அவரின் மகன் செம்பன் செட்டியாரின் மகன். க.அ. அலங்காரம் செட்டியார் அவர்களின் பெருமையையும், நினைவையும்

போற்றும் வகையில் எங்கள் குடும்பத்தை “க.அ.அ. குடும்பம்” என்றே கிராமத்தில் அழைப்பார்கள். நான் க.அ.அ. பாரம்பரியம் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். கடந்த மூன்று தலைமுறை காலமாக செம்மையாக, நேர்மையாக எந்தவித சரிவும் இன்றி முன்னேற்றப்பாதையில் சீராக நடைபோட்டு வருகின்றோம். என் சகோதரர் திரு S. இளங்கோவன் B.E. அவர்கள் முன்னாள் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களின் உறவினர் ஒருவரின் தொழிற்சாலையில் மும்பையில் பணியாற்றி வந்தார். பின் சொந்தத் தொழில் தொடங்க வேண்டும்; அதன் மூலம் கிராமப்புறத்தில் வேலை வாய்ப்பை பெருக்க வேண்டும்; தான் வேலை பார்ப்பவராக இல்லாமல் வேலை கொடுப்பவராக - தொழில் முனைவோராக இருக்க வேண்டும் என்கிற உந்துதலால் சுண்ணாம்புக்கல் அரைக்கும் தொழிற்சாலையைத் தொடங்கி, கடந்த 34 ஆண்டு காலமாகச் சிறப்பாக நடத்தி வருகிறார். அவரின் மகன் திரு விஜய் அலங்கார் B.E., தன் தந்தைக்கு உதவியாக இருந்து செயல்பட்டு தொழிலை மேம்படுத்தி வருகிறார்.

எனது மகன் திருவளர்ச் செல்வன் A. சபரி அலங்கார் B.E., அவர்களுக்கும், இந்நாள் பொதுநலச் சங்கத் தலைவர் திரு M. மாணிக்கம் அவர்களின் மகள் வழி பேத்தியும், முன்னாள் பொதுநலச் சங்கத் தலைவர் தெய்வத்திரு A. சேதுராமன் செட்டியார்அவர்களின் மகன் வழி பேத்தியும், தஞ்சாவூர் தெய்வத்திரு A.S. தியாகராஜன் - கவிதா தம்பதியரின் மகளுமான திருவளர்ச்செல்வி யுவராணி B.E., அவர்களுக்கும் சுப மங்கள சார்வரி ஆண்டு ஆவணித் திங்கள் 12-ஆம் நாள் (28-08-2020) அன்று சிறுகுடி அ.வ.ந. திருமண மண்டபத்தில் இறை அருளால், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் நல்வாழ்த்துக்களோடு திருமணம் இனிதே நடைந்தேறியது.

பாசத்தை ஊட்டி வளர்த்த என் தாயார் செ. வெள்ளையம்மாள் ஆச்சி என் தந்தையாரின் மறைவுக்குப் பின்னர் எங்கள் குடும்பத்தையும், சொத்துக்களையும் பாதுகாத்தும் பராமரித்தும், எங்களுக்குக் கல்வி புகட்டியும், எங்களை வளர்த்து ஆளாக்கிய-வாழவைத்த தெய்வங்கள் என் தாய்மாமன்மார்கள் கு.அ.வெ. மாணிக்கம் செட்டியார், கு.அ.வெ. ஞானேஸ்வரன் செட்டியார் ஆகியோர்கள் தெய்வ நிலையிலிருந்து மணமக்களுக்கு பாசத்தோடு ஆசி வழங்கி விண்ணிலிருந்து வாழ்த்த மணவிழா இனிதே மங்களமாய் நிறைவு பெற்றது. ✶✶✶✶✶

## மணமகனின் பாசமிகு உறவுகள்

**பெற்றோர்கள்** : திரு S. ஆசை அலங்காரம் – திருமதி கண்ணகி

**சித்தப்பா சித்திமார்கள்** : S. இளங்கோவன் B.E. – தெய்வத்திரு மாதவி சிறுகுடி,
M. சுவாமிநாதன் B.Com., – பேபிராணி, கோவை.
K. கணேசன் M.Sc.,– தென்னரசி D.Pharm கோவை.
M. கனகராஜ் – இளவரசி, D.Pharm கோவை.
M. சோலைராஜன் – ராஜாத்தி, திருவையாறு
K.அண்ணாமலை M.E.,M.Sc.,–ராதா B.Com., சிங்கப்பூர்.
M. கண்ணன் D.M.E., – ஜான்ஸிராணி, கோவை

**அய்யா, அப்பத்தா** : தெய்வத்திருவாளர்கள் க.அ. செம்பன் செட்டியார் – வெள்ளையம்மாள் ஆச்சி.

**அய்யா, அம்மணி** : தெய்வத்திருவாளர்கள் கு.அ.வெ. மாணிக்கம் செட்டியார் – மரகதம் ஆச்சி
தெய்வத்திரு கு.அ.வெ. ஞானேஸ்வரன் செட்டியார் – நலமுடன் மீனாள் ஆச்சி.

**சகோதரர்** : I. விஜய் அலங்கார் B.E., – பாக்யலெட்சுமி M.B.A.,

**சகோதரி** : A. கார்த்திகா B.Sc.,

**மாமா–மாமி** : G. மைனர் வெள்ளைச்சாமி B.L., – தங்கமீனாள்
G. செந்தில்நாதன் D.T.M., – அபிராமி B.Com.,
M. தீப அலங்கார் M.Sc., – பிரியதர்சினி B.Sc.,
S. இளையராஜா M.Sc.,– ரேவதி M.Sc., B.Ed.,
S. சதன்ராம் B.B.A., - செம்பொன் மாணிக்கம் B.E.,
N. சரவணன் D.Mine - கற்பகம்

### குழந்தைச் செல்வங்கள் :

D. நிருபமா B.E., D.P. தீபிகா B.Com., M.D. க்ரித்திக்வாசன், P. நிவேதா, IR. சாமி ஆஸ், IR. மித்ரன் V. சாதனா, V. சர்வேஸ் அலங்கார்

## மணமகளின் பாசமிகு உறவுகள்

பெற்றோர்கள் : தெய்வத்திரு A.S. தியாகராஜன்–நலமுடன் கவிதாஆச்சி

அய்யா–அம்மணி : Er. M. மாணிக்கம் D.E.E., – அன்பு ஆச்சி

மாமா–அத்தை : M. பார்த்திபன் M.A.,M.Sc.,(Yoga) – சிவசெண்பகம் B.A.,D.TEd.,

சித்தப்பா – சித்தி : S. சிவக்குமார் B.A., – M. ஜெயந்தி B.Com.,
M. அசோகன் – சாந்தி B.A.

### குழந்தைச் செல்வங்கள் :

P. நிவேதினி B.Sc., B.A.(Hindi), P. மகாலெட்சுமி B.A.(Hindi),

வாழ்க வையகம் உ வாழ்க வளமுடன்

# நம்மவர்களுக்கு மட்டும் நல்ல DISCOUNT

மருந்துக்கடை வணிகம் செய்யும் நம்மவர்களுக்கு

**(அ.வ.ந. உறுப்பினர்களுக்கு) மட்டும்**

எங்களிடம் வாங்கும் மருந்துகளுக்கு

**CASH BILL க்கு**
**CASH DISCOUNT**

**6% முதல்**

**கீழ்கண்ட கம்பெனிகளுக்கு**

*1. SUN PHARMA*
*2. GLAXO*
*3. CIPLA*
*4. MANKIND*
*5. PFIZER*
*6. LUPIN*
*7. E.MERCK*
*8. NOVONORDISK*
*9. FOURTS INDIA*
*10. RANBAXY*
*11. TTK*
*12. WOCKHARDT*
*13. HIMALAYA*
*14. UNIQUE*

**மற்றும் குறிப்பிட்ட** Fast Moving **மருந்துகளுக்கு**
Special Offer, Special Discount 10% **வரை**

SS.**பார்மா, 30 கஸ்தூரி பாய் வீதி 3,**
**கணபதி, கோவை - 6**
**K.SIVANESAN - 98424 73497**
Email Id : ordertossp@gmail.com
*T&C APPLY
web order **வசதி உண்டு.**

# புதுமண தம்பதிகள்

மேலூருடையார் சிறுகுடி திரு க.அ.அ.செ. ஆசை அலங்காரம் செட்டியார் B.Sc., – ஆ. கண்ணகி ஆச்சி இவர்களின் மகன் திருநிறைச் செல்வன் **சபரி அலங்கார் B.E.,** பாளையூர் அம்பலங்கொண்டார் தஞ்சாவூர் தெய்வத்திரு A.S. தியாகராஜன் செட்டியார் – கவிதா ஆச்சி இவர்களது மகள் திருநிறைச் செல்வி **அன்புபிரியாள் (எ) யுவராணி B.E.,** இவர்களது திருமணம் 28.08.2020 வெள்ளிக்கிழமை சிறுகுடி அருவியூர் வடக்குவளவு நகரத்தார் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

**தகவல் : திரு சொ. இளங்கோ, தஞ்சாவூர்**

பொன்னமராவதி பூண்டிலூருடையார், V. புதூர் திரு ம. சோலைராஜன் செட்டியார் – பிரபா ஆச்சி இவர்களது மகள் திருநிறைச் செல்வி **சண்முகப்பிரியா B.Com.,** பாளையூர் அம்பலங் கொண்டார், ஒடுவன்பட்டி, திரு ச. மகாலிங்கம் செட்டியார் – செண்பகநந்தினி ஆச்சி இவர்களது மகன் திருநிறைச்செல்வன் **ம. சண்முகராஜா D.M.E.** இவர்களது திருமணம் சிவகங்கை மாவட்டம் எஸ். புதூர் மங்கைபாகர் – தேனம்மை திருக்கோயிலில் 06-09-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று சுற்றமும் நட்பும் சூழ சிறப்பாக நடைபெற்றது.

**– தகவல் : திரு சொ. இளங்கோ, தஞ்சாவூர்**

பொள்ளாச்சி திரு ச. தட்சிணாமூர்த்தி செட்டியார் – கலாராணி ஆச்சி இவர்களது குமாரன் திருநிறைச் செல்வன் **D. ராஜ்குமார் M.E.,** (Structural), Volta Green Structures, Hyderabad, திருச்சி உறையூர், பூர்வீகம் புழுதிபட்டி அரும்பாக்கிளையார் திரு மா. இராஜேந்திரன் செட்டியார் – சுஜாதா ஆச்சி இவர்களின் குமாரத்தி திருநிறைச் செல்வி **R. சிவபிரியா B.Com.,** ஆகியோரின் திருமணம் திருச்சி, தில்லைநகர், ஸ்ரீ கௌரி கிருஷ்ணா ஹோட்டல் – கான்ஃப்ரன்ஸ் ஹாலில் 04.09.2020 அன்று சுற்றமும் நட்பும் சூழ சிறப்பாக நடைபெற்றது.

**தகவல் : திரு S. ராஜா B.Com., அன்னூர்**

பூர்வீகம்-சொக்கம்பட்டி கமுகக்கூருடையார், சென்னை, தெய்வத்திரு கி. ஆதப்பன் செட்டியார் - நலமுடன் திருமதி ஆ. செண்பகவள்ளி ஆச்சி இவர்களின் புதல்வன் திருநிறைச் செல்வன் **நல்லபாகன் (எ) ஆ. கார்த்திக் D.H.M.C.T.,** ஆமலூருடையார், மன்னார்குடி திரு வெ. முருகேசன் செட்டியார் - திருமதி மு. தனலெட்சுமி ஆச்சி இவர்களின் புதல்வி திருநிறைச்செல்வி **மு. ஸ்ரீமதி B.Com., D.C.S., இவர்களின்** திருமணம் மன்னார்குடி A.K.S. திருமண மண்டபத்தில் 29-10-2020 வியாழக்கிழமை அன்று சுற்றுமும் நட்பும் சூழ சிறப்பாக நடைபெற்றது. **- தகவல் : திரு ஆ. முத்துக்குமார், சென்னை**

பெங்களூர், பூர்வீகம்-புழுதிபட்டி, பொன்னமராவதி பூண்டிலூருடையார் தெய்வத்திரு மா. தங்கராஜன் செட்டியார்- திருமதி அழகுமீனாள் ஆச்சி இவர்களது புதல்வன் திருநிறைச் செல்வன் **T. விமல்ராஜன் M.E.,** பூர்வீகம் கல்லம்பட்டி, கழனிவாசலூருடையார் சென்னை திரு N. ஜெயராமன் செட்டியார் - திருமதி தேன்மொழி ஆச்சி இவர்களின் புதல்வி திருநிறைச் செல்வி **N.J. கீர்த்தனா B.Arch. M.Des.,** இவர்களின் திருமணம் பெங்களூர் Elaan Convention Centre ஹாலில் 30-08-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று சுற்றமும், நட்பும் சூழ சிறப்பாக நடைபெற்றது. - **தகவல் : திரு த. சுந்தர்ராஜன், பெங்களூர்**

சொக்கம்பட்டி, கமுகக்கூருடையார் திரு ஆ.மு.சதாசிவம் செட்டியார் - ச. சக்தீஸ்வரி ஆச்சி இவர்களது குமாரன் திருவளர்செல்வன் **ச. நாகேஸ்வரன் (எ) வெங்கடேஸ்வரன் B.Com (CS)., CA (Inter),** பொள்ளாச்சி, பூர்வீகம் சிறுகுடி, கல்வாசநாட்டு சுந்தரபாண்டியபுரத்து நன்நெறி பூண்டிலூருடையார் திரு சிவ. மணிவண்ணன் செட்டியார் - சந்திரா ஆச்சி இவர்களது குமாரத்தி திருவளர்செல்வி **அருள்நிதி ம. பொன்னழகி (எ) வினோதினி B.Tech., M.E., M.A. (Yoga) இவர்களின்** திருமணம் தஞ்சாவூர் பிரகதமணி A/C ஹாலில் 29.10.2020 அன்று சுற்றமும், நட்பும் வாழ்த்த மிகச் சிறப்பாக நடைபெற்றது. **தகவல் : திரு சுப. ராஜகோபால், நங்கநல்லூர்**

# புதிய கல்விக்காவலர்கள்

## கல்விக்காவலர் - 33



நாவலூருடையார்
தெய்வத்திரு. சித. மாணிக்கம் செட்டியார் -
அழகுமீனாள் ஆச்சி
பொய்யாமணிப்பட்டி

### கல்விக்காவலர் குடும்பத்தினர்

**பெற்றோர் :**
தெய்வத்திரு. கதிரேசன் (ஏ) சிதம்பரம் செட்டியார்
திருமதி. விசாலாட்சி ஆச்சி.
**மகன் - மருமகள் :**
மா. சோமசுந்தரம் - யோகலட்சுமி
மா. கதிரேசன் - நாகராணி
**பேரன், பேத்திகள் :** சந்தோஷ், சாந்தினி, குஷி
**மகள் - மருமகன்கள் :**
சிமா. தமிழரசி - ம. கண்ணன், புழுதிபட்டி
மா. மாலதி - சீனிவாசன், தஞ்சை.
பேரன், பேத்திகள் : விக்னேஷ், கிஷோர், திபிகா, நவீன்
என்றும் வாழ்க வளமுடன்! வாழ்க வளமுடன்!

## கல்விக்காவலர் - 34



வரதலூருடையார்
ந. செல்வம் செட்டியார் -
சிவயோகம் ஆச்சி
புழுதிபட்டி / கோவை

### கல்விக்காவலர் குடும்பத்தினர்

**பெற்றோர் :**
தெய்வத்திரு. பி.பி. நல்லசின்னான் செட்டியார்
திருமதி. பாஞ்சாலி ஆச்சி.
**மகன் - மருமகள் :**
செ. மாதவன் - சுசிலா
ந.செ. அசோகா - அன்புமீனாள்
செ. ரவிராஜன் - சுபமயில்
**பேரன், பேத்திகள் :**
மா. யோகேஷ், மா. யோகபிரியா பரணீதரன்,
அ. யோகயாழினி, அ. ப்ரணிதாஸ்ரீ, அ. அகஸ்தியா,
ர. அரவிந்த், ர. அபூர்வா
என்றும் வாழ்க வளமுடன்! வாழ்க வளமுடன்!

## கல்விக்காவலர் - 35



பழநி ஆதிசைவ
அன்னதான மடம்
அருள்மிகு பழநி ஆண்டவர்
அறக்கட்டளை

### கல்விக்காவலர் நிர்வாகிகள்
### பழநி ஆதிசைவ அன்னதான மடம்
### அருள்மிகு பழநி ஆண்டவர் அறக்கட்டளை

நிர்வாகிகள்;

1. திரு தே. பரமானந்தம் செட்டியார், திண்டுக்கல்
2. திரு N. செல்வம் செட்டியார், கோவை
3. திரு A.P. ஸேதுராமன் செட்டியார், கோவை

## கல்விக்காவலர்-36



மேலூருடையார்
தெய்வத்திரு செ. பெ.அ. அலங்காரம் செட்டியார்
(ஏ) சேதுராமன் செட்டியார்-செம்பாயி ஆச்சி.

### கல்விக்காவலர் குடும்பத்தினர்

**பெற்றோர் :**
தெய்வத்திரு செ.பெரிய அலங்காரம் செட்டியார்-
பாப்பாத்தி ஆச்சி
**மகள்கள் - மருமகன்கள் :**
திருமதி திலகம் ஆச்சி - இளங்கோ செட்டியார்
திருமதி யோகாம்பாள் (ஏ) கீதா - திருவாசகம்
**பேரன், பேத்திகள் :**
திருமதி இ. நாகேஸ்வரி (ஏ) சுகண்யா - ராகுல்
இ. நாகார்ஜுன், தி. வித்யஸ்ரீ, ரா. ஆராத்யா
என்றென்றும் வாழ்க வளமுடன்!


அருவியூர் நகரத்தார் குரல் 2020

# வாழ்க்கையே கணக்கு கணக்கே வாழ்க்கை

## வயது 10 முதல் 25 வரை

தீய பழக்கங்களைக் குறைத்துக் கொள் (கழித்தல்)
நல்ல பழக்கங்களைக் கூட்டிக் கொள் (கூட்டல்)
திறமையை பெருக்கிக் கொள் (பெருக்கல்)
நல்ல வாழ்க்கையை வகுத்துக் கொள் (வகுத்தல்)

## வயது 26 முதல் 40 வரை

செலவை குறைத்துக் கொள் (கழித்தல்)
வருமானத்தைக் கூட்டிக் கொள்(கூட்டல்)
சேமிப்பைப் பெருக்கிக் கொள் (பெருக்கல்)
செழிப்பான வாழ்க்கையை வகுத்துக் கொள் (வகுத்தல்)

## வயது 41 முதல் 55 வரை

உணவை, ஆசையை குறைத்துக் கொள் (கழித்தல்)
நடையை கூட்டிக் கொள் (கூட்டல்)
சிரிப்பை பெருக்கிக் கொள் (பெருக்கல்)
உடல் ஆரோக்கியத்திற்கான வழியை வகுத்துக் கொள் (வகுத்தல்)

## வயது 55 முதல் ......

பேராசையை, கோபத்தை, பகைமையை குறைத்துக் கொள் (கழித்தல்)
அன்பைக் கூட்டிக் கொள் (கூட்டல்)
ஆன்மீகத்தைப் பெருக்கிக் கொள் (பெருக்கல்)
நோயற்ற வாழ்வை வாழ வழி வகுத்துக் கொள் (வகுத்தல்)

**– திருமதி தேவிகா ராஜவேலு, பொன்னமராவதி.**

*With Best Compliments From*

## DEEPA ERECTORS PRIVATE LIMITED

NO.16/5,1st MAIN ROAD, RAMAKRISHNA NAGAR,
ERNAVOOR, CHENNAI - 600 057 PH:044-25731065

## PHONEIX OILFIELD SERVICES & CONTRACTING LLC

P.O.BOX: 1151, WADI KABIR P.C.117,
SULTANATE OF OMAN PH:+96898810771



**Specialists in construction of Storage tanks, Pressure Vessels, Pipelines and Blasting & Painting in India & Overseas.**

**R.PARAMASIVAM B.E**
**MANAGING DIRECTOR**
**Ph:9884660379**

**PA.MATHIVANAN B.E - A.NIVETHA B.E, M.B.A**
**PA.SHANKAR B.E, M.S (SWEDEN)**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 22-07-1955 மறைவு: 08-10-2020

## தெய்வத்திரு. மூ.கு. பாண்டியன் செட்டியார்

பொன்னமராவதி (பூர்வீகம்: சொக்கம்பட்டி)

பார் அளவு பாசமும்! ஆழிபோல் அன்பும்!–சிம்மகுண சினமும்!
இரு மகன்களை எங்கும் புகழும் குணமும்!–வற்றாற ஈகை குணம் கொண்டு
தரணியில் பவனி வந்ததும்–போதும் என நினைத்தார் போலும்!
மாமழையும் பொழிந்ததப்பா! நீங்கள் மனையை விட்டுச் செல்கையில்
பரிதவித்து நின்றோமப்பா! இருந்தபோதும் பொறுத்துக் கொண்டோம்!
நீங்கள் கயிலை சென்று சேர்ந்தமைக்கு...

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மனைவி : **திருமதி. பா. சந்திரா**

மூத்த மகன்: **திரு. பா. மோகன் B.E.,**

மருமகள் : **திருமதி. மோ. சிவரஞ்சனி B.Sc., B.Ed. ,**

பேத்தி : **மோ. கார்முகில்**

இளைய மகன் : **செல்வன். பா. கார்த்திக் M.E.,**

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
17-03-1969

மறைவு
30-10-2017

**தெய்வத்திருமதி S. பானு**
திருபுவனம்

நீ உயிராலும், உடலாலும்
மண்ணுலகை விட்டு
விண்ணுலகம் சென்றாலும்
உனது நினைவலைகள்
எப்பொழும் எங்கள் நெஞ்சங்களில்
அலை மோதிக் கொண்டேயிருக்கும்!!

*என்றென்றும் நீங்கா அன்புடன்*

**கணவர்** : திரு S. சாமிநாதன்
**தாயார்** : திருமதி N. சத்யா ஆச்சி
**அண்ணன்** : திரு N.N. சாமி
**அண்ணி** : திருமதி N. அன்னம்மா
N. சாய்ரமணா, N. சாய் மீனாள்
**தம்பி** : N. அன்பு - திருமதி A. ராஜேஸ்வரி,
A. கண்மணி, A. சாய்நந்தினி
திருபுவனம்.

# சிவபாதம் சேர்ந்தார்

**வெள்ளி வெற்பின் மேல், மரகதக் கொடியுடன் விளங்கும்**
**தெள்ளு பேரொளிப், பவள வெற்பு என, இடப்பாகம்**
**கொள்ளும் மாமலையாளுடன், கூட வீற்றிருக்கும்**
**வள்ளலார் தம் பாதம், வந்து அணைந்தார்.**

**– திருமுறை**



- பொன்னமராவதி சந்திரா சவுண்ட்ஸ் ராமநாதன் செட்டியாரின் மூத்த மகனும், R.R. விஜய்யின் தகப்பனாரும், உஷாலேடீஸ் சென்டர் உரிமையாளருமான **திரு ராஜேந்திரன்** அவர்கள் 05-09-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். **தகவல் : திரு நா. திருநாவுக்கரசு, பொன்னமராவதி**

---

- கோவை பெ. காந்தி அவர்களின் தந்தை **வே. பெரியசாமி செட்டியார்** 14-09-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரின் நல்லடக்கம் கோட்டையூரில் (சிறுகுடி) நடைபெற்றது. **தகவல் : திரு A.S. முருகேசன், சென்னை.**

---

- கொட்டாம்பட்டி தெய்வத்திரு ம.சி.கு.மு. மலையாண்டி செட்டியார் மனைவியும் திரு அய்யப்பன் அவர்களின் தாயார் **திருமதி தவமணி ஆச்சி** அவர்கள் கொட்டாம்பட்டி இல்லத்தில் 19-09-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திரு ம.சி.கு.கு. கணேசன், கோவை**

---



- கோவை திரு A. ஆறுமுகம், அவர்களின் அண்ணனும், திருமதி வளர்மதி ஆச்சி அவர்களின் கணவருமாகிய **திரு R.M.A. மணிவாசகம் செட்டியார்** அவர்கள் 17-09-20 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திரு A. ஆறுமுகம், கோவை.**

---

- சிறுகுடி **கு.வே.ந.சி. குமரன் செட்டியா**ர் 04-10-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். (அரண்மனை தோட்ட வீட்டுக்காரர்கள்) **தகவல் : வாட்ஸ்அப் செய்தி**

- மலேசியா அரு.சோம அலங்காரம் செட்டியார், அருள்பெருஞ்ஜோதி ஆச்சி அவர்களின் மகன் வழி பேத்தியும், பொன்னமராவதி, இருப்பு பனையபட்டி சே. நாகப்ப செட்டியார் - சேதுமீனாள் ஆச்சி அவர்களின் மகள் வழி பேத்தியும், பொன்னமராவதி திரு AL. ராஜா - புவனேஸ்வரி அவர்களின் **புதல்வி விஜயஸ்ரீ** (வயது 8) 21-09-2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

**தகவல் : திரு மா. வடிவேல்**

---

- எஸ். புதூர் தெய்வத்திரு வெ. காசி செட்டியார் மனைவியும், தமிழ் மருந்துக்கடை திரு கா. கதிரேசன் செட்டியார் அவர்கள் தாயாருமான **திருமதி கா. சிந்தாமணி ஆச்சி** 22-09-2020 இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திரு மா. வடிவேல், பொன்னமராவதி செல்: 99653 73577**

---



- பூர்வீகம் - புழுதிபட்டி, மதுரை அ.வ.ந. சங்கத் தலைவரும், கல்வி காவலருமான **திரு M.M. தியாகராஜன் செட்டியார்** அவர்கள் 04-10-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்கள். **தகவல் : M.S. ராஜேஸ், சென்னை**

---




- எஸ். புதூர் வாழ்வுநிறை மு.த.ம. மயிலப்ப செட்டியார் - சிவபாக்கியம் ஆச்சி இவர்களின் இளைய மகனும் பொள்ளாச்சி கடன் உதவி செய்வோர் கழகத் தலைவருமாகிய திரு. **தங்கையா செட்டியார் அவர்கள்** 15.10.2020 அன்று பொள்ளாச்சியில் இயற்கை எய்தினார்க**ள்.** **தகவல் : சொ. முருகேசன், சிவகாசி.**

---

- செம்பூதி மறைதிரு தீ.பழ. மங்கைபாகன் செட்டியார் மனைவியும், திண்டுக்கல் திரு தே. பரமானந்தம் செட்டியார், புதுப்பட்டி திரு வே. ராஜேந்திரன் செட்டியார், கோயம்புத்தூர் திரு A.P. ஸேதுராமன் செட்டியார் இவர்களது சிறிய தாயாருமான **திருமதி ம. சிவஜோதி ஆச்சி** அவர்கள் 02-09-2020 அன்று காலை திருச்சியில் இறைவனடி சேர்ந்தார்கள். **தகவல் : வாட்ஸ் அப் செய்தி**

- பூர்வீகம் செம்பூதி, தற்போது திண்டுக்கல்லில் வசித்து வந்த ஐயா திரு T.P.L. நடராஜன் செட்டியார் அவர்கள் 25.08.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.



**தகவல் : வாட்ஸ்அப் செய்தி**

---

- பொன்னமராவதி அம்மன் சன்னதி வீதி, திரு மோகன் கார்த்திக் அவர்களின் தந்தையும், புதுப்பட்டி மகளிர் மேல்நிலைப்பள்ளியின் சத்துணவு அமைப்பாளர் திருமதி சந்திரா ஆச்சி அவர்களின் கணவரும், பொன்னமராவதி நகர தி.மு.கழக முன்னாள் செயலாளருமான **திரு பாண்டியன் செட்டியார்** அவர்கள் 08-10-2020 அன்று பொன்னமராவதியில் இறைவனடி சேர்ந்தார்கள்.



**தகவல் : திரு பா. மோகன் கார்த்திக், பொன்னமராவதி.**

---

# கண்ணீர் அஞ்சலி



## தெய்வத்திருமதி மா. தனபாக்கியம் ஆச்சி

(தெய்வத்திரு **S. மாணிக்கம் செட்டியார்** அவர்களின் துணைவியார்)

பொன்னமராவதி

மறைவு : 28.09.2020

*என்றும் உங்கள் நினைவுடன்*

மகன் : திரு **S.M. சொக்கலிங்கம் - தேன்மொழி**

மகள்கள் : தெய்வத்திருமதி **ராஜேஸ்வரி - ராமலிங்கம்**

திருமதி **பானுமதி - மகாலிங்கம்**

திருமதி **தமிழ்ச்செல்வி - முருகானந்தம்**

# கர்ம வினை

உலகில் கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். என்றாலும், நாம் பழக்கம் வைத்துக் கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் மட்டுமே. ஆனால் ஏதோ ஒரு குறிப்பிட்ட நபர் நமக்கு துணைவராக அல்லது துணைவியாக அமைவது ஏன்? நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விலும் ஒரு கர்மாவை நாம் ஏற்படுத்துகிறோம். அதாவது அந்தக் கர்மாக்களின் மூலம் ஒன்று நாம் ஏதாவது பெற்றுக் கொள்கிறோம். அல்லது அடுத்தவருக்கு ஏதேனும் ஒரு உபகாரம் செய்கிறோம். சில சமயங்களில் ஏமாற்றப்படுகிறோம். பல சமயங்களில் ஏமாற்றுகிறோம். சிலருக்கு நல்லது செய்கிறோம். பலரிடமிருந்து அளவுக்கு அதிகமாக நன்மைகளைப் பெற்றுக் கொள்கிறோம். இந்தக் கொடுக்கல் வாங்கலே "ருண பந்தம்" எனப்படுகிறது.

சிலருடைய உறவுகள் ஆனந்தத்தைக் கொடுக்கிறது. சிலருடைய வருகை மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. சிலர் கூடவே இருந்து தொல்லைப்படுத்துகிறார்கள். சிலரின் வருகை துக்கத்தை ஏற்படுத்துகிறது. பல சமயங்களில் இது ஏன் நிகழ்கிறது என்று தெரியாமலேயே தன் போக்கில் நம் வாழ்வில் பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. கனவில் கூட காண முடியாத பல ஆச்சரியங்கள் நமது வாழ்க்கையிலே சில சமயங்களில் ஏற்படுகிறது. இதற்கெல்லாம் என்ன காரணம்? ஏன் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள்? நாமே நம் தாயை, தந்தையை, சகோதர சகோதரிகளை, நண்பர்களை, மனைவியை, கணவனை, பிள்ளைகளை தேர்ந்தெடுப்பதில்லை. நண்பர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்று யாரேனும் கூறலாம். ஆனாலும் அதுவும் தானே நிகழ வேண்டும். நம்மால் உருவாக்க முடியாது. முயற்சி மட்டுமே நம்முடையது. முடிவு நம் கையில் இல்லை.

ஒரு சிலர் நம் வாழ்க்கையிலிருந்து திடீரென்று காணாமல் போய்விடுவர். அது இறப்பால் மட்டும் அல்ல. பல காரணங்களினால் நிகழும். அதே நபர் மீண்டும் நம் வாழ்வில் வேறு கோணத்தில் வேறு பார்வையில் தோன்றுவர். ஏதோ

ஒன்று நம்மை அடுத்தவர் பால் ஈர்க்கிறது. அல்லது அடுத்தவரை காரணம் இல்லாமல் வெறுக்க வைக்கிறது. அது என்ன? சமன் செய்யாமல் மிச்சம் வைத்திருக்கும் கர்ம கதிகளின் எச்சங்களே அவ்வாறு ஒரு ஈர்ப்பை அல்லது வெறுப்பை ஏற்படுத்துகிறதா? இதற்கெல்லாம் நமக்கு தெரிந்த ஒரே காரணம் நம்முடைய “கர்ம வினை” தான். இது நாள் வரை எத்தனையோ பிறவிகளை நாம் எடுத்திருக்கலாம். எல்லாப் பிறப்பிலும் பலப்பல பாவ புண்ணியங்களை சேர்த்திருக்கிறோம். அந்தக் கூட்டின் பெயரை **“சஞ்சித கர்மா”** எனப்படுகிறது. அதன் ஒரு பகுதியை இந்தப் பிறவியில் அனுபவிக்க கொடுக்கப்படுகிறது. அதுவே **“பிராப்தக் கர்மா”** எனப்படுகிறது. இந்த பிராப்தக் கர்மா நிறைவடையாமல் நம்முடைய இந்தப் பிறவி முடிவடையாது. நாம் இவ்வுலக வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற முடியாது. இந்த வாழ்க்கை நடைமுறையில் நாம் ஒவ்வொருவரிடமும் ஏதேனும் ஒன்றை அல்லது கற்பிப்பது நம் துணையுடன் மட்டுமே.

இது தவிர **“ஆகாம்ய கர்மா”** என்று ஒன்றுள்ளது. அது கொடுக்கப்பட்டுள்ள இந்தப் பிறவியில் நாம் செய்யும் நல்ல கெட்ட செயல்களால் ஏற்படுவது. யாராலும் யாருக்கும் எந்த கர்மாவையும் ஏற்படுத்தவோ உருவாக்கவோ முடியாது. அவரவர்கள் செய்வினையின் பயனாலேயே அவரவர்கள் அனுபவம் மற்றும் வாழ்க்கை அமையும். துக்கமும், சந்தோஷமும், சண்டையும், சமாதானமும், ஏற்றமும், இறக்கமும், வெறுப்பும், ஆதரவும், அவரவர்கள் கர்ம கதியே. இதைத்தான் **“தீதும் நன்றும் பிறர் தர வாரா”** என நம் **முன்னோர்கள் சொல்லிச் சென்றுள்ளார்கள்.**

நம்முடைய நல்ல – கெட்ட காலங்களுக்கு நாம் மட்டுமே பொறுப்பு. அப்படி என்றால் ஆகாம்ய கர்மா நம்முடைய கையிலேயே இருக்கிறது. இந்தப் பிறவியில் யார் எப்படி இருந்தாலும், நீ எப்படி இருக்கப் போகிறாய் என்பது உன் கையிலேயே உள்ளது. நீ செய்யும் நற்செயல்களையும், வினைச் செயல்களையும் நீ மட்டுமே ஏதோ ஒரு பிறவியில் அனுபவிக்கப் போகிறாய் என்பதை உணர்ந்தால். நீ என்ன செய்யப் போகிறாய்? எப்படி நடந்து கொள்ளப் போகிறாய்? எது போன்ற

வாழ்க்கைத் தடத்தை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறாய் என்பது உனக்குப் புலப்படும். **இதை போதிப்பது தான் ஆன்மீகம்.** பாவ புண்ணியங்களுக்கு கூட்டல் கழித்தல் கிடையாது. இரண்டையும் நாம் அனுபவித்தே ஆக வேண்டும்.

பணம் மட்டுமே எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்துவிடும் என்று சித்தாந்தம் உள்ளது. ஆனால் பணமே இல்லாத ஒரு சாதாரண மனிதன் கூட தன்னுடைய வாழ்க்கையில் பல சமயங்களில் சந்தோஷமாக இருக்கிறான். அதே போல பெரும் பணக்காரர்களையும் துக்கங்கள் விடுவதில்லை. சர்க்கரை ஆலை அதிபரானலும் டயாபடிக் ஆக இருந்தால் இனிப்புப் பண்டங்களை உண்ண முடியாது. பல கார்களுக்குச் சொந்தக்காரராக இருந்தாலும் தனது கால்களையே நடைப் பயிற்சிக்கு நம்ப வேண்டியதாக உள்ளது. வினை விதைத்த வழியில் விதி நடக்கும். விதி வகுத்த வழியில் நாம் நடக்க வேண்டும். நமக்கு விதிக்கப்பட்ட விதி நம் கடமையைச் செய்வது மட்டுமே. பலனை ஆண்டவனிடம் விட்டுவிடுவோம். நடப்பதை ஏற்கும் பக்குவத்தை மட்டுமே நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதை மாற்ற முயலும்போது மேலும் மேலும் துன்பத்தையும் சோகத்தையுமே பலனாகப் பெறுகிறோம். எதற்கும் நிதானமும் பொறுமையும் தேவை. நமக்கு நடக்கும் நடக்கப்போகும் நல்லதை யாராலும் தடுக்க முடியாது. அதேபோல் நமக்கு யாராலும் தீமையையும் கொடுக்க முடியாது என்பது திண்ணம். எனவே அவரவர்கள் வாழ்க்கை அவரவர்கள் செய்யும் நல்வினை, தீவினைப்படி தான் - அதாவது கர்ம வினைப்படி தான் நடக்கும். **– சுப. செல்வம், குரல் ஆசிரியர்.**

**அச்சிட்டோர் : சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்**

534 -ஏ, காமராஜர் சாலை, சிவகாசி - 626123.

போன்:04562-223315 இ.மெயில் suryaprint1998@gmail.com

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றைத் திருத்திஅமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியர்க்கு உரிமை உண்டு. குரலில் வெளியிடப்பெறும் செய்திகளுக்கும் கருத்துகளுக்கும் அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவார்கள். பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். - பதிப்பாசிரியர்

# கல்விக் காவலர்கள்

1. **மே 2004 : முதல் கல்விக் காவலர், ஆமலூருடையார், தெய்வத்திரு. வெ.ராம. சுப்பிரமணியன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சி அவர்கள், அம்மன் குறிச்சி, சென்னை.**
2. ஜுலை 2004 : மேலூருடையார், **திரு. தே.மா. பழனிச்சாமி செட்டியார் – திருமதி. சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
3. செப்டம்பர் 2006 : கழனிவாசலூருடையார் **திரு.நா. சுப்பிரமணியன்** BSc., CAIIB **திருமதி. தமிழ்ச்செல்வி** B.Lit., அவர்கள், கல்லம்பட்டி, சென்னை.
4. **மார்ச் 2007 : நாவலூருடையார், திரு. ச. கனகசபை B.E., மனோரஞ்சிதம்** அவர்கள், உலகம்பட்டி, திருச்சி.
5. ஜுலை 2007 : கழுகக்கூருடையார், **தெய்வத்திரு. இராம. வேலாயுதம் செட்டியார் – பார்வதி ஆச்சி** அவர்கள், படமிஞ்சி, சென்னை.
6. நவம்பர் 2007 : கழனிவாசலூருடையார், **தெய்வத்திரு. மு.சி.கி. நாராயணன் செட்டியார் – இராஜமாணிக்கம் ஆச்சி** அவர்கள்,கல்லம்பட்டி.
7. மே 2010 : சிக்கலூருடையார், **தெய்வத்திரு. நல்லாசிரியர் மெ. இளங்கோ – சாவித்திரி** அவர்கள். வா.புதூர்.
8. ஜுலை 2011 : அரும்பாக்கிளையார். திரு. **M.M. தியாகராஜன் B.Sc., தெய்வத் திருமதி. ஜோதிமணி** அவர்கள் புழுதிப்பட்டி. மதுரை.
9. ஜனவரி 2012 : பொன்னமராவதி பூண்டிலூருடையார். தெய்வத்திரு. மா. தங்கராஜன் – அழகுமீனாள் அவர்கள், புழுதிபட்டி பெங்களூரு.
10. மார்ச் 2012 : கழுகக்கூருடையார். **தெய்வத்திரு. மு.ஆ. இராமசாமி செட்டியார். தெய்வத்திருமதி. இராஜாமணி ஆச்சி,** சொக்கம்பட்டி.
11. மே 2012 : நாவலூருடையார், **திரு. ச. சொக்கலிங்கம் செட்டியார் – தெய்வத்திருமதி. தனபாக்கியம் ஆச்சி** அவர்கள் உலகம்பட்டி.
12. **ஜுலை 2012 : கழனிவாசலூருடையார். திரு. P.L. இராமஜெயம், பத்மாவதி அவர்கள், பொன்னமராவதி.**
13. செப்படம்பர் 2012 : கழுகக்கூருடையார். **தெய்வத்திரு.** M.S.M. **மாணிக்கம் செட்டியார் – சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
14. **நவம்பர் 2012 : பணப்பாக்குழூருடையார். தெய்வத்திரு. கு. சொக்கலிங்கம் செட்டியார் - சொ. தேனம்மாள் ஆச்சி, செம்பூதி.**
15. மார்ச் 2013 - அரும்பாக்கிளையார், **தெய்வத்திரு. இராம. கதிரேசன் செட்டியார். திருமதி.முத்துலெட்சுமி ஆச்சி,** புழுதிப்பட்டி.
16. **மே 2013 : மேலூருடையார். தெய்வத்திரு. தே.மா. நாராயணன் செட்டியார் – சண்முகவள்ளி ஆச்சி,** பொன்னமராவதி.
17. ஜுலை 2013 : பூதமங்கலமூருடையார். **திரு. ச. இராமலிங்கம் – இராஜமாணிக்கம்,** அயனாவரம். சென்னை.
18. நவம்பர் 2013 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. துரைராசு செட்டியார் – மீனாட்சி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை

19. ஜனவரி 2014 : நாவலூருடையார். **தெய்வத்திரு. அரு. வேலாயுதம் செட்டியார் – சம்பூர்ணம் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

**20. மார்ச் 2014 : பூதமங்கலமுருடையார். திரு. R. பரமசிவம் B.E., தெய்வத்திருமதி. சிவகாம சுந்தரி, பொன்னமராவதி, சென்னை.**

**21. ஜனவரி 2015 : பூதமங்கலமுருடையார். திரு. அ.சொ. சண்முகம் செட்டியார் – ஜெயபாரதி ஆச்சி, அம்மன்குறிச்சி, திருச்சி.**

**22. மார்ச் 2015 : அரும்பாக்கிளையார். திரு. A.P. ஜெயபால் – புவனேஸ்வரி, பொன்னமராவதி, ஈராடு.**

23. ஏப்ரல் 2015 : கழுகக்கூருடையார், **தெய்வத்திரு. ம.வெ. நாராயணன் செட்டியார் – மீனாட்சி ஆச்சி** உலகம்பட்டி.

24. ஏப்ரல் 2015 : நாவலூருடையார். **திரு. சித. நடராஜன் செட்டியார், தெய்வத்திருமதி. இராஜம்மாள் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

25. மே 2015 : நாவலூருடையார். **திரு. அரு.வே. மாணிக்கவேலு – சரஸ்வதி,** பொன்னமராவதி.

**26. ஜூலை 2015 : ஆமலூருடையார். திரு. வெ.இராம.சுப. செல்வம் B.Sc., ACA., – ஆனந்தம் ஆச்சி, அம்மன்குறிச்சி, சென்னை.**

27. ஜனவரி 2016 : அரும்பாக்கிளையார், தெய்வத்திரு. **மங்கைபாகன் செட்டியார் – சிகப்பி ஆச்சி,** புழுதிப்பட்டி.

28. மே 2016 : கமுகக்கூருடையார், **திரு. சி.சொ.மு. இராமையா செட்டியார் – தெய்வத்திருமதி. ஜெகநாதம் ஆச்சி,** கொன்னைப்பட்டி, தேனி.

29. செப்டம்பர் 2017 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. நேசமணி செட்டியார் – அருள்நிதி புவனேஸ்வரி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை.

30. ஜனவரி 2018 : பணப்பாக்கூருடையார் **தெய்வத்திரு. சுப. மணிவாசகம் செட்டியார் – தேன்மொழி ஆச்சி,** காரைக்குடி.

31. செப்டம்பர் 2018 : கமுகக்கூருடையார் **திரு. சோம. கதிரேசன் செட்டியார் – தவமணி ஆச்சி,** பொன்னமராவதி, தொட்டாம்பாளையம்.

32. ஜூலை 2019 : அரும்பாக்கிளையார் **திரு. பொன். சிவஞானம் செட்டியார் – ராஜகுமாரி ஆச்சி,** சிறுகுடி.

**33. ஆகஸ்ட் 2019 : நாவலூருடையார் தெய்வத்திரு. சித. மாணிக்கம் செட்டியார் – அழகுமீனாள் ஆச்சி, பொய்யாமணிப்பட்டி.**

**34. ஆகஸ்ட் 2019 : வரதலூருடையார் ந. செல்வம் செட்டியார் – சிவயோகம் ஆச்சி, புழுதிபட்டி / கோவை.**

**35. ஜனவரி 2020 : பழனி ஆதிசைவ அன்னதான மடம் – அருள்மிகு பழனி ஆண்டவர் அறக்கட்டளை, பழனி.**


36. மார்ச் 2020 : மேலுருடையார் **தெய்வத்திரு. செ.பெ.அ. அலங்காரம் செட்டியார் – திருமதி. செம்பாயி ஆச்சி,** சிறுகுடி.

உ

ஸ்ரீ வயிரவ சுவாமி துணை

**வாழ்த்துக்களுடன்**

கடை : **04333 - 262215** வீடு : **04333 - 260364**



# சிவசக்தி ஸ்டோர்

**97,** அண்ணாசாலை,

பொன்னமராவதி

மளிகை, ஆயில், ஸ்டேஷனரி மற்றும்

குளிர்பானங்கள்

மொத்தம் & சில்லறை

# அன்னம் டிரேடர்ஸ்



70B, மெயின் ரோடு,

பொன்னமராவதி

**ஸ்டாக்கிஸ்ட் :** நெஸ்டில், AVT Tea,

கணேஷ் பீடி, ஊர்வசி சோப்,

ராஜம் சுக்கு காபி



# சிவம் ஏஜென்சீஸ்

6A, ஆஸ்பத்திரி ரோடு,

பொன்னமராவதி

**ஸ்டாக்கிஸ்ட் :** அமுல் (இந்தியா),

கோத்ரெஜ், டாபர் பேஸ்ட்

# மௌனம்

மௌனம் ஒட்டு மொத்த உலகத்திற்கானப் பொது மொழி, ஓசை எழுப்பாத ஒரு மொழி. பேசாமல் அமைதி காப்பது மௌனத்தின் ஒரு வகை. பேசக்கூடாத இடத்திலும், பேசத் தேவையில்லாத இடத்திலும் இந்த மௌனம் நமக்கு மிகவும் அவசியம்.

இரண்டாவது **பூரணமான மௌனம்** என்பது வாயால் பேசாமலும், மனதால் எண்ணாமலும் இருப்பதே. இப்படிப்பட்ட மௌனம் ஆழமான ஒரு வகைத் தியானம். யோகா மற்றும் தியான வகுப்புகளில் இது போன்ற மௌனம் கடைப்பிடிக்கப்படுகிறது.

மூன்றாவது **பரிபூரண மௌனம்.** ஐம்புலன்களும் அடங்கி, ஒடுங்கி அமைதியாவதே பரிபூரண மௌனம். இது தவம் செய்பவர்கள் கடைப்பிடிக்கும் மௌனம்.

நம் பேச்சால், ஒருவர் மனம் புண்படும் நிலை ஏற்படும் என்றால், அப்பொழுது மௌனமே சாலச் சிறந்தது. ஏதாவது ஒரு சமயத்தில் பொய்யுரைக்க வேண்டிய நிலை வந்தால் அதைத் தவிர்க்க மௌனத்தைக் கையில் எடுக்கலாம்.

மௌனம் அமைதிக்கான ஆரம்பம். இந்த வார்த்தைக்குப் பல அர்த்தங்கள் உள்ளன.

- 😐 கேள்வி கேட்கப்படும் நேரத்தில் மௌனம் – ‘சம்மதம்’
- 😐 நாம் நேசித்த சில உறவுகளைப் பிரியும்போது மௌனம் - ‘துன்பம்’.
- 😐 இடையறாது காரியம் செய்யும் விடா முயற்சியின் போது மௌனம் – ‘நம்பிக்கை’
- 😐 நாம் தோல்வி கண்டு, வெற்றிக்கு வழி தேடும் போது மௌனம் – ‘பொறுமை’
- 😐 நாம் வெற்றி கண்டபோது நம்மைச் சூழ்ந்திருக்கும் மௌனம் – ‘அடக்கம்’
- 😐 திருமணக் கோலத்தில் உள்ள அமைதியின் போது மௌனம் – ‘வெட்கம்’
- 😐 தவறுதலாக தவறு செய்த போது மௌனம் – ‘பயம்’
- 😐 ஆசைகள் நம்மைச் சூழ்ந்திருக்கும் போது மௌனம்- ‘எதிர்பார்ப்பு’
- 😐 கோபத்தைக் குறைக்காமல் அடக்கும் போது மௌனம் – ரத்தக் கொதிப்பு

- 😐 இலக்கை அடைய நினைத்து ஒரு முகப்படுத்தும்போது மௌனம் – ‘சக்தி’
- 😐 தீவிரமாகப் போராடும் போது மௌனம் – ‘வலிமை’
- 😐 பிடிக்காத விஷயங்களை ஒத்துக் கொள்ளாதபோது மௌனம்– ‘எதிர்ப்பு’
- 😐 கால் இடறி விழுந்த பின் எழுந்து அமர்ந்திருக்கும்போது மௌனம்– ‘அவமானம்’
- 😐 நம்மை விட்டுப் பிரிந்தவர்களை நினைக்கும்போது மௌனம் – ‘துக்கம்’
- 😐 நாம் பழிவாங்க நினைக்கும் போது மௌனம் – ‘ஆத்திரம்’
- 😐 கற்ற வித்தைகளைக் கையாளும் போது மௌனம் – ‘ஆனந்தம்’
- 😐 அயர்ந்த வேளையில் அமைதியான அந்த மௌனம் – ‘உறக்கம்’
- 😐 உறக்கம் என்று அனைவரும் நினைத்திருக்க; உடலோ அசையாமல் அயர்ந்திருக்க; அண்டை அயலார் சூழ்ந்திருக்க; மௌனம் – ‘மரணம்’
- 😐 வார்த்தைகள் இல்லாத புத்தகம் – மௌனம் ஆனால் வாசிக்க, வாசிக்க “மௌனம் என்பது வெளிச்சம்” – நம்மை நாமே இதற்குள் தரிசிக்கலாம்.
- 😐 “மௌனம் என்பது இருட்டு” – எல்லாத் துன்பங்களையும் இதற்குள் புதைக்கலாம்.
- 😐 “மௌனம் என்பது மூடி” எல்லா உணர்ச்சிகளையும் இதற்குள் பூட்டி வைக்கலாம்.
- 😐 மௌனம் என்பது போதிமரம்” – இதுவரை உலகம் சொல்லாத உண்மைகளை இது போதிக்கும்.
- 😐 “மௌனம் என்பது தவம்” – இதில் ஆழ்ந்தால் அமைதி நிச்சயம். “மௌனம் என்பது வரம்” – நம்மிடம் நாமே பெறுவது.

இன்பம், துன்பம் இரண்டையும் மௌனம் கொண்டு சந்தித்தால் எப்போதும் இதயம் இயல்பாக இருக்கும். “இதழ்களை இறுக மூடி நாம் நமக்குள் இறங்குவோம்!”

**ஒரு கிரேக்க ஞானி சொன்னதைப்போல் உங்கள் பேச்சு, மௌனத்தை விடச் சிறப்பாக இருக்குமானால் மட்டுமே பேசுங்கள். இல்லையேல் மௌனமே சாலச் சிறந்தது.**

**– சுப. செல்வம், குரல் ஆசிரியர்**

ESTD : 1991

உ

ஸ்ரீ மங்கைநாயகர் தேனம்மை சுவாமிகள் துணை

நம் நகர பெருமக்களுக்கு நல்வாழ்த்துக்கள்

Off : 0461 - 2328501
Res : 0461 - 2328502
91711 70000

SARC

# ஸ்ரீ அலங்கார் ரெக்சின் சென்டர்

**Dealers in :**

**Rexine, Furniture and Furnishing Materials**

**ஒரு வருட உத்திரவாதத்துடன் தேக்கு மரக்கட்டில் - டபுள் மற்றும் மெத்தை ரூ. 15,100/- மட்டும்.**
**(தமிழகம் முழுவதும் டெலிவரி செய்யப்படும்).**

247-C/4, Palayamkottai Road, Near Old Bus-Stand, Tuticorin-628 002.
E-mail : alankarexine@gmail.com www.tuticorinalankarrexine.com

AB

# ஸ்ரீ அலங்கார் பில்டர்ஸ்

Structural Engineer ❖ Licensed Surveyor in Tuticorin City Municipal Corporation
❖ Panel Valuer in Tuticorin District Central Co.op. Bank Ltd.,

**கட்டிட வரைபடம், வடிவமைப்பு, முகப்புதோற்றம்,**
**கட்டிட மதிப்பீடு, வரைபட அனுமதி சான்று, வாஸ்து முறைப்படி கட்டிடங்கள்**
**சிறந்த முறையில் செய்து தரப்படும்.**

71-5, Balavinayagar Kovil Street, Upstairs Sri Alankar Rexine Centre,
Tuticorin- 628 002.
Email : tutyalankarbuilders@gmail.com www.tuticorinalankarrexine.com

நம் சமூக பணியில்...,

**அரு. சோம சண்முகநாதன்**
**S. சிவகாமி**
**S. சசிகுமார்** B.A.,DECM.,
**Er. S. பிரஹலாதன்** M.E.,

பூதமங்கலமுருடையார், உலகம்பட்டி.

# வாசகர் குரல்



**வாசகர் குரல் : 149-1**

தலைவரின் தலையங்கமே மருந்தானது வயது முதிர்ந்தவர்களுக்கு. ஆலோசனைகள் அறிவுமிகு சம்பந்தரின் அழியாத தமிழ் பாக்கள். இயற்பகை நாயனாரின் கதை நலம் தரும் நடை. கண்ணின் மொழிகள், வேம்பின் இனிமை, சென்னை சங்கத்தின் Zoom Meeting பெரியவர் ஆத்திச்சூடி, ஓம்நமசிவாய, மூன்றாம்பிறையின் நலன்கள் எளிமை ஆனால் வலிமையான கருத்துக்கள். நகரத்தார் குரலும், இறைவனின் தமிழ்பணி செழுமையுடன் வளர வாழ்த்துக்கள்!!

**– திரு ம.சி.கு.கு. குழந்தைவேலன், கோவை**

**வாசகர் குரல் : 149 – 2**

செப்டம்பர் 2020 மாத நகரத்தார் குரலில் வெளிவந்த மூத்த குடிமக்கள் கட்டுரை படித்தோம். பாராட்டப்பட வேண்டிய வாழ்வியல் நியதியான கட்டுரை. முக்கியமாக (1) அறுபதைக் கடந்த பின் பொருளீட்டுவதை நிறுத்திக் கொள்ளுங்கள். முற்றிலும் மாறுபட்ட பணத்திற்கு தொடர்பில்லாத ஒரு துறையைத் தேர்ந்தெடுங்கள். (2) இதுவரை ஈட்டிய பொருள் கொண்டு மற்றவர்களுக்கு ஈந்து உதவுங்கள். (3) நீங்கள் மகிழ்வாக வாழ்ந்தால் உங்கள் நலக்குறைவுகள் தன்னைத் தானே குணமாக்கிக் கொள்ளும். எங்கள் விமர்சனம், மொத்தத்தில் கட்டுரை முழுவதும் வாழ்வியல் நெறிமுறைகளாக இருந்தது.

தொடரட்டும் இந்தச் சமுதாய அக்கறைப் பணி. தங்களை மனதாரப் பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

**– திரு S.M. தங்கராஜ், சேலம்.**

**வாசகர் குரல் : 149 – 3**

ஐயா, வணக்கம், சென்ற இதழில் வந்த நமது மூதாதையர் கோவலன் – கண்ணகி கோவில் பிரான்மலையில் கட்டி வழிபாடு செய்யக் கூறிய தகவல் சூப்பர். இது நடந்தால் அவர்கள் ஆசி நம்மவர்களுக்கு கிடைக்கும்.

**– திரு எஸ். சுரேஷ், திண்டுக்கல்**

## வாசகர் குரல் : 149-4

**குரலில் எழுத மாணவச் செல்வங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு:**

(1) குரல் செப்டம்பர் 2020 பக்கம் 1-இல் அழைக்கிறார் குரல் ஆசிரியர். என்ன? முக்கியமாக மாணவ மாணவிச் செல்வங்கள் இதைக் கவனத்தில் கொண்டு படிப்பது, எழுதுவது, பேசுவது கருத்தை தெரிவிப்பது என்றால் அவ்வளவு சுலபம் அல்ல. ஆசிரியர் நம்மவர்களை ஊக்குவிக்கவே செய்தி வெளியிட்டுள்ளார்கள். எழுதும் செய்திகளில் தவறு - குறை இருப்பின் பள்ளிகளில் ஆசிரியர்கள் பிழைகளை திருத்துவது போல் ஆசிரியர் குழு திருத்தி அமைத்து, செய்தியை வெளியிட்டு ஊக்குவிப்பார்கள். இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள். “இளமையில் கல்” என்ற முதுமொழிக்கேற்ப நீதி நூல் படியுங்கள். கதை, கட்டுரை, செய்திகளை எழுதி அனுப்புங்கள். அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். அழைப்பு விடுத்த ஆசிரியருக்கு எனது வாழ்த்துக்கள்.

**நம் சங்கங்களின் பேருதவி :**

(2) பேரிடர் காலமான கொரோனா காலத்தில் “கொற்றவன் அறிதல் உற்ற இடத்து உதவி” என்ற நீதிநூல் கருத்துப்படி மக்களின் பொருளாதார நெருக்கடி அறிந்து தகுந்த உதவி செய்ய முன் வருவதே அரசன் கடமையாகும். அதன்படி சென்னை அ.வ.ந. சங்கம் 45 ஊர்களில் வசிக்கும் 254 குடும்பங்களுக்கு பேரிடர் நிவாரணம் கொடுத்ததையும், கோவை அ.வ.ந. சங்கம்-இளைஞர் பேரவை நிவாரணம் கொடுத்ததையும் குரல் புத்தகத்தில் படித்து அறிந்து மனம் மகிழ்ந்தேன். அரசன் மக்களுக்கு உதவி செய்வது போல, நம் சங்கத் தலைவர்களும், பொறுப்பாளர்களும் நம் குடும்பங்களுக்கு உதவி செய்ததை பாராட்டி வாழ்த்தி, வாழ்க சமூகம்! வளர்க சங்கங்கள்!! என இறைவனை வணங்குகிறேன்.

**நம் சங்கங்கள் பேரிடர் நிதி உதவி வழங்க வேண்டுகோள்:**

(3) கொரோனா பேரிடர் காலம் - நிமிர முடியவில்லை. இந்நேரத்தில் அந்த அந்த ஊர் சங்கங்கள் உதவிபுரிந்திட முன் வரவேண்டும். நம் சமூகத்தில் உதவி தேவைப்படுவோருக்கு நமது குரல் புத்தகத்தில் முறையான அறிவிப்பு கொடுத்து நிதி உதவி அளித்திட வேண்டுமாய் வேண்டுகிறேன்.

**- திரு பி.எல்ஆர். கோவை**

## செப்டம்பர் 2020 மாத குறுக்கெழுத்துப் போட்டியில் குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

| | வ. எண் | பெயர் |
|---|---|---|
| 1. | 28 | A. நாகநந்தினி, சென்னை |
| 2. | 45 | G. ரம்யா, திருச்சி. |
| 3. | 18 | ந. தேவதர்ஷன், பெங்களூர். |
| 4. | 43 | பழ. சொக்கலிங்கன், ஆலவயல். |
| 5. | 52 | R. உஷா நந்தினி, சொக்கம்பட்டி. |

செப்டம்பர் 2020 மாத வெற்றியாளர்களுக்கு பரிசு வழங்கியவர்கள் **திரு எஸ். அசோகன் – திருமதி யோகசித்ரா தம்பதியர், கட்டுக்குடிபட்டி.**

வெற்றிபெற்றவர்களுக்கும், போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும் வாழ்த்துக்கள்!! **– குரல் ஆசிரியர்**


## குறுக்கெழுத்துப் புதிர் போட்டி நிபந்தனைகள் நவம்பர் 2020

1. இந்தப் போட்டியில் அனைவரும் கலந்து கொள்ளலாம்.
2. இந்தப் போட்டிக்கான பதிலை குரல் புத்தகத்தில் வெளியிட்டுள்ள போட்டிக்கான கட்டங்களை நிரப்பி அதை போட்டோ எடுத்து வாட்ஸ்அப் மூலம் 94444 68900 என்ற எண்ணிற்கு மட்டும் அனுப்ப வேண்டுகிறோம்.
3. விடைத்தாளில் **பெயர், ஊர், குடிப்பட்டம், அலைபேசி எண்.** முதலியவற்றை தவறாமல் குறிப்பிடவும்.
4. விடைகள் 30.11.2020-க்குள் வந்து சேர வேண்டும்.
5. சரியான விடைகள் அதிகமாக இருப்பின் குலுக்கல் முறையில் 10 நபர்களுக்கு தலா ரூ. 100/- பரிசாக வழங்கப்படும்.
6. இந்தப் போட்டிக்கான பரிசுகளை இந்த மாதம் (நவம்பர் 2020) வழங்குபவர்கள் **திரு S.M. தங்கராஜ்** அவர்கள் சேலம்.
7. வருடம் முழுவதும் வெளிவரும் குறுக்கெழுத்துப் போட்டிகளில் தொடர்ந்து கலந்து கொண்டு பரிசுகள் பெறாதவர்களுக்கு ஆண்டு முடிவில் அவர்களுக்கென தனியாக சிறப்பு குலுக்கல் நடத்தி பரிசுகள் வழங்கப்படும்.

# குறுக்கெழுத்துப் போட்டி-4

விடைகள் இந்த நவம்பர் 2020 மாத அ.வ.ந. குரல் புத்தகத்துள்ளேயே உள்ளன.

**(ஆக்கம்: திரு ந. ஜெகநாதர், திண்டுக்கல்)**



**இடமிருந்து வலம்**

1. தினமும் முப்பது நிமிட புத்தக வாசிப்பு ஆயுளை ---- ஆண்டுகள் அதிகரிக்கும் (4 எழுத்துக்கள்)
2. பாண்டிய நாட்டில் மூன்று----கோயில்கள் உள்ளன. (4 எழுத்துக்கள்)
4. உமா தேவியாரின் சேடிகள் மீது காதல் வயப்பட்டவர். (5 எழுத்துக்கள்)
9. இத்தலத்தில் இறப்போருக்கு எம வேதனை இல்லை. (7 எழுத்துக்கள்)
13. கோவில் கோபுரத்தில் உள்ள இது நல்ல மின்கடத்தியாகும். (4 எழுத்து)
14. பணி ஓய்வு என்பது மிச்சமிருக்கும் வாழ்க்கையை ரசிக்க இந்தச் சமூகம் நமக்களிக்கும் ----- (3 எழுத்துக்கள்)
15. திருமகளை தினையளவு நேரமும் பிரியாதிருக்க விரும்பியவர் ----- (4 எழுத்துக்கள்)

**வலமிருந்து இடம்:**

13. புண்களை ஆற்றும் குளிருணவு (3 எழுத்துக்கள்)

**மேலிருந்து கீழ்**

1. முதல் குரல் இதழின் அட்டையை அலங்கரிப்பவர் நமது ---4எழுத்து)
3. காமதகனம் செய்த எம்பெருமானின் இருப்பிடம் (5 எழுத்து)
4. குடும்பத்திற்காக ஒரு ------ யாக தங்கள் வாழ்வை அர்ப்பணித்த ஒவ்வொருவருக்கும் ஓய்வு அவசியம் (5 எழுத்துக்கள்)
6. பாம்பாகிய ஆதிசேஷனைக் குறிக்கும் சொல் (3 எழுத்து)
8. பற்பல பிறவிகளின் பாவ புண்ணியங்களின் கூட்டு ---- (7 எழுத்து)
11. பிறர் துன்பத்தையும் தன்னுடைய துன்பமாக எவர் உணர்கிறார்களோ அதுவே வழிபாட்டின் ----- (4எழுத்து) (எழுத்து குழம்பியுள்ளன)
12. உடல் தன்னைத் தானே சரி செய்து கொள்ளும் நேரம்--- (3 எழுத்து)

**கீழிருந்து மேல்**

5. ------க்கு மட்டுமேயான உணவு தாய்ப்பால். (4 எழுத்து, எழுத்து குழம்பியுள்ளன)
7. சித்தரத்தைக் களி------ணுக்கு மிகவும் நல்லது. (5 எழுத்து வார்த்தையில் நடுவெழுத்து இல்லை)
10. இன்றைய -----நாளைய வரலாறு (3 எழுத்துக்கள்)

# 'பால்' - ஒரு உணவா?



குழந்தைகள் முதல் முதியவர் வரை பயன்படுத்தும் தடையற்ற உணவாக நாம் பாலை வைத்திருக்கிறோம். இது உணவு தானா? ஆம் உணவுதான்! யாருக்கு உணவு? யாருக்காக அது உருவாகிறதோ அதற்கான உணவு.

ஒரு குழந்தை பிறந்தவுடன் தாயிடமிருந்து தாய்ப்பால் உருவாகிறது. இது குழந்தைக்கு மட்டுமேயான உணவு. இதற்கும் அளவு இருக்கிறதா? கண்டிப்பாக இருக்கிறது. குழந்தைக்கு பல் முளைக்கும் வரை தாய்ப்பால் அவசியம். அதற்குப் பின்பு திட உணவுகளைப் படிப்படியாக அதிகரித்து தாய்ப்பாலை குறைத்துக் கொள்ள வேண்டும். ஒரு கன்றுக்குட்டி பிறந்தவுடன் பசுவிடமிருந்து பசும்பால் உருவாகிறது. இது கன்றுக்கு மட்டுமேயான உணவு. கன்றுக்குட்டியின் பிரத்யேகமான உணவை நாம் பிடுங்கிக் கொண்டு நம் குழந்தைகளுக்கும் கொடுக்கிறோம். நாமும் பருகி வருகிறோம். பால் சாப்பிடுவதால் என்ன பிரச்சனை வந்துவிடப் போகிறது? பால் சாப்பிடுவது பற்றி விஞ்ஞானிகள் என்ன கூறுகிறார்கள்? நாம் மருத்துவ அறிவியல் ரீதியாக விளங்கிக் கொள்வதற்கு முன்னால் விஞ்ஞான அணுகுமுறையைக் கவனிப்போம்.

பசும்பாலின் செரிமானத்திற்குப் பின் எஞ்சும் பொருளாக கேஸினோஜன் (Casinogen) என்ற சவ்வுப் பொருள் இருக்கிறது. இந்தச் சவ்வுப் பொருளை ஜீரணிக்கும் ஆற்றல் மனித உடலிற்கு கிடையாது என்று கூறுகின்றனர் விஞ்ஞானிகள். கேஸினோஜனை ஜீரணிக்கும் சக்தியாருக்கு இருக்கிறது? அது கன்றுக்குட்டிகளுக்கு மட்டுமே இருக்கிறதாம். எனவே கன்றுக்குட்டிகளின் உணவை நாம் பிடுங்கிக் குடிப்பது நம்

உடலிற்குத் தீங்கு விளைவிக்கும். அது மட்டுமல்ல ஒரு டம்ளர் பசும் பாலின் சத்துக்கள் நான்கு முழுச் சாப்பாட்டின் (Full Meals) சத்துக்களுக்கு இணையானது. நாம் பசியில்லாத நேரத்தில் முழுச் சாப்பாடு ஒன்றையும் விழுங்கிவிட்டு ஒரு டம்ளர் பாலையும் குடிக்கிறோம். உடலின் செரிமான இயக்கத்தை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்ய இதைவிட சிறந்த வழி உண்டா?

குறிப்பாக உடல் தன்னைத் தானே சரி செய்து கொள்ளும் இரவு நேரத்தில் பாலை நாம் அருந்துகிறோம். உடலின் ஒட்டு மொத்த செரிமான சக்தியும் பாலை ஜீரணிக்க அரும்பாடுபடுகிறது. எஞ்சிய சவ்வுப் பொருளான கேஸினோஜனை குடல் பகுதியிலேயே விட்டு விட்டுப் போகிறது. இதனால் உடலுக்கும் குடலுக்கும் மந்தத் தன்மையை ஏற்படுத்துகிறது. வயிற்றுப் பகுதியில் பலமான தசைகளோடு மந்தத் தன்மையுள்ள தொங்கு தசைகளும் கூட ஆரம்பிக்கின்றன என்றும் கரையாத தொந்தியோடு நம் உடல் பெருக்கிறது. அன்றாட செரிமானத்தையும் மந்தத் தன்மைக்கு தள்ளும் பால் சிறந்த உணவா? சற்றே சிந்தியுங்கள்.

குழந்தைகள் தாய்ப்பால் பருகும் வரை ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் ஒல்லியாகவும் இருப்பார்கள். இதுதான் குழந்தைகளின் இயல்பு. நாம் தாய்ப்பாலை நிறுத்தி விட்டு பசும்பால் கொடுக்கும் போது என்ன நிகழ்கிறது? குழந்தை படிப்படியாக பசியை இழக்க ஆரம்பிக்கிறது. குழந்தையின் பசியற்ற நிலையை நாம் அறியாமல் தொடர்ந்து பசும்பாலைப் புகட்டுகிறோம். இன்னும் பசும்பாலோடு விதவிதமான ரசாயனங்களை (Horlicks, Boost, Bonvita) கலந்து கொடுக்கிறோம். கொஞ்சம் கொஞ்மாக குழந்தையின் எடை கூடுகிறது. உடலின் கழிவுகளின் தேக்கம் உடலை எடை கூடச் செய்கிறது. முன்பிருந்த சுறுசுறுப்போ, வேகமோ காணாமல் போய் குழந்தை மந்தமாக மாறுகிறது. துறுதுறுப்பாக இருந்த குழந்தையை நாம் மந்தமாக்கவே விரும்புகிறோம். ஏனெனில் புறத்தோற்றம் "கொழு கொழு" என்று இருக்க வேண்டுமென்பது நம் ஆசையாக இருக்கிறது. குழந்தைகளுக்கான தாய்ப்பால் எளிய உணவாகும். இது ஜீரணத்திற்கும் கழிவு வெளியேற்றத்திற்கும் எளிமையானது. பிறந்து சில மாதங்களே ஆகும் குழந்தையின் உள்ளுறுப்புக்

களின் தன்மைக்கேற்ப தாய்ப்பால் உள்ளது. ஆனால் பசும்பால்...? கன்றுக்குட்டியின் செரிமானத் தன்மை, வளர்ச்சி வேகம் போன்றவற்றைப் பொறுத்து பசும்பால் செறிவானதாக அமைந்துள்ளது. தாய்ப்பாலைவிட பசும்பால் பல மடங்கு செறிவான ஆற்றலுள்ள பொருளாகும். தாய்ப்பாலை கன்றுக்குக் கொடுத்தால் அதன் வளர்ச்சியில் குறைபாடு தோன்றும். பசும்பாலை குழந்தைக்கும் கொடுத்தால் அதன் வளர்ச்சி முறையற்றதாக அதிகரிக்கும். தாய்ப்பாலை விட பசும்பால் ஆற்றல்வாய்ந்தது என்றால் நல்ல உணவுதானே? இல்லை. அளவுக்கு மீறிய அனைத்துமே நஞ்சுதான். பாம்பு விஷம் ஏறிய மனிதன் இறந்து போகிறான் அல்லவா? பாம்பு விஷத்தில் அப்படி என்ன விஷப்பொருள் இருக்கிறது. விஷப்பொருள் ஒன்றுமில்லை. முழுக்க முழுக்க புரதம் (Protein) தான். புரதம் உடலுக்கு நல்லது என்று தானே கூறுகிறார்கள்? ஆம். புரதம் நல்லதுதான். உடலின் தேவைக்கு அளவாக இருக்கும் வரை!

முழு உடல் ஸ்தம்பிக்கும் அளவுக்கு புரதம் உடலிற்கு கொடுக்கப்பட்டால் என்ன ஆகும்? உள்ளே வந்த புரதத்தைப் பயன்படுத்த முடியாமல் கல்லீரல் செயலிழக்கும். இரத்தம் மூலமாக சிறுநீரகத்திற்கு புரதம் வரும் போது இரு சிறுநீரகங்களும் செயலிழந்து போகிறது. அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு! சாதாரண புரதம் செறிவான புரதம் இரண்டில் எது விஷமாக மாறுகிறது, இது போலவே எந்த ஒரு உணவுப் பொருளும் அளவை மீறும்போது விஷமாக மாறும் தானே? பாலை நாம் எதற்காக அதிகம் குடிக்கின்றோம்? அதில் கால்சியம் என்ற சத்துப்பொருள் இருப்பதாக நம்பி பயன்படுத்துகிறோம். குழந்தைக்குத் தேவையான கால்சியம் மற்றும் பிற உயிர்ச்சத்து நிறைந்த உணவுதான் தாய்ப்பால். தாய்ப்பாலை மட்டுமே பருகிவரும் குழந்தைகள் மிக அழகான முறையில் வளர்ச்சி பெறுகிறார்கள்.

ஒரு குழந்தைக்கு எப்போது பல் முளைக்கிறது? ஒன்பது முதல் பதிமூன்று மாதங்களில் பல் முளைக்கிறது. ஒரு பெண் எப்போது பருவமடைகிறாள்? பதிமூன்று வயதுக்கு மேல் பூப்பெய்துகிறார்கள். சரியான பருவத்தில் பல் முளைக்கவும், பருவமடையவும் இன்னும் வாழ்க்கை முழுவதற்குமான

சக்தியை தன்னுள் அடக்கியதாக தாய்ப்பால் இருக்கிறது. அதேபோல கன்றுக்குட்டிக்கு பல் எப்போது முளைக்கிறது? பிறக்கும் போதே! பசுங்கன்று பருவமடைந்து எப்போது பால் கொடுக்கும்? ஒரே வருடத்தில்! கன்றின் வேகமான வளர்ச்சிக்கான சத்துக்களை பசும் பால் கொண்டுள்ளது. விரைவாக பல் வளரவும், பருவமடையவும் பயன்படும் செறிவான பசும்பாலை நம் குழந்தைகளுக்கு கொடுப்பதனால் இன்று அதன் விளைவுகளை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

உலகம் முழுவதும் பெண் குழந்தைகள் சிறிய வயதிலேயே பருவமடைகிறார்கள். எலும்புகளின் வளர்ச்சி வேகமடைந்து மிக உயரமாகவும் அல்லது வளர்ச்சி குன்றி குட்டையாகவும் காணப்படுகிறார்கள். கால் எலும்பு வளர்ந்து திருகி நடக்க முடியாதவர்களாகவும் குழந்தைகள் வளர்கின்றன. நடுத்தர வயதினருக்கு மூட்டு வலியும், எலும்பு தேய்மானமும் (எலும்பை சூழ்ந்துள்ள சவ்வும் தசையும் தொய்வு அடைவதை எலும்பு தேய்மானம் என்கிறார்கள்) முதுகுத்தண்டு வலியும் ஏற்படுகின்றன. இன்னும் நோய்களின் பட்டியல் நீண்டு கொண்டே இருக்கும்.

இங்கு ‘பசும்பால்’ என்று நாம் அறிந்து கொண்டிருப்பது கிராமப் புறங்களில் வீடுகளில் வளர்த்து அதிலிருந்து கிடைக்கும் பாலைத்தான்.இன்று நகர்ப்புறங்களில் பால் வியாபாரத்திற்காக உருவாகியுள்ள பால் பண்ணைகளிலிருந்து கிடைக்கும் பாலையும், பாக்கெட்டுகளில் விற்கப்படும் பாலையும் ‘பசும்பால்’ என குறிப்பிட முடியாது. பசுக்களிடமிருந்து பாலை அதிகமாய்ப் பிரித்தெடுக்க ஆக்ஸிடோசின் (Accidosin ) என்ற ரசாயன ஊசி பண்ணைகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஊசியானது இயற்கைக்கு மாறாக பசுவிடமிருந்து பாலை வலுக்கட்டாயமாக பிரித்தெடுக்க பயன்படுகிறது. இப்படி பிரித்தெடுக்கப்படும் பாலில் ‘ஆக்ஸிடோசின்’ ரசாயனத்தின் பாதிப்புகள் காணப்படுகின்றன. இந்தப் பால் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று அரசின் ஆய்வுக் கூடங்கள் தெரிவிக்கின்றன. என்றாலும் சாதாரண பசும்பாலை விட இந்த ஆக்ஸிடோசின் பால் இன்னும் ஆபத்தானது!

அப்புறம் “பாக்கெட் பால்”. பாக்கெட் பாலில் அதன் கெட்டித் தன்மையை அதிகரிக்க மாவுப் பொருட்களையும்

பிறவற்றையும் கலக்கிறார்கள். இன்னும் பாலில் உள்ள சத்துக்கள் போதாதாம் கால்சியம், மினரல்ஸ்... என்று பலவித ரசாயனங்களையும் சேர்க்கிறார்கள். நீண்ட நாட்களாக இருப்பில் வைத்து விற்க வேண்டியுள்ள பாக்கெட் பாலில் கெடாமல் இருப்பதற்கான ரசாயனங்களும் சேர்க்கப்படுகின்றன. சாதாரண பசும்பாலையே நாம் நிராகரிக்க வேண்டிய அவசியம் உள்ளபோது வணிகரீதியான பண்ணைப்பாலையும், ரசாயன பாக்கெட் பாலையும் என்ன செய்யலாம்? நிச்சயமாக இவற்றைத் தவிர்ப்பது ஒன்றுதான் ஆரோக்கியத்திற்கு உகந்ததாகும்.

நாம் நம் குழந்தைகளை "சிறப்பு கவனிப்பு" என்ற பெயரில் எதுவும் செய்யாமல் இருந்தாலே போதும். நாம் உண்ணும் தினசரி உணவுகளே குழந்தைகளுக்கும் போதுமானது. குழந்தைகளுடைய உணவுமுறையில் அவர்கள் இயல்பில் நாம் குறுக்கிடாமல் இருப்பதே அவர்களுடைய ஆரோக்கியத்திற்கு நாம் செய்யும் உதவியாகும்.

**– திரு P.T. மேகநாதன், திருபுவனம்**

# ஓர் அன்பு வேண்டுகோள்!

நமது பெருமைக்குரிய கல்வி வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகள் அனைத்தும் ஆரம்பம் முதல் இன்றுவரை பொன்னன்–அமரன் ஆண்ட பூமியில், நமது நகரத்தார்கள் நலமோடும், வளமோடும் வாழ்ந்து வரும் பொன்னமராவதி நகரிலேயே இயங்கி வருகிறது. இந்நிலை தொடரவே இன்றைய கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகமும் விரும்புகிறது.

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழக அலுவலகம் இங்கேயே நிரந்தரமாக அமைப்பதற்கு பெருமனத்தோடும், தொண்டுள்ளத் தோடும் நிர்வாக அலுவலக கட்டடம் கட்ட இடத்தை நன்கொடையாக வழங்கி உதவ விருப்பமுள்ளவர்கள் வழங்கலாம் என தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களின் கொடைத்தன்மையை என்றென்றும் நினைவு கூறும் வகையில் போற்றி கௌரவிக்கப்படுவார்கள்.

**இப்படிக்கு,**

**தலைவர், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

மருத்துவம்

# சித்தரத்தையின் பயன்கள்

பூமிக்கு அடியில் மறைந்து இருக்கும் மருத்துவ குணம் நிறைந்த பல வேர்களில் சித்தரத்தையும் ஒன்று. இது கனமான நார்ச்சத்து வேராகவே இருக்கும். தமிழ் மருந்துக் கடைகளில் சித்தரத்தை பவுடராகவும், கிழங்காகவும் கிடைக்கிறது. இதன் மருத்துவப் பயன் அதிகம். சித்தரத்தையை அருந்தும் பானங்களிலும் பயன்படுத்தலாம். சித்தரத்தையைத் தட்டி துணியில் ஒரு சிறுமுடிச்சாகக் கட்டி குடிநீரில் போட்டு அருந்தலாம். நீரும் வாசனையாக இருக்கும். இஞ்சியைப் பயன்படுத்துவதைப் போலவே சித்தரத்தையையும் பயன்படுத்தலாம்.

சித்தரத்தையானது காரத்தன்மை உடையது. இது கோழையை (சளி) அகற்றும், பசியைத் தூண்டும். இதன் பொடியைத் தேனில் குழைத்துச் சாப்பிட சுவாசக் கோளாறு சரியாகும். தொண்டைச் சளி, மார்புச் சளி நீங்கும். செரிமானத்தைப் பாதிக்கும் கிருமிகளுக்கு எதிரி. குழந்தை மற்றும் பெரியவர்களுக்கு சித்தரத்தையைச் சுட்டு நாவில், வயிற்றில், உள்ளங்கை, பாதத்தில் தடவ வயிற்றுவலி, வேறு ஏதேனும் கோளாறு இருப்பின் குணமாகும்.

சிறிதளவு சித்தரத்தைப் பொடியை மிளகுத் தூளுடன் கலந்து கொதிக்கவைத்து ஆறிய பின் சிறிது தேன் கலந்து அருந்த இருமல், தொண்டைக் கரகரப்பு நீங்கும். சித்தரத்தை புற்றுநோயைக் குணப்படுத்துவதாக இங்கிலாந்து, ரஷ்யா போன்ற நாடுகளின் ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

சித்தரத்தையை மருந்தாக மட்டும் பாவிக்காமல் நம் வீடுகளில் சுக்கு, மிளகு பயன்படுத்துவதைப் போலவே பயன்படுத்தலாம். ரசத்தில், வத்தக்குழம்பு, சூஸ், பொரியல் அனைத்திலும் சிறிது கலந்து உணவாகப் பயன்படுத்தலாம். இதனால் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

## சித்தரத்தை களி:

சித்தரத்தையை பயன்படுத்தி களி செய்யலாம். சித்தரத்தைக் களி இருமல், காய்ச்சல், சளி, வயிற்றுப் புண், வாய்ப்புண் ஆகியவைகளுக்கு மிகவும் நல்லது. குளிர்காலத்தில் அடிக்கடி செய்து சாப்பிட ருசியாக இருக்கும்.

## தேவையான பொருட்கள்:

சித்தரத்தைப் பொடி 2 ஸ்பூன், புழுங்கல் அரிசி 200 கிராம், பெரிய தேங்காய் 1 மூடி, வெல்லம் 4 அச்சு, நெய் 4 அல்லது 5 தேக்கரண்டி, சுக்குப் பொடி 2 சிட்டிகை

**செய்முறை:**

அரிசியை 1 மணி நேரம் ஊறவைத்து கிரைண்டரில் நன்றாக அரைத்து எடுக்கவும். கல் கழுவிய நீரையும் வீணாக்காமல் பயன்படுத்தலாம். 4 அல்லது 5 டம்ளர் தண்ணீரில் அரைத்த மாவை கலக்கி அடுப்பில் வைத்து கைவிடாமல் கிளறிக் கொண்டே இருக்கவும். கெட்டியாக வந்தவுடன், வெல்லம் சேர்த்து 5 நிமிடம் கிளறவும். பிறகு நெய், சித்தரத்தைப் பொடி, சுக்குப்பொடி சேர்த்து கிளறி 5 நிமிடம் கழித்து இறக்கவும். சிறிது சூடாக சாப்பிட, ருசியான மருத்துவ குணம் நிறைந்த நேர்த்தியான களி தயார். இதனைக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி சாப்பிடுவர். ஆரோக்கிய வாழ்வே அழகான வாழ்க்கை!

## பூப்புனித நீராட்டு விழா



தஞ்சை நாஞ்சிக்கோட்டை சாலை கணபதி டிராவல்ஸ் உரிமையாளர் திரு G. விஜயன் - தமிழ்செல்வி இவர்களது மகள் **V. ஹரிணிக்கு** 04.09.2020 வெள்ளிக்கிழமை அன்று செபஸ்தியன் திருமண மண்டபத்தில் பூப்புனித நீராட்டு விழா இனிதே நடைபெற்றது.

**தகவல் : திரு ச.பெ.சொ. இளங்கோவன், தஞ்சாவூர்.**

உ



சிறுகுடி தெய்வத்திரு எம். சண்முகம் பி.இ.
அவர்களின் நல்லாசியுடனும்,
பொதுமக்களின் பேராதரவுடனும்
6-ஆம் ஆண்டாக வெற்றிநடை போடும்

# அர்ச்சனா ஜெனரல்ஸ்
# காளான்
## விற்பனை நிலையம்



**எங்களிடம் தங்கள் விசேஷத்திற்குத் தேவையான**



- பனீர்
- பட்டர்
- கோவா
- சீஸ்
- பால், தயிர்
- பேபிகார்ன்
- ஸ்வீட் கார்ன்
- ரெடிமேட் பூரி
- ரெடிமேட் புரோட்டா
- ரெடிமேட் சப்பாத்தி
- தண்ணீர் பாட்டில்
- ஐஸ்கிரீம்

**ஆர்டரின் பேரில் ஏற்பாடு செய்து தரப்படும்.**

S. பழனியப்பன் B.E., ✆ 90257 87637, 70107 91246



# அர்ச்சனா ஜெனரல்ஸ்
# காளான்
## நேரடி விற்பனை நிலையம்
### (மொத்தம் & சில்லரை விற்பனை)

தலைமை தபால் நிலையம் எதிரில், ST கொரியர் அருகில்,
ஸ்கீம் ரோடு, திண்டுக்கல் - 624 001.
E-mail : archanaagenералsdgl@yahoo.in

# 2018 - 2019ல் பெருந்தொகை வழங்கிய நன்கொடையாளர்கள் 31.03.2019

**மாபெருங்கொடை வள்ளல்கள் :**

1. திரு. **A.P. ஸேதுராமன் – விஜயலட்சுமி,** கோவை.
2. திரு. **செல்வன் R.M. செந்தில்,** பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. இராமநாதன் – சிவசக்தி** (செம்பதி) துபாய்.
4. திரு. **இராம. சூரியா சொக்கலிங்கம், – மகாலட்சுமி**
   திரு. **இராம. ஆதித்யா சொக்கலிங்கம்,** துபாய் (செம்பதி)

**பெருங்கொடை வள்ளல்கள் :**

1. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் – பாப்பா ஆச்சி,** மதுரை.

**கொடை வள்ளல்கள் :**

1. திருமதி. **இராம. லதா அவர்கள்,** நத்தம்.
2. திரு. **து. அரவிந்த் குமார் B.E., M.S., – பத்மா B.E.,** சென்னை.
3. தெய்வத்திரு. **STKR. சக்திவேல் – ராஜலெட்சுமி,** பொன்னமராவதி.

**வள்ளல்கள் :**

1. திரு. **M. பாலகிருஷ்ணன் – பானுமதி ஆச்சி,** சிங்கம்புணரி
2. திரு. **செ. ஆசை அலங்காரம் குடும்பத்தார்,** சிறுகுடி.
3. தெய்வத்திரு. **T. தேவதாஸ் செட்டியார் – சிவகாமி ஆச்சி,** நத்தம்.
4. திரு. **M.S. முருகப்பன்,** பொன்னமராவதி.
5. திரு. **சொ. முருகேசன் – கவிதா,** சிவகாசி.
6. திரு. **மு. சதாசிவம் – சக்தீஸ்வரி,** தஞ்சாவூர்.
7. திரு. **A. முருகன் – செல்வமணி,** நீடாமங்கலம்.

**6-12 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் நன்கொடையாளர்கள்**

1. **சிங்கம்புணரி மீனாட்சி நல்லதம்பி வலச்சேரிப்பட்டி தெய்வானை வள்ளியப்பன்** நினைவாக அவந பொதுநலச்சங்கம், பிரான்மலை.
2. தெய்வத்திரு. **மு.அ. பரமசிவம் செட்டியார் – அங்கம்மாள் ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் – பாப்பா ஆச்சி** குடும்பத்தார், மதுரை.
4. திரு. **தே.மா. பழனிச்சாமி செட்டியார் – பழ. சரஸ்வதி ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
5. தெய்வத்திரு. **தீ.பழ. பொன்னுச்சாமி செட்டியார் – அன்னமயிலி ஆச்சி** நினைவாக **A.P. ஸேதுராமன் – விஜயலட்சுமி,** கோவை.

**தங்கப்பதக்கம் வழங்கும் நன்கொடையாளர்கள் : 10ஆம் வகுப்பு**

1. முதல் கல்விக்காவலர் **தெய்வத்திரு. வெ.ராம. சுப்பிரமணியன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சி** குடும்பத்தினர், சென்னை.
2. **அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்,** கோவை.
3. திரு. **ஆ. ஆறுமுகம் – சாந்தி,** கோவை.

**12ஆம் வகுப்பு**

4. திரு. **அரு.சோம. சண்முகநாதன் – சிவகாமி,** தூத்துக்குடி.
5. திரு. **செ. இளவரசன் & திரு. நே. சரவணன்,** சென்னை.

# உலக உணவு திருநாள் - 16.10.2020
## சிறுதானிய சிறப்புணவு கவிதை

சிறுதானியம் உணவுகளில் சிறப்பான சத்துணவு
நறுந்தானியம் முன்னோர்கள் நல்வாழ்வின் நல்லுணவு
செறிவான சத்துக்கள் உள்ளடக்கிய ஊட்ட உணவு
மறுக்காதே நார்ச்சத்தும் உயிர்ச்சத்தும் உயருணவு

சுண்ணாம்பு சத்துநிறை கேழ்வரகு சுவையுணவு
புண்களையும் ஆற்றுகின்ற கம்பாகும் குளிருணவு
கண்நரம்பை வலுவாக்கும் வரகரிசி வரமுணவு
பிணிமூப்பை தள்ளிபோடும் பனிவரகு பேருணவு

மூட்டுவலி முறியடிக்கும் குதிரைவாலி முத்துணவு
காட்டும்புரதம் கணக்கின்றி தினையாகும் திடவுணவு
வேட்டுவைக்கும் நீரிழிவிற்கு சாமையது சிறப்புணவு
கூட்டும் எடையை குறைத்திடுமே சோளமெனும் சீருணவு

களியுடனே கூழதுவும் சாப்பிடவே சுவைக்கும்
உளுந்துடனே பணியாரம் இட்லிதோசை ருசிக்கும்
வலுசேர்க்கும் கொலுக்கட்டை பிட்டெனவே இனிக்கும்
எலும்புபலம் சிறுதானிய உருண்டைகள் கொடுக்கும்

**- கவி. கு. கணேசன், கோவை.**


**கொட்டாம்பட்டியில் ஓர் இனிய உதயம்**
**5.3.2020 முதல் - பேருந்து நிலையம் எதிரில்**



அதிசய கோயில்கள்

# திருவாஞ்சியம்

இறைவர் : அருள்நிறை வாஞ்சிநாதர் – ஸ்ரீ மங்களநாயகி



திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவராலும் பாடல் பெற்ற தலம். காசிக்கு சமமான தலங்கள் ஆறினுள் இதுவும் ஒன்று. திருமால், மகாலட்சுமி, எமன், இந்திரன், கங்காதேவி, அத்திரி முனிவர், பராசரர், பிரமன் ஆகியோர் வழிபட்ட தலம்.

திருமகளைத் தினையளவு காலமும் பிரியாதிருக்க விரும்பிய திருமால் சிவபூஜை செய்து பேறு பெற்ற திருத்தலமே 'ஸ்ரீவாஞ்சியம்' என்னும் திருத்தலமாகும். திருமாலைப் பிரியாதிருக்க திருமகள் வணங்கிய தலம் : ஸ்ரீவாஞ்சியம்' என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. (வாஞ்சித்து = விரும்பி) 'சூரியன்' தட்சன் நடத்திய யாகத்தில் கலந்து கொண்டதால் தன்னுடைய ஒளியை இழந்தான். திருவாஞ்சியம் திருத்தலத்திற்கு வந்து இத்தல இறைவரை வழிபட்டு தான் இழந்த ஒளியை மீண்டும் பெற்றான்.

கங்காதேவி இத்தலத்தில் வந்து வழிபட்டதால் இத்தலம் காசியிலும் வீசம் வாய்ந்ததாக போற்றி வணங்கப்படுகின்றது. எமன் வழிபட்டு பல புண்ணியங்கள் பெற்றான். இத்தலத்தில் இறப்போருக்கு எம வேதனை இல்லை. மேலும் இத்தலத்து பதிகத்தை பாராயணம் செய்து இத்தல இறைவர் வாஞ்சிநாதரை தரிசித்தால் எம வேதனை ஏற்படாது. இத்தலத்தை திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய பதிகத்தை பாராயணம் செய்தால் பிரிந்த கணவன் மனைவி ஒன்று சேர்வார்கள்.

நால்வராலும் பாடப்பெற்ற ஒரு சில சிவாலயங்களில் சிறப்பு பெற்று விளங்குவது ஸ்ரீவாஞ்சியம் தலமாகும். **திருஞானசம்பந்தர் தான் அருளிய திருக்கடைக்காப்பில்**
வன்னி கொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம்

பொன்னி என்ற சடையில் பொலிவித்த புராணனார்
தென்ன என்று வரிவண்டிசை செய் திருவாஞ்சியம்
என்னையாளுடை யானிடமாக உகந்ததே

என்று வாஞ்சிநாதப் பெருமானைப் போற்றியுள்ளார்.

**அப்பர் பெருமான் எமதர்மர் வணங்கிய பெருமான் இவர் என்பதை**

அருக்கன் அங்கி யமனொடு தேவர்கள்
திருத்துஞ் சேவடியான் திகழும் நகர்
ஒருத்தி பாகமுகந்தவன் வாஞ்சியம்.
அருத்தியால் அடைவார்க்கு இல்லை அல்லலே

என்று நெஞ்சம் நெகிழ்ந்துள்ளார்.

**சுந்தரர் பெருமான் தமது ஏழாம் திருமுறையில்**

பொருவனார் புரிநூலர் புணர்முலை உமையவளோடு
மருவனார் மருவார்பால் வருவதும் இல்லை நம்மடிகள்
திருவனார் பணிந்தேத்தும் திகழ் திருவாஞ்சியத்து உறையும்.
ஒருவனாரடியாரை ஊழ்வினை நலியவொட்டாரே

என்று வாஞ்சிநாதப் பெருமானைப் பாடியுள்ளார்.

திருவாஞ்சியத்தில் சீர்பெற இருந்து மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும் என்று ஸ்ரீவாஞ்சிநாதப் பெருமானையும் மருவார்குழலி அம்மையையும் (மங்களாம்பிகை) **தமது கீர்த்தித் திருவகலில் போற்றுகின்றார் மாணிக்கவாசகப் பெருமான்.**

கங்கை காசியை விட பல மடங்கு புண்ணிய தலம். கங்கை காசியில் 1 கலையுடனும் இங்கு 999 கலையுடனும் குப்த கங்கையில் வாசம் செய்கின்றாள். வாழ்க்கையில் ஒரு முறையாவது தரிசிக்க வேண்டிய தலம் ஸ்ரீவாஞ்சியம். கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை தரிசிப்பது மிகவும் சிறப்பு.

**அமைவிடம் :**

இத்தலம் குடவாசல் – நன்னிலம் பேருந்து சாலையில் உள்ளது. கும்பகோணம் – நாச்சியார் கோயில் – அச்சுதமங்கலம் – வாஞ்சியம். திருவாரூரிலிருந்தும் வரலாம்.

சிவாயநம திருச்சிற்றம்பலம்

**– திருமதி M.L.L. தனலெஷ்மி லெட்சுமணன்,பொன்னமராவதி**

# ஓய்வு

ஒரு தொழிலில் இருந்தோ, ஒரு வேலையிலிருந்தோ ஓய்வு பெறுவது என்பது நமக்கு ஆண்டவனால் ஆசீர்வதிக்கப்பட்டு தரப்படும் நேரம். சிலர் ஓய்வு பெற்றவுடன் சீவாத தலை, கிழிந்த பனியன், அழுக்கு வேட்டி என்று மாறி விடுவார்கள். ஷூ போடுவதை நிறுத்தி விடுவார்கள். நாம் செய்த வேலையை எப்படி மனதார விரும்பி நேசித்தோமோ அப்படி நமக்கான நேரத்தை நேசித்து செலவு செய்ய வேண்டும். பிடித்தது போல் நல்ல, அழகாய் உடை அணியுங்கள்.

ஒரு சிலர் ஓய்வு பெற்ற பிறகும் உடம்பில் சக்தி இருக்கும் வரை வேலைக்குப் போகலாம் என்று கையில் அதிகம் காசிருந்தும் மீண்டும் வேலையை எங்கோ தேடிக்கொண்டு தொடர்வதை மட்டும் பார்க்க முடிகிறது. அது ஏன் என்று மட்டும் புரிவதே இல்லை. மீண்டும் இந்தப் பணத்தை யாருக்காக துரத்துகிறீர்கள்? மூப்பிலும் தினம் உழைத்தால் தான் சோறு என்ற வாழ்க்கை சிலருக்கு மட்டும் சபிக்கப்பட்ட அல்லது சிறு வயதில் தவறு எங்கோ நடந்து விட்டதின் தொடர்ச்சியாக வேண்டுமானால் இருக்கலாம்.

ஆனால் பெரும்பாலானவர்களுக்கு அப்படிப்பட்ட நிலைமை இல்லை. இருந்தாலும் அந்தப் பணத்தை நோக்கி துரத்திக் கொண்டு ஓடுகிறார்கள். ஓய்வுக்குப் பின் நமக்கான வாழ்க்கையை இனியாவது வாழ்வோம். உங்களுக்குப் பிடித்த வேலையை சமயத்தில் செய்ய முடியாததை செய்யுங்கள். உங்களுக்கு குருவிகளுக்கு கூடு கட்டுதலோ, மரம் நடுதலோ ஆசையாக இருக்கலாம். உங்களுக்கு கதை, கட்டுரை ஆன்மீகம் இப்படி எதையாவது செய்யலாம்.

இதுவரை இடைவிடாது ஓடிய நாட்களில், பார்க்க முடியாத இடங்களைப் பாருங்கள். காலை உணவை நிதானமாய் ரசித்து உண்ணுங்கள். மதியம் இரவு நேரத்துக்கு நன்றாக செரிமானம் ஆகக்கூடிய உணவைச் சாப்பிடுங்கள். கொஞ்சம் நம்முடைய பழைய நண்பர்கள், உறவுகளுடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

இதில் அவர்கள் பேசவே செய்வதில்லை, நாமே பேசுகிறோம் என்று ஈகோ பார்க்க வேண்டாம்.

அதிகாலையில் எழுந்திருங்கள். வாய் விட்டு நிறைய சிரியுங்கள். உங்கள் ஒத்த நண்பர்களோ, பிடித்த கூட வேலை செய்தவர்களோடு மாதம் ஒரு முறையாவது மறக்காமல் எல்லாவற்றையும் பேசுங்கள் அல்லது அவர்களை நேரில் சந்தியுங்கள். மிக மிக நெருக்கமான நம்பிக்கையானவர் களிடம் மட்டும் உங்கள் சுகத்தையும் துக்கங்களையும் பகிருங்கள். அப்படி இருந்தால் துக்கம் ஒன்றுமில்லை என்று நமக்குத் தெரியும்.

மருத்துவ பரிசோதனைகளை தொடர்ந்து செய்து உரிய மருந்தை தவறாமல் எடுத்துக் கொள்ளுங்கள். நம் நண்பர்கள், நம் உறவினர்கள் எங்கோ ஒருவர் இறப்பார்கள். அடுத்து நாம் தான் என்று ஒருபோதும் பயப்படாதீர்கள். அந்த லிஸ்ட் கடவுளிடம் மட்டுமே இருக்கிறது. டாய்லெட் கதவுகளைப் பூட்டிக் கொள்ளாதீர்கள். தலையணைக்கு அருகில் மொபைல், டார்ச், சாவி இவைகளை வைத்துக் கொள்ளுங்கள்.

தெரியாதவர்களுக்கு கதவைத் திறக்காதீர்கள். சேர்த்து வைத்த பணத்திற்காகவோ, பென்ஷன் பணத்திற்காகவோ ஒன்று விட்ட, இரண்டு விட்ட உறவினர்கள் சொந்தம் கொண்டாடினால் காபி கொடுத்து அனுப்பி விடுங்கள். இருக்கும் பணத்தை சாமர்த்தியமாய் போட்டு வருமானத்திற்கு வழி செய்து கொள்ளுங்கள். **பேரக் குழந்தைகளுடன் விளையாடுங்கள். உங்களை அவர்களுக்குள் பார்க்கலாம்.**

வேலையை விட்டுத் தானே ஓய்வு பெற்றோம்? உலகத்தை விட்டா போய்விட்டோம். இல்லையே! அப்புறம் ஏன் கவலைப்படுகிறீர்கள்? இவை அனைத்தும் ஓய்வு பெற்ற பெரியவர்களுக்கு மட்டும் அல்ல... அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கும் சேர்த்துத் தான். ஓய்வு பெற்ற தங்களது பெற்றோர்களுக்கு அவர்களுக்கு உரிய மரியாதையையும், சுதந்திரத்தையும்... அவர்களின் ஓய்வில் எவ்வித

மன உளைச்சலும் ஏற்படுத்தாத வகையில் பெற்றோர்களின் உடல், மனநலன் கருதி பிள்ளைகளுடன்

நடந்து கொள்வது அவர்களின் வாழ்க்கையில் ஈடற்ற மகிழ்வையும், ஆரோக்யத்தையும் அளிக்கும்.

வாழ்வியல் போராட்டத்திற்காக ஓடிய ஓட்டத்தில்... பணி ஓய்வு என்பது அடிபணிந்து, சகித்து, பொறுமை காத்து, அவமானப்பட்டு, குடும்பத்திற்காக ஒரு சுமை தாங்கியாக, தங்களது வாழ்வை அர்ப்பணித்த ஒவ்வொருவருக்கும் மிச்சமிருக்கும் வாழ்க்கையை ரசிக்க இந்த சமூகம் நமக்களித்த வரம் இது.... இதையும் எக்காரணம் கொண்டும் மற்றவர்களின் சுயநலத்திற்காக இழக்காதீர்கள்!

எப்போதும் இறைவழிபாடு செய்யுங்கள்! நல்லது இனிதே நடக்கும்! இறைவனிடம் உங்களை ஒப்படைத்துவிட்டு உங்களது பணியை செய்து கொண்டே இருங்கள். நோய் நொடியின்றி நல்ல ஆரோக்கியத்தை இறைவன் கொடுப்பான்.

**ஓய்வு அனுபவிக்க வேண்டிய ஒன்று. அனுபவித்து உணருங்கள்.**

**– சுப. செல்வம், குரல் ஆசிரியர்**

வாழ்க வையகம்! உ வாழ்க வளமுடன்!!

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

மக்கள் நோயற்ற வாழ்வு வாழவும், நோய் வந்தால் விரைவாக குணம் பெற்று நலமுடன் வாழவும் வாழ்த்துகிறோம்.

வாழ்க வளமுடன்!

**ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்,**

**பஸ் ஸ்டாண்டு முன்புறம், பொன்னமராவதி - 622407**

**லயன் மு.வையாபுரி ராஜ்குமார், 98426 50806**

வாழ்க வளமுடன்!

**ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்**

127, முருகன் காம்ப்ளக்ஸ், கோவைபுதூர்

கோயமுத்தூர் - 42

**மு.கார்த்திக்** D.Pham., **Cell: 9842650506**

Prop.**வை.முத்துராமன்**, பொன்னமராவதி- 622407




1936

# ஆதிகாலத்து அலங்கார மாளிகை

பொன்னமராவதி | புதுக்கோட்டை

பட்டின் அற்புத படைப்புகள்

வர்ணதாரா

ஹேம்சத்வனி

நல்வாழ்த்துக்களுடன்...



**Sona Ram**
Managing Director
**ASR Chartered Accountants**
*Auditors & Business Consult ants*

**Sakthi Ram**
Managing Director
**ESAAR Business Solutions**
*Info-Tech & Mgt Consultants*


ASR AUDITORS & BUSINESS CONSULTANTS

Office # M01, Al Tawhidi Building, Khalid Bin Waleed Road, Bank Street, Bur Dubai,
P.O. Box 34722, Dubai, United Arab Emirates
Tel: +9714-3529941 / 3512340 Fax: +9714-3522824 E-mail: esaar@eim.ae

CH International (UK)

*Serving businesses from offices in Dubai, Singapore, India and all over the World*

Management Consultants

MEDINEXT GENERAL TRADING L.L.C.

EMCR FACILITIES MANAGEMENT L.L.C

Restaurant MCR Catering
MEENATSHI

TAMIL 89.4 FM


**Book Post - Printed Matter**

**To**

**From**

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளக்ஸ் பின்புறம்,
மெயின்ரோடு ரோடு, **பொன்னமராவதி,**
புதுக்கோட்டை மாவட்டம் - 622 407.


SURYA SVK Cell : 98421 24415